# இனி



## இந்த இதழில்......


சிறுகதைகள்.
* புதிய பரம்பரை .......................... - எஸ்.எம்.கோபாலரத்தினம்.
- இந்தியாவிலிருந்து.....
* ஏன் ? .................... - நரேன்.
- இலங்கையிலிருந்து......
* நீலக்காத்தாடிகள். ................................ - நாகதிலகன்.
- சுவிஸிலிருந்து .....
* எனக்கொரு..... ............ - அஜித்குமார்.
- பாரிஸிலிருந்து ......

கவிதைகள்.
* காக்கை நாய்ச்சவாரி
அன்னியப்பூனை. ............... - சோலைக்கிளி.
* எவரிலும் இளகுமனம் தமிழிற்கு.. .............. - தம்பா.
* வதையின் மொழி. ........... - கி.பி.அரவிந்தன்.
* விழித்திருப்பு. ........................... - சிவானந்தன்.
* தௌFக் Zய்யாD கவிதைகள். ................- தமிழில் : மணி.

* ஒரு அறிமுகம் : RENE MAGRITTE ஓவியங்கள். - வாசுதேவன்.
* மகாகவியின் அகலிகை : கதையுங் கவிதையும். ... - சி. சிவசேகரம்.
* கண்டதும் கேட்டதும் ............. - சௌமி.
* தம்பி நீ எங்கே ? .. .. - எம்.அரியநாயகம்.
* பகிர்வு .... ... ..... - கி.பி. அன்.
* குழந்தைகளுக்கான திரைப்படங்கள்
* சின்னச்சின்ன o o o o - தொகுப்பு : ஆர்.வசந்தகுமார்.
* 'ஓசோன்' வாயுப்படையில் சிதைவு. ....... - அசரீரி.



கணனி பதிப்பு : வனிதா.
: சுலக்ஷினி.
ஓவியங்கள் : சாம்சன்.
வடிவமைப்பு : புவனன்.

நன்றி.
முன்அட்டைப்படம் : MARXISM TODAY
பின்அட்டைப்படம் : IRCAM


தெரியத்தெரிய
தெரியாமை தெரியும்.
- கி. ராயநாராயணன்.


வெளியீடு:
கலை இலக்கிய வாசகர் வட்டம்.
பரிஸ்.

# ஓசை

காலாண்டிதழ்

1992

தை - பங்குனி

ஓசை 3
ஒலி 1

இதழ் 9

ஆசிரியர் குழு

இலக்கிய வாசகர் வட்டம் பாரிஸ்




தொடர்புகளுக்கு:

' OSAI ',
C/O S.THIRUCHELVAM,
20, RUE DE LA FOLIE MERICOURT,
75011 PARIS,
FRANCE.


☆

ஒரு யானையின் முதுகின்மேல்
ஏலாரனின் பிணம்
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
கைதட்டுதல் நாசமாய்ப்போக !
அந்தப் பெயருக்கு
ஒரே..ஒரு..கண்ணீர்த் துளியை
வழங்கப் போவது யார்?

• பராக்ரம கொடிதுவக்கு



முடிவற்று நீளும் நம்தேசத்தின் அவலங்கள் !

அவலங்கள் காரணமாய் வெளியேறியோரும், நம்மை அடியொற்றி வெளியேறத்துடிப்போருமாக, எண்ணிக்கை பெருக தாய்நிலம் ஏக்கத்தைச்சுமக்கிறது.

பெற்றதாயினைப் பரிதவிக்கவிட்டவர்கள்போல, வெளியேறிய நாமும் - எமது சமூகமும், சிதறி....அணிகுலைந்து....எட்டுத்திக்கும் எறிபட்டநிலையில், காலங்கள் உருள்கின்றன.

நாடோடிகளாய்ச்சிலரும், நாடுகளில் கலந்துவிடும்துடிப்பினில் சிலரும், எல்லாம்மறந்த மிதப்பினில் பலருமாக நாங்கள் !

தப்பித்து விட்டோமா ?

இல்லை. உண்மை பயமுறுத்துகிறது. அடுத்த சந்ததிபற்றிய கேள்வி மிரட்டுகிறது. வரலாறோ, ' ஏ சமூகமே நீ தற்கொலை செய்து கொள்ளப்போகின்றாயா ?' பதில் சொல்! சொல்!! எனத்துரத்துகிறது.

பதில் சொல்லியே ஆகவேண்டும்.

வெட்டி வீழ்த்தப்பட்ட மரமாயினும் வேர்களில் நம்பிக்கையுண்டு. அவை உரமானவையே! கையினில் இருக்கும் 'ஆயுதம்' தற்கொலைக்கானதல்ல. தற்காத்துக்கொள்ளவே. . சோர்வோ விரக்தியோ தேவையற்றது.

'குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டம்' வேண்டாம். விரிந்த தளத்திற்கு எம்மைப்பக்குவப்படுத்திக்கொள்வோம்.

வரண்ட மனங்கள் வளமாக கலைஇலக்கியத்தளங்கள் விரியட்டும் !

நேசம் நெருங்கிய அணுகுமுறைகள் திசையெங்கும்தெறிக்கட்டும்!

ஆசிரியர்குழு

## நம்மில் ஒருவன்

பராக்ரம கொடிதுவக்கு

நிறுத்து
நிறுத்து
அந்தச் சண்டையை நிறுத்து

ஏலாரா மன்னா
அந்த யானையை விட்டுக் கீழே இறங்கு
மன்னன் துட்டகமுனுவே
ஏலாரனுக்கு ஒரு நாற்காலியைக் கொடு.

O

இதோ இங்கே அவள்
ரப்பர் பால் வெட்டும் கூட்டத்துடன்
ரப்பர் மரங்களைச் சுற்றிச் சுற்றிச் செல்கிறாள்
அம்மா பால் கறக்கப் போயிருக்கிறாள்
சரசுவதி
அவளது முறுவலிக்கும் உதடுகள்
ஏலாரனின் புன்னகைக்கு ஒளியூட்டும்

தேயிலைப் புதர்களுக்குக் கீழே
கைகளில் வலியெடுக்க
காற்று விசிறியடிக்கும் மழையில் நனைந்தவாறு
வியர்வை முத்துக்களின் கீழ்
அவளது வெண்கலக் கண்கள் மிளிர
மௌனமாய்க் காத்துக் கொண்டிருக்கிறாள்
அவளது நாசித் துவாரத்தில்
மின்னும் மூக்குத்தி
நித்யகலா
ஏலாரனின் சகோதரி
சரசுவதி நித்யகலா

O

நாம் மெனிக்கங்கை நதியினிலே
ஒன்றாய்க் குளித்தோம்
சிறிபாதத்திலோ நாம்
ஒன்றாய் வழிபட்டோம்
நாம் பள்ளிக்கூடத்திலோ
ஒன்றாக இருந்தோம்
தோசைக் கடையில் நாம்
ஒன்றாக வடை சாப்பிட்டோம்
கதிர்காமத்தில்
எங்கள் அலுவலகத்தைச் சேர்ந்த சோமதேவிக்கு
சிவலிங்கம் தன் முகவரியைக் கொடுத்தான்.

ஏலாரன் துட்டகமுனு சண்டை!
துட்டகமுனுவுக்கு வெற்றிக்கு மேல் வெற்றி

ஒரு யானையின் முதுகின் மேல் ஏலாரனின் பிணம்
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
அந்தக் கைதட்டலை நிறுத்து
கைதட்டுதல் நாசமாய்ப் போக!
அந்தப் பெயருக்கு
ஒரே...ஒரு..கண்ணீர்த் துளியை
வழங்கப் போவது யார்?

அன்று இறந்தவன்
நம்மில் ஒருவன்...!
நமது ரத்தபந்தங்களில்
ஒருவன்...!

பழங்காலத்தில் இலங்கையிலிருந்த ஏலாரன் என்ற தமிழ் மன்னனுக்கும் துட்டகமுனு என்ற சிங்கள மன்னனுக்கும் நடந்த போரில் ஏலாரன் கொல்லப் பட்டான். இந்தப் போர் இரு மன்னர்களுக்கிடையே நடந்த போரேயன்றி இன அடிப்படையில் நடந்ததல்ல. ஏலாரன் பௌத்த சமயத்தை மதித்தது போலவே துட்டகமுனு சைவ நெறியை மதித்தவன். சிங்கள இனவெறியைப் பரப்பியவர் களே பிற்காலத்தில் அப்போரை இனங்களுக்கிடையே நடந்த போராகத் திரித்துக் கூறலாயினர்.

பராக்ரம கொடிதுவக்கு (parakrama Kodithuwakku) சமகால சிங்களக் சமகாலச்சிங்களக்கவிஞர்களில் மிகச்சிறந்தவராகக்கருதப்படுகிறவர். சிங்களப்ப ண்பாட்டுமரபிலுள்ள பிற்போக்குத்தனமான கூறுகளை விமர்சிப்பவர்.

நன்றி: மண்ணும் சொல்லும் மூன்றாம் உலகக் கவிதைகள்

*அடுத்த இதழில்......*

- *வேதனையான வேடிக்கை* - *அ. குமரன்.*
- *ஒரு விவாதத்தை நோக்கி........*
- *சிலுவை* - *கறுத்தான்.*
- *கொலை விசாரணை* - *புவனன்.*

# வெருட்டுகிறது 'ஓசோன்'



நாம் வாழும் பூகோளம் அழிந்துவிடுமா ?
அச்சம் பலமடைகிறது. தட்டிக்கழிக்க முடியாதது என்கின்றனர் விஞ்ஞானிகள்.
விண்கோள்கள் அனைத்தையும் வெற்றி கொள்ளும் மனிதமுயற்சிக்கு ஒரு சவால் !
மனிதன் தன் சொந்தவதிவிடத்தையே இழக்கும் அபாயம் !

அசரீரி.

. பதினான்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகளும் அமெரிக்க, ஜப்பானிய, நியூசிலாந்து விஞ்ஞானிகளும் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவுகள் கடந்த ஜனவரி 31ல் அறிவிக்கப்பட்டுள்ளது.

. வட துருவத்தின் மேலான ஓசோன் வாயுப்படையானது, பதினைந்து வீதம் சிதைவுற்று அழிந்துவிட்டது மாத்திரமன்றி, வரப்போகும் வசந்த கால ஆரம்பத்தில் முப்பது தொடக்கம் நாற்பது வீதம் வரையில் மேலும் பலவீனமுற்று சிதைவுறும் என்றும் இவ்விஞ்ஞான ஆய்வுக்குழு கருத்து வெளியிட்டுள்ளது. உயிர் வாழ்வதற்கு அவசியமான பிராண வாயு எனப்படும் (O2) இரண்டு ஒட்சிசன் அணுக்களினாலான மூலக்கூறுகளைக் கொண்டது.

. அதே போல் ஓசோன் வாயுவானது மூன்று ஒட்சிசன் அணுக்களினாலான மூலக் கூறுகளைக் கொண்டது. ஒட்சிசன் மனித வாழ்வுக்கு பயன்படுவது போன்று, ஓசோன் சூரியனில் இருந்து வெளிப்படும் உயிரின வாழ்வுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய அதி ஊதாக் கதிர்களை உறிஞ்சுவதன் மூலம் மனிதருக்கும் பிற உயிரினங்களுக்கும் துணைபுரிகின்றது.

. பூமிப்பந்தின் கவச உறையாக, உயிரின பாதுகாப்பு வளையமாக 3 மில்லி மீற்றர் தடிப்பையுடையதாக இவ் ஓசோன் வாயுப்படலம் விளங்குகின்றது.

. ஓசோன் வாயுப்படல சிதைவுக்கு, குளிர்சாதன பெட்டிகளிலும், வெப்பநிலை சீராக்கல் சாதனங்களிலும், மற்றும் எலக்றோனிக் தொழிலிலும் முக்கிய பதார்த்தமாய் பயன்படும் CFCL3 என்னும் இரசாயனமே முக்கிய காரணியென இனம் காணப் பட்டுள்ளது.

. வருடம் ஒன்றிற்கு 8 இலட்சம் தொன் CFC என்ற இவ் இரசாயனத்தை தொழிற்சாலை வெளியேற்றுவதனால் சுற்றாடல் சூழல் பழுதடைகின்றன.

. மூன்று குளோரியம் அணுக்களையும் ஒரு காபன் அணுவையும் ஒரு புளோரிய அணுவையும் மூலக்கூறாகக் கொண்ட CFC ஆனது சிறிதாயும் மெதுவாயும் நகர்ந்து பூமியை கவசமிட்டிருக்கும் உயர் வளிமண்டலத்துள் நுழையும் போது, அதி ஊதாக் கதிரினால் CFC யின் அணுக்கட்டமைப்பு அழிக்கப் பட்டு குளோரியம் அணுக்களை தன்னியல்பு நிலைக்கு தள்ளிவிடுகின்றது.

. தன்னியல்பான இக்குளோரிய அணுவோ ஓசோன் வாயுவின் கட்டமைப்பு சமநிலையை பாதிப்பதன் மூலம் சிதைவுறுவதற்கு காரணமாகின்றது. CFC யில் இருந்து தொடர்ச்சியாக தன்னியல்பை பெறும் குளோரின் அணுக்கள் இரசாயன மாற்றங்களால் ஓசோன் படலத்தின் அழிவை தீவிரப்படுத்துகின்றன.

. தனி ஒரு குளோரியம் அணுவானது சூரியனில் இருந்து வெளிவரும் அதிஊதாக் கதிரின் முன்னிலையில் ஒரு லட்சம் ஓசோன் மூலக்கூறுகளை அழிக்கவல்லது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

. இவை மட்டுமல்லாது கடந்த வருடம் பிலிப்பைன்ஸ் நாட்டில் வெடித்துப் பீறிய பினருபோ (Mount Pinatubo) எரிமலையானது பல லட்சம் தொன் கணக்கான தூசுப் படலத்தை வளி மண்டலத்துள் விசிறியதன் மூலம் வளிமண்டலத்திலுள்ள நைதரசன் ஒட்சைடுகளை இரசாயன மாற்று வடிவத்திற்கு உள்ளாக்கியது. இந்நைதரசன் ஒட்சைடுகள் குளோரின் அணுக்களின் தீவிரத்தன்மையை மட்டுப் படுத்த வல்லதாகும். இதனால் ஓசோன் வாயுப் படலத்தின் சிதைவுறும் வாய்ப்புகள் தீவிரம் பெற்றன.

. இவ்வகையில் பூமிப்பந்தின் வடதுருவப் பகுதியில் பலவீனமடைந்து வரும் ஓசோன் படலத்தினால் பாதிப்படையும் நாடுகளாக அமெரிக்கா, கனடா, ஐரோப்பா, ருசியா ஆகிய நாடுகள் அமைகின்றது. வடதுருவமானது ஆர்டிக் வலயமென அழைக்கப் படும் பனி உறைந்த பிரதேசமாகும்.

. ஓசோன் கவசத் தடுப்பின்றி வளிமண்டலத்துள் நுழையும் சூரியன் வெளிப்படுத்தும் அதிஊதாக் கதிரினால் புவியின் மேற்பரப்பு சூடாக்கப் பட்டு துருவப் பனிகள் உருகி, கடல் மட்டம் உயர்ந்து, பல பகுதிகள் நீருள் அமிழ்வதோடு இயற்கையின் சமநிலை மோசமாய்ப் பாதிப்படையும். அத்துடன் கான்சர் போன்ற நோய்கள் அதிகரிக்கவும் வாய்ப்பாகின்றன.

. பிரமாண்டமான கைத்தொழில் துறையில் CFC யை பயன்படுத்துவதும்,நவீன விஞ்ஞான தொழில் துறை வெளியேற்றும் இரசாயனக் கழிவுகளும், அணுஆயுத பெருக்கமும், அணுப்பரிசோதனை வெடிப்புகளும் வெளியேற்றும் நச்சு வாயுக்களுமே மனித குலத்தை அழிப்பதற்கு கங்கணம் கட்டி நிற்கின்றன.

. உலகை ஏப்பமிடத் துடித்த ஐரோப்பிய அமெரிக்க நாடுகளே இந்நாச விளைவுகளுக்கு முழுப் பொறுப்பாளிகளாவர். இரண்டாம் உலக யுத்தத்தில் யப்பான் மீது வீசப்பட்ட அணுகுண்டினால் இன்றைக்கும் புல்பூண்டும் முளைக்காத ஹிரோசிமா, நாகசாஹி இரசாயன அழிவின் சாட்சியங்கள்.

இப்போது ஓசோன் வாயுப் படலத்தில் சிதைவு.

# சிறுகதை

## நீலக்காத்தாடிகள்

நாகதிலகன்.

அவர்களது உடல் முழுவதும் வியர்வையில் பிசு பிசு என்று இருந்தது. ஒருவித வெப்பத்தை அந்தக்கட்டிடத்தின் தடிச்ச சுவர்களும் சீமெந்திலான கூரைகளும் தள்ளிக்கொண்டிருந்தன.

முகாமின் மறுமூலையில் பிலிப்பையா - ஊரில் சம்மாட்டி - முகாமிற்கு வந்து ஒருகிழமையிலேயே சொந்தக் காற்றாடி வேண்டிப் பூட்டிக்கொண்டார்.

மாரிமுத்துக்கிழவி அழுது வீரிடும் பேரக்குழந்தையைக் கொண்டு சென்று தானும் அந்த காற்றின் அரவணைப்பை பெற்ற எண்ணம் சுகமாகவே இருந்தது.

"ஆனால் எந்தநாளும் சரிப்படடுவராத விடயம் இது. அவங்களுக்கு புடிக்குமோ என்ற ஒரு பயமும் மனதை நிறைத்திருந்தது.

வியர்வையும் அவிச்சலும் மாரிமுத்து கிழவிக்கு மட்டுமல்ல அந்த முகாமின் வெப்பக் கொடுமையை சமாளிப்பதற்கு இரவில் கூட முகாமின் வெளிப்பகுதியில் உறங்குவதும் பகலில் அங்கிருக்கும் மரநிழல்களில் போய்க் கிடப்பதும் அவர்களின் வழக்கமாகிவிட்டது.

வெளியில் இருந்து அக்கட்டிடத்திற்குள் நுழைந்துவிட்டாலோ ஒருவித வெப்பநிலையை உணரலாம். சொற்ப நேரத்தில் உடுப்புக்கள் எல்லாம் நனையும் அளவிற்கு வியர்த்துவிடும்.

"இது தானியங்களைப் போடத்தான் ஓரிரு யன்னல்களைக் கூட உயரத்தில் வைத்து கட்டியிருக்கிறான். இதுக்குள்ள எங்களை போட்டிருக்கிறானே.." பலரின் மனம் வெறுப்புடனும் குமைந்து கொள்ளும். வார்த்தையாகவும் வெளிப்படும். " அட என்னடா கொஞ்ச நேரம் கூட இருக்கமுடியாது என்ன அவிச்சல் அவியுது..." என்று சொல்லும் நாட்கள் தான் கழிந்து கொண்டிருந்தன.

சிவகங்கை கலெக்டர் அலுவலகத்திலிருந்து உதவிமாவட்ட ஆணையாளர் என வெள்ளை மையால் எழுதப்பட்ட சாம்பல் நிற ஜீப் வண்டி உறுமிக்கொண்டு முகாமினுள் வந்து நின்றது. முற்றத்து தடித்த புழுதி பறந்து கரைந்து காற்றோடு கலந்தது.

அந்த வண்டியிலிருந்து நன்றாக உடுத்தி அழகாக காட்சி தந்த பெண் உதவிக்கலெக்டர் இறங்கினாள். இன்னும் வேட்டி, நீளகாற்சட்டை அணிந்த நாலைந்து ஆண்களும் இறங்குகின்றனர்.

கூட்ட ஒழுங்குகளை பார்வையிடும் தோரணையில் கலெக்டர்களும் வந்தவர்களும் பேசிக் கொள்கின்றனர்.

விசேட அதிகாரிதானோ என்று எண்ணியபலர் நிலைமையைப் புரிந்து கொண்டனர். சிறுசுகளின் கூட்டம் ஒன்று ஜீப்பைச் சுற்றிக் கொண்டது.

கலெக்டர் ஆட்கள் முகாமில் உட்பகுதிக்குச் செல்கின்றனர். அங்கு கலெக்டர் பெண் முகாமை சுற்றி பார்வையிடுகிறாள். தனக்கு முன்

தோன்றிய அகதி மக்களோடும் பேச்தொடங்கினாள்.
சற்று பெரிய கூட்டம் சேர்ந்து விட்டது விளையாடிச்சத்தம் போட்டுக் கொண்டிருந்த சிறுசுகளும் நெருங்கி வேடிக்கை பார்த்தன.
"ஏன்மா உங்களுக்கு எல்லா சாமான்களும் கொடுத்தாங்களா..? குவிந்து நிற்கும் மக்கள் மத்தியில் பெண்கள் அதிகம் நின்ற பக்கம் பார்த்து கலெக்டர் பெண் கேட்டாள். உடுப்பு, சட்டி பாய் இப்படிச் சில பொருட்களையும் குறிப்பிட்டுக் கொண்டாள்.
பக்கத்தில் நின்ற கீழ்மட்ட ஊழியர்கள் அகதிகள் என்னதான் சொல்லிவிடுவார்களோ என பரிதாபமாக பார்த்துக் கொண்டு நின்றனர்.
அந்த கலெக்டர் பெண் அடிக்கடி தனது கடிகாரத்தை பார்த்துக் கொண்டாள்.
மாரிமுத்துக்கிழவியின் மனம் காற்றாடி பற்றி கேட்டுப் பார்ப்பமோ என எழுந்துது. அந்த கூட்டத்தில் சொல்ல ஒரு மாதிரியாகவும் இருந்தது.
"சரியுங்க, அதிகாரி அவங்கெல்லாம் வாற நேரமாச்சு அவங்ககிட்ட எல்லாமே பேசிடுங்க.." சொல்லிக்கொண்டு கிளம்ப ஆயத்தமானபோது தான்
விஜயனின் வாயில் இருந்து சத்தம் சற்று தடுமாறி வெளிப்பட்டது.
"மேடம் இஞ்ச பாருங்க.." தனது சட்டையை இரண்டு பக்கமும் பிடித்துக் குலுக்கிக் கொண்ட அவன் தொடர்ந்தான். "இதுக்குள்ள எப்பவும் வியர்த்துக் கொண்டே இருக்குது .ஒரு நாலைந்து பெரிய 'பேன்' பூட்டிற்றா இருக்கலாம்..." கோரிக்கையொன்றை சொல்லிய திருப்தியில் அமைதியானான்.
கலெக்டர் பெண் சிரித்தாள் வியர்வை துளிகள் நெற்றியடியில் படர்ந்து இருந்தது. எல்லோரும் பதிலை எதிர்பார்த்தனர்.
மாரிமுத்து கிழவியும் அமைதியாக காதைக் கொடுத்தாள் எதுவுமே தெளிவாகவில்லை ஆனால் ஏதோ பேசப்படுவது கேட்டது.

"இப்ப மழைவெயில் கொஞ்சம் ரொம்பவும் தான் எறிக்கும் அதனால வேர்க்கும் அதற்கு உங்களுக்கு ஏசியா போட்டு தந்திரு வாங்க..." சற்றுச் சினமாகவே சொன்னாள்.
உதவி கலெக்டரை சுற்றியிருந்த கூட்டம் வழிவிட்டது. படிகளில் இறங்கினாள். வந்தவர்களும் இறங்கினார்கள். சிறிது நேரத்தில் ஜீப்வண்டி புழுதி கிளப்பிப் பறந்தது.
பத்து பதினைந்து நிமிடங்கள் கடந்திருக்கும். சிவகங்கை தாலுகா அலுவலகத்தின் வருவாய்த்துறையென வெள்ளை மையால் எழுதப்பட்ட சாம்பல் நிற ஜீப்வண்டி சற்று வேகமாக வந்து முகாமினுள் பிரவேசித்தது.
நாலைந்து பேர் இறங்கினர். இவர்கள் வருவாய்த்துறையின் கீழ்மட்ட ஊழியர்கள். அதில் கிராமத்து அதிகாரி, தலையாயி போன்றவர்களோடு இன்னும் சிலரும் காணப்பட்டனர்.
ஜீப்வண்டியின் பின்பக்கமும் இருந்து சிறிய மேசையொன்றும் அதன் விரிப்பும் நீலநிறக் காற்றாடிகள் ஐந்தும் இறக்கப்பட்டன.
அங்கு ஒரு கூட்டத்திற்கான ஒழுங்கிற்காக மண்டபம் போன்ற அந்த முகாமின் ஒரு மூலையில் ஒரு குடும்பத்தின் சாமான்கள் ஒதுக்கப்பட்டு மேசை போடப்பட்டது. நாலைந்து கதிரைகள் சுற்றி வைக்கப்பட்டன.
நீலநிற காற்றாடிகள் மேசையில் ஒன்றும் முகாமினுள் ஆங்காங்கே சுற்றிவர மின் இணைப்போடு பொருத்தப்படுகின்றன.
நீலநிற காற்றாடியின் சிறகுகள் சுழல தொடங்கின. வெள்ளைநிற கம்பிகள் சிறகுகளை பாதுகாத்துப் பளபளத்துக் கொண்டிருக்க அந்த மேசைக்காற்றாடிகள் திரும்பி திரும்பிச் சுழல்வது அழகாகத் தென்பட்டது.
முகாமின் சிறுசுகள் மொய்த்துக் கொண்டு காற்றின் அரவணைப்பில் லயித்தனர்.
மாரிமுத்துக்கிழவியின் இடத்திற்கு முன்பும் ஒரு காற்றாடி வியர்வையில் அவிந்து வீரிடும் பேரக்கு

ழந்தை கொடுப்புக்குள் சிரித்து காலாட்டிக் கையசைத்தது. குழந்தையின் தாயின் முகத்திலும் சந்தோசம், ஈக்கள் தூர விலகிப்போயின.

மாரிமுத்துக்கிழவியின் மனதில் ஆண்டவனை நினைத்து நன்றியும் மகிழ்ச்சியும் வார்த்தையாக வெளிப்பட்டது.

"வாற அந்தப் பெரியாளிட்ட நான் இதையும் சொல்லத்தான் புள்ள இருந்தனான். ஆண்டவனே மனம் இரங்கிற்றார் பாத்தியா.."

மருமகள் ராணி சற்று புரண்டு படுத்து சிரித்துக்கொண்டாள்.

முகாமின் உள்ளும் வெளியும் இது பற்றியே பேச்சு மத்தியான சாப்பாடு நிறைவாகிக் கொண்டிருக்க சிலர் மரநிழல்களில் சேரத் தொடங்கினர்.

அங்கு தொடர்பில்லாமல் பலவிடயங்கள் பேசப்பட்டது.

காற்றாடிக்கு வழிசெய்த அந்த கலெக்டர் பெண்ணை நல்லவள் என்ற பாராட்டு. "கலெக்டர் பொம்பிளை சினந்து சொன்னவ போல் இல்லை. உடனேயே ஒழுங்கு செய்திற்றா பாத்தீங்களா..."விஜயண்ணன் சொன்னபோது பக்கத்தில் இன்னுமொருவன் இப்படிச் சொன்னான் "பெரிய அதிகாரி வாறதால தான் இது கிடைச்சிருக்கு இல்லாட்டிக்குக் கிடைக்குமா.." அவன் சொன்னதைத்தான் பலர் சரியெனத்தலையாட்டினர்.

விசேட அதிகாரியின் வரவு பற்றி பலர் பேசிக்கொண்டனர். சாப்பாடு முடிந்ததும் பாயை சுருட்டி மரநிழலிற்கு ஓடிவரும் பலர் காற்றாடியின் பக்கத்தில் இன்று நிம்மதியாகத் தூங்கினர்.

மதியம் என இருந்த அதிகாரியின் வரவு மூன்றுமணியை நெருங்கும் போதுதான் தெருவில் தெரிந்தது. ஒரு வெள்ளை நிற கார் அரச கொடியை பொனட்டில் பறக்க விட்டு அடக்கமான வேகத்துடன் வந்து கொண்டிருந்தது. பின்னால் தாலுகா அலுவலக ஜுப்வண்டியும் வந்துகொண்டிருந்தது. மெதுவாக முகாமின் பிரதான கேற்றின் ஊடாகத் திரும்பி முகாமின் முன் பகுதியில் நிறுத்தப்பட்டது. ஜீப்பில் இருந்தும் காரில் இருந்தும்பலர் இறங்கினர். பொலிசார் கூடிவிட்ட அகதிகளை விலக்கிக்கொண்டு சலூட் அடித்து மரியாதை செய்தனர்.

காரில் இருந்து இறங்கிய ஒருவர் தூய்மையான வெள்ளையுடையில் காணப்பட்டார். வயது ஐம்பதைத் தாண்டியிருக்கும். ஏனையவர்கள் அவருடன் பணிவுடன் நடந்து கொண்ட விதம் அவர்தான் விசேட அதிகாரியென அங்கு கூடி நின்றவர்களுக்கெல்லாம் அறிமுகம் பண்ணியது.

அவர் பணிவுடன் முகாமினுள் அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு தாறுமாறாக இழுக்கப்பட்டிருக்கும் கொடிக்கயிறுகளை உயர்த்தி சிலர் பிடித்துக்கொள்ள அதிகாரி முகாமை சுற்றி பார்வையிடுகிறார். அவர் செல்லும் நாலுபக்கமும் நீலநிறக்காற்றாடிகள் வரவேற்றன.

அந்த அதிகாரி மேசையை நெருங்கும் போது நீலநிறக்காற்றாடியின் காற்றில் சட்டை அசைந்து கொள்கிறது.

மேசையின் நடுக்கதிரையில் அவர் அமர்ந்து கொள்கிறார். அருகில் இன்னும் சிலரும் அமர்ந்து கொள்கின்றனர்.

முகாம் மக்கள் மேசையின் முன்னால் குவிந்து கொண்டனர். அதிகாரியின் பேச்சிற்கு வசதியாக மக்கள் தரையில் அமர்த்தப்பட்டனர்.

விசேட அதிகாரி எழுந்து கொண்டார். அகதி மக்கள் அமைதியாயினர். அவர் பேசத்தொடங்கினார்.

வழமையான பாணியில் வணக்கம் சொல்லிய அவர் " நான் இன்று உங்களை பார்ப்பதில் சந்தோசமடைகிறேன். உங்களுக்காக நாம் பல வசதிகளை செய்ய உள்ளோம். எல்லாம் படிப்படியாக உங்களை வந்தடையும். தற்போதைய உங்கள் பிரச்சனையை யாரும் என்முன் சொல்லலாம். இப்படி சில வார்த்

தைகளை மட்டும் பேசிய அவர் நாற்காலியில் அமர்ந்து கொள்கிறார்.
அவர் நன்கு வியர்த்து காணப்பட்டார். கைக்குட்டையால் அழுத்தித் துடைத்துக்கொண்டபோது வியர்வையின் அகோரத்தில் அவஸ்தைப் படுவது தெரிந்தது.
அருகில் நின்ற கிராமத்து தலையாயி என்ன நினைத்தாரோ தெரியவில்லை முகத்தை திருப்பிக் கொள்வதைப்போல் திரும்பிப் பார்த்து காற்றை வீசிக்கொண்டிருக்கும் காற்றாடியின் பட்டினை அமுக்கி அதிகாரிக்கு நேராக காற்றைவிட சரி செய்தார்.
மக்கள் கூட்டத்தில் இருந்து சிலர் தமக்கு தரும் நிவாரணத்தை அதிகரித்துத்தரும்படியும் மேலும் குழாய்க்கிணறு சிலவற்றை ஏற்படுத்தித் தரும்படியும்,முக்கியமாகத்தமக்கு ஏதும் கூலிவேலைகளைப் பெற்றுத் தரும்படியும் கோரிக்கை விடுத்தனர்.
அனைத்திற்கும் தாம் உடன் ஆவன செய்வதாக சொன்ன அவர் தன்னோடு எடுத்து வந்த மண்ணெண்ணை அடுப்புக்களை ஒவ்வொரு அகதியாக வரும்படி அழைத்து வழங்கிக்கொண்டிருந்தார். அவரோடு வந்திருந்த புகைப்படக்காரர் போட்டோ எடுக்க தயாரானதும் போலிக்காக என்றாலும் அகதிகளைப் பார்த்து புன்னகை செய்த அவர் இப்போது கமராப்பக்கமே முகத்தை திருப்பிக் கொண்டார். கைமட்டும் மண்ணெண்ணை அடுப்பை எடுத்துக் கொடுத்துக் கொண்டிருந்தது.
மாரிமுத்துக்கிழவிக்கு வியர்த்துக் கொட்டும் அகோரம் தாங்கவில்லை நீலநிற காற்றாடிக்கு அருகில் எழுந்து சென்றுவிட்டாள். வியர்த்து நனைந்திருந்த உடலில் காற்றுப்பட இதமாக இருந்தது.
இருபது நிமிட கூட்ட ஆரவாரம் ஓய்ந்தது அதிகாரியின் கார் முகாமைவிட்டு சென்றது. பின்னால் வருவாய்த்துறையின் ஜீப்வண்டியும் பறந்தது.
ஐந்து காற்றாடிகள் சுவர் ஓரங்களில் பொருத்தப்பட்டிருந்தாலும் முகாமின் மண்டபம் போன்ற பகுதியில் காற்று தொட்டுக் கூட பார்க்கவில்லை பலர் நன்கு வியர்த்துக் காணப்பட்டனர். ஒன்றாக குவிந்த மக்கள் கூட்டமும் கலைந்து சென்றது.
கூட்ட ஆரவாரம் ஓய்ந்து ஒரு மணித்தியாலம் இருக்கும் மீண்டும் வருவாய்த்துறையின் ஜீப்வண்டி உறுமிக்கொண்டு முகாமினுள் வந்து நின்றது.
அந்த வண்டியில் ஒருசிலர் இறங்கினார்கள். அவர்கள் சற்று வேகமாக முகாமை நோக்கி நடந்து சென்றனர்.
அங்கு கூட்டத்திற்கென போடப்பட்டிருந்த மேசையின் விரிப்பை மடித்தனர். நீலநிறக்காற்றாடியின் மின் இணைப்பை துண்டித்தனர். அழகாக சுழன்றுகொண்டிருந்த அது தூண்டிலில்பட்டு துடித்து அடங்கும் மீனைப்போல சடசடத்து நின்றது.
மாரிமுத்துக்கிழவிக்கு எதுவுமே புரியவில்லை. மனம் ஏதோ நினைத்தது. முகாமினுள் இருக்கும் பலர் வேகமாக மூன்றாவது காற்றாடியின் மின்இணைப்பை துண்டித்து வயர்களை சுற்றிக்கொண்டிருந்தனர். சிறுசுகள் கழற்றி வயர்கள் பொருத்தப்பட்டிருக்கும் நீலநிற காற்றாடிகளை பரிதாபமாக பார்த்துக்கொண்டு நின்றனர். இன்னும் சில சிறுசுகள், அவர்கள் காற்றாடியை பிடுங்கி எடுப்பதை ஓடியோடிச்சென்று வேடிக்கை பார்த்தனர்.
கடைசியாக மாரிமுத்துக்கிழவியின் மின்இணைப்பும் துண்டிக்கப்பட்டது.
நீலநிறக்காற்றாடிகள் போட்ட காற்றின் இரைச்சல் ஓய்ந்தது. மெல்லிய காற்றின் தழுவலில் காலையாட்டிக் கையசைத்த மாரிமுத்துக்கிழவியின் பேரப்பிள்ளை திடீரென்று அரண்டுவிட அவள் தூக்கி நெஞ்சோடு அரவணைத்துக் கொண்டாள்.
தாலுகா அலுவலகத்தின் ஜீப் வண்டி முகாமைக் கடக்கும் சத்தம் மட்டும் 'கடகட' வெனக் கேட்டுக் கொண்டிருந்தது.

*

# வதைமொழி

- கு.பி.அரவிந்தன்.

தாங்கிக் கொள்வீரோ
உயிரின் வாதையை.

காற்றை உண்ணும்
மூச்சரவமின்றி
எதிரி வரவேங்கி
விழியில் இலக்காடும்.
கண்ணிமைப் பொழுதில்
மரணம் தொங்கும்.
அதனாலென்ன....
அது
இருத்தலின் மகத்துவம்.

உள்ளதைச் சொல்லென
நகக் கண்ணிடை
குண்டூசிகள்.....
எனக்குத் தெரியாதென....
பாலுறுப்பு விண்ணென வலிக்கும்.
மின்மினி பூச்சிதறும்
குதிக்கால் நரம்பில்
கந்தகத் தீப்பற்றும்.
தூ...! இதென்ன வாதை
உணர்வுகள் உயிர்க்கும்
கனவுகள் வளரும்.

இரும்புக் கம்பிகள்
முகத்தின் குறுக்காய்.
சூழும் சுவருள்
பார்வை முறியும்.
சுண்ணாம்பு
பூச்சுதிர்வில்
என்னென்ன சித்திரங்கள்.
இருளடைவினுள்ளும்
வண்ணத்துப் பூச்சிகள்.
சிறகசைத்து சிறகசைத்து
ஊரும் பாடலில்
என்னுயிர்க் கானம்.
சிறையென்ன? வதையென்ன?


மடிந்தவர்கள் பாக்கியவான்கள்.
மடியாதவர் அந்நியமாய்...

ஆன்மா கரைந்து
ஆளுமை சிதைந்து
வெழுத்து, விகாரித்து
உயிர் சூம்பி, உயிரின் வேர் சூம்பி
அம்மா....அம்மா....
சிதை இது.....வதை இது......

முகமுறிஞ்சி பெருத்தவரின்
பாதங்களில் தெண்டனிட்டு,
இறைஞ்சிப் பெற்ற
முகத்திரை
முண்டத்திற்கு மொட்டாக்கு,
இதிலென்ன குதுகலிப்பு
சவலையாய் நாமானதற்கா?

ஆகா.....ஆகா....
அகதிகள் நாமென்றே.....

# ஒரு அறிமுகம் : RENE MAGRITTE ஓவியங்கள்.



- வாசுதேவன்.

. 1898 ம் ஆண்டு நவம்பர் 21ம் திகதி தையல் துறையில் ஈடுபட்டிருந்த சாதாரண குடும்பமொன்றில், பெல்ஜியத்திலுள்ள லெசின்ஸ் கிராமத்தில் பிற்காலத்தில் பிரபல ஓவியரான Rene Magritte பிறந்தார். 1912ல் தாயாரின் தற்கொலைக்குப் பின், பராமரிப்புப் பெண்களினால் வளர்க்கப்பட்ட Rene ன் ஆர்வங்கள் ஆரம்ப கால கட்டத்தில் தெய்வீக வழிபாட்டில் திசைதிரும்பியிருந்தன. ஒருநாள் சிறுமியொருத்தியுடன் சுடலை ஒன்றில் உலாவும் போது அங்கே நின்று ஓவியம் வரைபவன் ஒருவனைச் சந்தித்த போது முதன்முறையாக ஓவியத்தைப் பற்றிய ஒரு புத்துணர்வு பெற்று அத்துறையில் ஈடுபட வேண்டும் என்ற இலக்கை ஏற்றுக் கொள்கிறார். 1915ல் தனது முதல் ஓவியத்தை முழுமையாக முடிக்கும் Rene க்கு பல ஓவியர்களின் நட்பும் ஆதரவும் கிடைக்கின்றது. 1922ல் திருமண வாழ்வில் ஈடுபடும் இவ்வோவியர் வாழ்க்கையை ஓட்டுவதற்காக விளம்பர ஓவியம் வரைவதற்கு ஒரு தனியார் நிறுவனம் ஒன்றில் வேலைக்கமரும் அதேவேளையில், ஓவியம் பற்றிய புத்தகங்களையும் எழுதினார்.

. விரைவிலேயே ஓவியத்துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திய Reneன், ஓவியக் கண்காட்சிகள் ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் நடைபெற்று ஓவிய உலகின் முதன்மை நட்சத்திரங்களில் ஒன்றாக Rene Magritte பிரகாசிக்க ஆரம்பித்தார்.

. தனியாக ஓவிய உலகில் மட்டுமன்றி, இலக்கிய உலகிலும் நெருக்கமான தொடர்பு கொண்ட இவ்வோவியர் 15 ஆகஸ்ட் 67ல் மரணத்தைத் தழுவிக் கொண்டார்.


. அண்மையில் பாரிசில் இவரது ஓவியக் கண்காட்சி நடைபெற்றது.

. ஒரு உருவகத்தைச் சொல்லால் மாற்றீடு செய்யலாம். ஒரு சொல்லை ஒரு உருவகத்தால் மாற்றீடு செய்யலாம். ஒரு பொருளைக் குறிப்பிட ஒரு பெயரை உபயோகித்து, இச்சொல்லை விட இப்பொருளுக்குச் சிறந்த பெயர் இருக்க முடியாது என்று எண்ணும் போதிலும், அப் பெயர் பொருளுக் குப் பொருத்தமற்றிருக்கலாம்.சில பொருட்களுக்குப் பெயரே தேவையற்றிருக்கலாம். சிலவேளைகளில் ஒரு பொருளின் பெயர் அப் பொருளின் வடிவத்தை நேரடியாகத் தாங்கி நிற்கலாம்.

. நிஜம் தனது உருவகத்தை அல்லது வடிவத்தைச் சந்திக்கின்றது. அது தனது பெயரைச் சந்திக்கின்றது. ஒரு பொருளின் பெயரும் அதன் வடிவமும் சந்திக்கின்றன.

. ஒரு பொருளின் நிஜம், உருவகம், பெயர் என்ற முப்பரிமாணத்தில் ஏதாவதொன்றை அகற்றுவதன் மூலம் மாயைத் தரிசனம் படைக்கும் வல்லமை Magritteன் ஓவியங்களின் இடைவிடாத தனித்தன்மையாகத் தோன்றுகின்றது. "இது ஒரு சுங்கான் அல்ல" என்ற ஓவியம் இதற்கு ஓர் ஈடிணையற்ற எடுத்துக்காட்டாகும்.

. "முகமூடியகன்ற பிரபஞ்சம்" என்ற ஓவியமோ பார்ப்பதற்குப் பாடம் கற்றுக்கொடுக்கும் ஓவியனின் தீவிர முயற்சி. பார்ப்பவனின்



பார்வையானது அவன் பார்க்கும் வடிவத்திற்குரிய பொருளின் சூட்சும உண்மையைத் தேடியலைய வேண்டிய நிர்ப்பந்தத்தை உருவாக்கும் அற்புதமானவோர் ஆணித்தரத்தை இவ்வோவியம் அடைகாத்து நிற்கின்றது.பசுந்தரை, பாழடைந்த வீடு, தூரத்து மலைச்சாரல், விழிகளைச் சற்றே உயர்த்திப் பார்த்தால் நீலவானம், வெண்முகில், புதிய வடிவம். புறநிலையான புது நோக்கில் பிறந்து வரும் புதிய தத்துவங்கள்.. Magritte ன் ஓவியங்களுக்கு விளக்கமளிப்பதென்பது, ஒருவகையில் அபாரமான ஆபத்தானவொன்றாகும். ஏனெனில் Magritte ன் ஓவியங்கள் மொழியின் தோல்வியால் தோன்றியவை. அப்படியென்றால் எவ்வாறு அவற்றை மொழியூடாக விதந்துரைக்க முடியும்?.... பார்த்து விட்டேன் என்று, பார்த்ததை மீண்டும் பார்க்க முனைகையில் பார்த்தது எப்போதுமே பார்த்திராததாக பரிணமிக்கின்றது.

. "அலெக்ஸாண்டரின் வேலைகள்" என்ற ஓவியம் ஆயிரமாயிரம் விளக்கங்களுக்கு அநுமதியளிக்கின்றது. வெட்டப் பட்ட மரத்தின் அடிப்பாகம் (பக்:4) தனது வேரால் கோடாரியை இறுகப் பிடித்து வைத்திருக்கின்றது. சுய அழிப்பின் இரகசியமாயா? பழிவாங்கச் சூழுரைக்கும் அப்பாவின் அலறலா? கோடாரி கைதியான போது மரத்தை வெட்டியது யார் என்ற கேள்விக்குறியா?. இது இதுதான் என்று வரையறுக்க முடியாத அவலம். ஆனால் மனித மொழிகளைத் தாண்டி மனத்துக்கு மனம் மர்மத்தைத் தூதுவிடும் இவ்வோவியம், இவ்வடிவம் தியானத்தின் பால் உற்றுணர வேண்டிய ஒன்றாகவே தோன்றுகின்றது.


. எதிர்காலம் பார்வைப் புலத்தை இழுந்து வந்து நிகழ்காலத்தில் நிறுத்தும் இரண்டு ஓவியங்களான "தெரிந்த பார்வை" யும் "தெரிவுறும் நெருக்கம்" மும் பார்வைக்கு இருக்கக் கூடிய கால நிபந்தனையற்ற தன்மையை விளக்கி நிற்கின்றன. கூண்டிற்குள் பறவைக்குப் பதிலாக முட்

டையைக் காட்டும் ஓவியம் தனியே காலநிபந்தனையற்ற பார்வையை மட்டும் காட்டாது, உருவத்தின் பின்னால் ஒளிந்திருக்கும் பிறப்பின் இரகசியத்தையும் சித்தரிக்கின்றது. இதே வகையான சித்தரிப்பையே "தெரிவுறும் நெருக்கம்" உம் உருவாக்குகின்றது. மேசையிலுள்ள முட்டையைப் பார்த்து அதனிலிருந்து உருவாகப் போகும் பறவையை வரையும் ஓவியன் வடிவத்திற்குப் பின்னால் உள்ள வாழ்க்கையைப் படம் பிடிக்கின்றான்.

. இலையை மரமாக்கி, இலை நரம்புகளைக் கிளைகளாக்கி, மரத்துள் இலையைக் காட்டி, இலைக்குள் மரத்தைக் காட்டி, பகுதிக்குள் முழுமை முக்காடு போட்டுக் கொண்டிருப்பதைக் காட்டுவது, Magritteக்கே உரித்தான நிரந்தர ஜாலவித்தை. சிந்தனையை அதன் சிறையிலிருந்து விடுவிப்பதும், சிந்தனா நிபந்தனைகளை நிறங்களால் நிரந்தரமாக மாற்றுவதும், பார்நைப் புலத்தில் அகப்படும் அனைத்தையும் பரிசோதனைக்குட்படுத்தி வரைந்து, தூரிகையால் துலக்கி, உள்ளுணர்வு மாற்றுருவின் புறப் பாய்ச்சல்களை முடுக்கி விடுவதும் இவ்வோவியரின் தனித் தன்மையாய் அமைகின்றது.



. இருத்தலுக்கும் இல்லாமைக்கும் இடையில் எழும் போலி இடைவெளிக்கு வடிவம் கொடுக்கும் கணப்பொழுதுப் போராட்டத்தைக் கையும் மெய்யுமாக பிடித்து நிறுத்தும் "புலத்தின் திறப்பு" என்ற ஓவியமோ கண்ணாடியொன்று தன்னூடு புகவிட்ட காட்சியைத் தானுடைந்த போதிலும் தேக்க எண்ணும் முயற்சியைக் காட்டுகின்றது. காட்சியைக் காண்பவன் மூலம் படைக்கும் நுணுக்கம். இடம், காலம், இல்லாமை இருத்தலின் தொடர்புகளைப் புலப்படுத்தும் துல்லிய நுணுக்கங்கள். மேலோட்டமான பார்வையைத் துண்டிக்கும் அதேவேளையில் ஆழமான, கூர்மையான பார்வையை இன்னோர் பரிமாணத்திற்குள் இட்டுச் செல்லும் தீவிரம் செறிந்த ஓவியம்.



. அனைத்திற்கும் எதிர்வாதம் உண்டு. எதிர் வாதம் என்பது எவ்வளவு வேடிக்கையானதோ அவ்வளவுக்கு விளையாட்டானதும் கூட. இலகுவான ஆய்வு. இலகுவான நியாயம். இலகுவான ஆனாலும் இறுக்கமான ஓவியம். விரிகுடை மேல் ஒரு கிளாஸ் தண்ணீர். குடையில் இருப்பது பெரும் புயல், வெள்ளப் பெருக்கு. கிளாஸில் இருப்பது தாகம், குடிநீர். தண்ணீர் தன்னில் சுமந்து நிற்கும் தவிர்க்க முடியாத எதிர்வாதம். அணுவில் இருந்து அண்ட சராசரங்களிலெல்லாம் அடர்ந்து கிடக்கும் எதிர்வாதத்தை சாதாரண இரண்டு பொருட்களின் அசாதாரணச் சேர்க்கையால் விளக்குகின்றது இவ்வோவியம்.

# கண்டதும் கேட்டதும்

கண்டது 11

பிரெஞ்சுத் தொலைக்காட்சியில் இப்போதெல்லாம் ஸ்ரீலங்கா அடிக்கடி பார்வைக்கு வந்து போகின்றது. இலங்கை, இலங்கை மக்களின் கலை கலாச்சாரம் என்று ஒளிபரப்பப்படும் நிகழ்ச்சிகள், அமைதி நிலவு வது போலான தோற்றம் விமர்சனத்துக்குரியன.
இவை ஒரு புறமிருக்க தொலைக்காட்சி நிகழ்ச்சியி னைப் பார்த்த நண்பனொருவன் இவ்வாறு விசனப் பட்டுக் கொண்டான்.

".....எட, என்ர...இவ்வளவு கலைத்துவமிக்க ! அழகிய நாட்டை , அந்நிய தேசத்திலிருந்து அந்நிய மொழிக்கூடாக அரைகுறையாக அறிந்து ரசிக்கும் நிலைமை...! இது யார் செய்த குற்றம்?"
"உயிரையும் பணயம் வைத்து ஆண் பெண் சின்னஞ் சிறுசுகள்
வேறுபாடின்றி,உடல் வருந்த உழைக்கும் அந்த ஜீவன் கள்! அந்த அப்பாவி முகங்கள்! இவைகளையா வன்ம எதிரிகள் என எனக்குள் வைரித்துக் கொண்டேன்?"
நெஞ்சை வருடும் கேள்விகள் நண்பனின் இதயத் தைத் துளைத்தன.

கண்டது 12

பிரான்சில், அண்மைக்காலத்தில் அரசியல் தஞ்சம் கோரிய இலங்கைத் தமிழர்களில் அநேகருக்கு எது வித விசாரணையுமின்றி அகதி அந்தஸ்து வழங்கப்பட் டது. இதன்
பின்னணி மர்மமாக இருப்பினும் அநேக இலங்கைத் தமிழர்கள்
'நிரந்தர' விசா வசதி பெற்றுக் கொண்டது ஒரு விதத் தில்
மகிழ்ச்சியான செய்திதான்.
ஆனாலும் ஒரு தமிழன்பர் தனது மனக்குடைசலை இவ்வாறு வெளிப்படுத்திக் கொண்டார். "...இந்தக் காட் ஐ கூப்பன் காட் குடுக்கிற மாரியல்லே குடுத்துத் துலைக்கிறாங்கள்...ச்சீ..காட்டின்ர மதிப்பே இல்லா மல் போச்சு.."
'சுயநலப் புத்தி, அதுக்கும் அங்கால இன்னொரு நாட் டில அகதி யா இருக்கிறதில ஒரு மதிப்பு-அதுக்கொரு அந்தஸ்து ..!' கேட்டுக் கொண்டிருந்த நண்பர் எங்கு போய் முட்டுவதென்று தெரியாது அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

- சௌமி.

கேட்டது 13

ஐரோப்பிய நாடுகளில் இயந்திரங் களுடன் தொழில் புரிபவர்கள் தமது உறுப்புக்கள் ஒவ்வொன்றிற் குமே காப்புறுதி செய்து கொள்வது வழக்கம். வேலை செய்யும் போது கை, கால் விரல்கள் துண்டிக்கப்பட் டால் எதிர்காலம் கருதி இக்காப்பு றுதிசெய்வது கட்டாயமாகிறது.
அண்மையில் நண்பரொருவரின் விரலையும் இயந்திரம் கடித்துக் குதறியது. மரண அவஸ்தை, விரல் இல்லை. நண்பரும்
காப்புறுதி செய்து வைத்திருந்தத னால் ஒரு தொகைப் பணம் கிடைத் தது.
தனது தேவைக்குச் சிறு தொகை பணத்தை எடுத்துக் கொண்ட
நண்பர் மிகுதியை நாட்டிலிருக்கும் தன் மனைவிக்கு அனுப்பி வைக்க, மனைவியிடமிருந்து இப்படிக் கண் டிப்பான பதில் வந்தது."....இஞ்ச வீடு திருத்திக் குறையில கிடக்கிறது தெரியாதே! இனிமேல் இப்படி ஏதாவது காசு வந்தால் முழுவதை யும் அப்பிடியே அனுப்பி வைச்சுப் போடுங்கோ."

கண்டது 14

பாரிஸ் வீதிகள், மெத்ரோக்களினுள் வைன் கேஸ் களின்
தொகை வரவர அதிகரித்துக் கொண்டே வருகின்றது.
வைன் போத்தல்கள்... அழுக்குப் படிந்த உடுப்புகள்,
பிய்ந்து போன கேசரம்... யாருக்கும் தொந்தரவு செய்யாத
சுபாவம். குடிப்பது, அந்த இடத்தி லேயே படுப்பது, சிறுநீர்
கழிப்பது கூட அநேகவேளைகளில் அதிலேதான்.
பிரெஞ்சு அரசாங்கம் நாடு அசுத் தமடைதல் பற்றிக் கவலை
கொண்டாலும் இவர்கள் பற்றி ஒரு கௌரவமான அக்கறை கொள்வ தைக் கவனிக்க முடிகிறது. இரண் டாம் உலகயுத்தத்தில்
மனைவி பிள்ளைகளை இழந்து புத்தி சுவாதீனமற்ற நிலையில்
இருப்பவர்களே இவர்களில் அநே கர் எனவும் அறியமுடிகிறது.
ஒவ்வொரு இரவும் குறிப்பிட்ட இடங்களில், குறிப்பிட்ட
நேரத்தில் வான்கள் மூலம் உணவுப் பொதிகள் கொண்டு வரப்பட்டு இவர்களுக்குப் பரிமாறப்படுகிறது.
வாரத்தில்
ஒருமுறையாவது நகர காவலர்கள் இவர்களைப் அழைத்து,
சிலவேளைகளில் கஷ்டப்பட்டுப் பிடித்து இழுத்து சுத்தப்படுத்தி
சுத்தமான ஆடைகள் அணிவித்து விடுகின்றனர்.
இவ்வகையான வைன் கேஸ் களாக தமிழ் இளைஞர்கள் சிலரும்
மாறியிருப்பது அதிர்ச்சியான உண்மை. வாழ்கை நெருக்கடி அல் லது வேறேதாவது காரணங்களி னால் பாதிக்கப்பட்டு இப்படி ஆகி யிருக்கிறார்கள்.பிரபல யாழ் கல் லூரியொன்றின் கிரிக்கட் துறை யினூடு பிரகாசித்த இளைஞன் ஒருவனும் இவர்களில் ஒருவன்.
ஓர் இரவு மெத்ரோ ஓடிக் கொண் டிருக்கிறது . அந்த இளைஞனும் நின்றபடியே பயணித்துக் கொண் டிருக்கிறான். அதே ஆடைகள், இருந்தாலும் மோசமாக இல்லை. அருகில் நின்ற வெள்ளை மனித னுக்கு அரியண்டமாக இருந்திருக்க வேண்டும். ஏதேதோ பேச இளைஞன் அப்பாவிப் பார்வை யொன்றை வெள்ளையன் மேல் எறிந்தான். தமிழ் மகனின் அப்பா விப் பார்வைக்கு இங்கு அர்த்தங்
கள் தான் வேறோ? இருக்கலாம். திரும்பவும் இளைஞன் எறிந்த அப் பாவிப் பார்வையால் ஆத்திரம டைந்த வெள்ளையன் முஷ்டியை மடக்கி ஒரு இடி இடிக்க இளை ஞன் மெத்ரோ மூலையோரம் கிடந் தான்.

ஏழு வயது மட்டுமே நிரம்பிய தமிழ்ச் சிறுவன். பிரெஞ்சு ஆரம்ப பாடசாலையொன்றில் பயின்று கொண்டிருக்கிறான். வகுப்பில் பயிலும் பல்நாட்டு நண்பர்களுள் இவனைக் கவர்ந்த இறுக்கமான நண்பன் ஒரு வியட்னாமியச் சிறு வன்தான்.

அடிக்கடி அச்சிறுவன் பற்றித் தாயுடன் கதைத்துக் கொள்வான். ஒரு நாள் தனது அமியைவீட்டை கூட்டி வரப்போறன்

என்று தாயிடம் கேட்டு விட்டு மாலை பாடசாலை முடிந்ததும் கூட்டி வந்தான்.

வீடு வந்ததும் "அம்மா அவனுக்குச் சாப்பாடு குடுங்கோ குடுங்கோ" என்று ஒரே கரைச்சல். விருந் தோம்பலுக்குப் பெயர் போனவர் கள் பாரிஸ் தமிழீழர்கள். சாப்பாடு கொடுப்பதில் பிரச்சினையில்லை. ஆனால் நேரம் பிழையான நேரம். இருந்தாலும் மகனின் வற்புறுத்த லுக்காகச் சாப்பாடு கொடுக்க அந் தச் சிறுவனும் சந்தோஷத்துடன் சாப்பிட்டு விட்டு


சிறிது நேரம்விளையாடிய பின் பிரிந்தான்.

தன் நண்பனை அனுப்பி விட்டுத் திரும்பிய மகனை அன்பும்

பரிவும் பெருமையும் ஒருங்குசேரக் கட்டி அணைக்கத் தயாரான தாயை நோக்கிய சிறுவன் "அம் மா!அவன் பாவமம்மா!அவன்ர அப் பாவும் அம்மாவும் சண்டை பிடிச் சுக் கொண்டு பிரிஞ்சிருக்கினம். இவன் அம்மாவோட..."

தாயால் கதைக்க முடியவில்லை. மகனை இறுக அணைத்துக் கொண் டாள்.

நாளொன்றுக்குப்பல ஆயிரக்கணக்கில்
மக்கள் பட்டினியால் இறந்துகொண்டிருக்கையிலும்.....



சிறுகதை

# புதிய பரம்பரை

எஸ்எம்ஜி



....வீட்டுக்குள் கால்வைத்ததுமே விறாந்தையில்கிடந்தசாய்மனை க்க திரையை இழுத்துப்போட்டு 'முருகா' என்றுசாய்ந்தார் முத்தையர்.

...அவரின்குரல் அந்தமுருகனுக்குக் கேட்டதோ இல்லையோ, அடுக்க றைக்குள்ளிருந்த அவர்மனைவி பார் வதிக்குத்தெளிவாகவே கேட்டது.

...குசினுக்குள்ளிருந்தபடியே விறாந் தையை எட்டிப்பார்த்த பார்வதிக்கு சால்வையால் முத்தையர் துடைத்துக் குகெள்வதுடன் கவலையின் சுவடு களையும் துடைத்துக்கொள்ள எத் தனிப்பது போற்தோன்றியது. ..."இந் தவெயிலுக்குள்ள ஒவ்வொருநாளும் 'டியூட்டி' மாதிரித்தபாற்கந்தோருக் குப்போய் அலையவேண்டுமே ! தபால்வந்ததால் வீட்டுக்கு வரும் தானே !" என்றுபார்வதி குரல்கொ டுக்கவும்

..."எங்கடை நாட்டிலதான் மாமி தபாற்கந்தோர், இங்கை 'போஸ்ட் ஆபீஸ்' என்று மருமகள் இடைமறித் துத்திருத்தம் சொன்னாள்.

..."ஓமோம் போஸ்ட் ஆபீஸ் என்றால் தான் தமிழ்நாட்டிலதமிழ்! என்று எரிச்சலுடன் கிண்டலாகச்சொன்ன பார்வதி "எங்கள் பிள்களுக்குத்தா னப்பா, தாய்தகப்பனுக்குக்கடிதம் போடவோ, கவனிக்கவோ, மனமு மில்லை நேரமும் இல்லாமல் கிடக் கது" என்றுவயிற்றெரிச்சலைக்கொட் டினாள்.

...'போஸ்ட் ஆபீஸ் ' என்று தமிழ்நாட் டுத்தமிழ்பற்றி மனைவிகிண்டல் செய்தது அந்தக்களைப்பிலும் முத் தையரின் முகத்தில் புன்னகையைத் தோற்றுவித்தது. அவர் தொடர்ந்து மக்களைப்பற்றிக்கூறிய வார்த்தைகள் அவரின் நெடுமூச்சில் புன்னகை யைக்கரைத்தது.

..."ஐயாவும் இப்படித்தான் அந்தநா ளில் எனது கடிதத்தையும் பணத் தையும் எதிர்பார்த்துத்தபாற்கந் தோருக்கு வெய்யிலிலும் மழையிலும்

அலைந்துதிரிந்து மனம் நொந்திருப் பார்" முத்தையர் மீண்டும் நெடுமூச் செறிந்தார்.

..."இவனை நம்பி நாங்கள் தனியாக வீடு எடுத்திருக்காமல், அகதிக ளோடு அகதிகளாக முகாம்களுக்கே போயிருக்கலாம்" என்று மீண்டும்த னது ஆதங்கத்தை வெளிப்படுத்திய பார்வதி, "குடிக்கிறதுக்கு ஏதும் தரட்டோ" என்று கணவனைக் கேட் டார்.

...எதுவும் வேண்டாம் என்று கையா லேயே சைகை காட்டிய முத்தையர் மீண்டும் சால்வையால் முகத்தையும் நெஞ்சையும் துடைத்துக் கொண் டார்.

...நெஞ்சுக்குள் வேகிற நெருப்புத் தான் வெளியில் ஆவியாக வியர் வையைக் கொட்டுகிறதோ?.

...முத்தையர் குடும்பம் தமிழ்நாட் டுக்கு அகதிகளாக வந்து ஓராண் டுக்கு மேலாகிவிட்டது. இலங்கை அரசபடைகளின் தாக்குதல்கள் விமானக் குண்டுவீச்சு, ஹெலிச்சூ டு,ஷெல்அடி என்று பாதிக்கப்பட்ட மக்கள் மட்டுமல்ல அடுத்து தாங்களும் பாதிக்கப் பட லாம் என்று அஞ்சியவர்களும்,பட் டாளம் வந்தால் வளர்ந்த பிள்ளை களை என்ன செய்வார்களோஎன்று பயந்தவர்களும் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு வந்தனர்.

...முத்தையரின் மூத்தமகனும் மரும களும் பார்ப்பதற்கு நல்ல தோற்ற முள்ள இளவட்டங்கள் . இவர்களி ருவரையும் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பதே நெருப்பை மடி யில் கட்டிக் கொண்டிருப்பதைப் போலத்தான் என்று அடிக்கடி பார் வதி சொல்லிக் கொண்டிருப்பாள்.

...அகதிகளோடு அகதிகளாக நாங் களும் இந்தியா போனால் கோயில் குளங்களையும் பார்த்துக் கொண்டு துணிமணிகளும் வாங்கிக் கொண்டு இரண்டு மூன்று மாதங்களில் திரும்பிவிடலாம் என்ற நப்பாசையும் பார்வதிக்கு ஏற்பட்டது.

...திடீரென ஒருநாள் யாழ்நகரம் மீது இலங்கை விமானப் படைகள் கண் மூடித்தனமாக குண்டுகள் வீசித் தாக்

- எஸ்.எம்.கோபாலரத்தினம்.

*நம் காலத்தின் பெருமை மிக்க பத் திரிகையாளர். பத்திரிகைப் பணி யில் நாற்பதாண்டுகால அனுபவங் களினால் பழுத்தவர்.*

*பத்திதிகையாளரக்கான கூர்மதியும் ,துணிச்சலும் சுறுசுறுப்பும் இன்றைக்கும் அவரிடத்தே குன்ற வில்லை.*

*கடந்த வாரம் எனக்கெழுதிய கடி தத்தில் பத்திரிகை யொன்றில் பணியாற்ற விரும்புவதாயும்,முயற் சிப்பதாயும் குறிப்பிட்டிருந்தார்.*

*எனக்கு ஆச்சரியமாய் இருந்தது. இரண்டு கண்களும் பார்வை குன் றிய நிலையில் தமிழ்நாடு சென்று அறுவை சிகிச்சை செய்த தனால் "ஒட்டுக் கண்ணனாகவும்" உடல்நலம் குன்றியவராகவும் உள்ள நிலையிலும் இந்த பத்திரிகையாளனின் தாகம் தணியவில்லையே.*

*எஸ்.எம்.ஜி. எனவும் "கோபு"எனவும் அன்புடன் அழைக்கப்படும் எஸ்.எம்.கோபாலரெத்தினம் அவர் கள் "பத்திரிகையாளன் போராளியைப் போன்றவன்."என அடிக்கடி கூறுவதுண்டு.*

*தன் பத்திரிகை வாழ்வையும் அப் படியேதான் அமைத்துக் கொண் டார்.*

*தான் சார்ந்த சமுகத்தின் நெருக்க டிகளிலும், துயரங்களிலும் பங்கேற்றார்.எதிர் கொண்டார்.*

*ஆணித்தரமான அரசியல் தலையங் கங்கள்,அரசியல்கட்டுரைகள், அச்சமின்றிசெய்திகளைவெளியிடு தல், ஆகியவற்றினால் துணிச்சல்மிக்க பத்திரிகையாளர். பெயர்பெற்ற இவரது பத்திரிகைத் துறை பங்களிப்புப் பற்றி "முறிந்த பனைமரம்" நூல் (பக்92) (broken Palmyra) மிக உயர்வாகப்பதிவு செய்து ள்ளது.*

கின. முத்தையர்வீட்டுக் முன்பக்கத் தெருவில் கன்னாதிட்டி வீதியில்
இரண்டு வீடுகள் சேதமடைந்ததும் பின்புறத்தில் நாவலர் வீதியில் அரசடிச் சந்தியில் மூன்று வீடுகள் சேதமடைந்ததுடன்
மூவர் உயிரிழந்ததும் முத்தையரையும் வள்ளத்தில் அக்கரை
போய்ச் சேர்ந்தாலென்ன என்று சிந்திக்க வைத்தது. ஒரே
சமயத்தில் எட்டு விமானப்படை விமானங்களும் ஹெலிகளும்
பேரிரைச்சலுடன் வானத்தில் தோன்றி குண்டுமாரி பொழிந்த போது "பிள்ளைகளையெல்லாம் பலிகொடுக்கத்தான் இந்தப்பாவி மனுசன் வீட்டைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருக்கப் போறார்"என்று பார்வதி இரைந்தாள்.

...இதன் பின்னர் முத்தையர் எடுத்த முயற்சியினால் நால்வர்
கொண்ட முத்தையர் குடும்பம் தொன்னூறாம் ஆண்டு செப்டம்பர் முதல் தேதி அதிகாலை இராமேஸ்வரத்தில்
உயிரைக்கையில் பிடித்துக் கொண்டு வந்திறங்கியது.

...இராமேஸ்வரத்தில் கிடைத்த அன்பான வரவேற்பில், குண்டுச்
சத்தம் துப்பாக்கிச்சூட்டுச் சத்தங்களையெல்லாம் மறந்து
நிம்மதியாகப் பெருமூச்செறிந்தது.

...அகதிமுகாமுக்குப் போகிறீர்களா? என்று இராமேஸ்வரத்தில் அதிகாரிகள் கேட்ட பொழுது "இல்லை எங்களுக்கு நண்பர்கள்
இருக்கிறார்கள் அவர்களுடன் போய்த்தனியாகத் தங்கியிருக்கப் போகிறோம் "என்று மூத்த மகனே பதில்
சொன்னான்.

..."அகதி முகாம்களில் பலகுழுக்களையும் சேர்ந்த பலதும் இருக்கும். வீண்கூறட்டு"என்று பார்வதி சொன்னதை
முத்தையரும் ஏற்றுக்கொண்டார்.

...மூத்த மகனின் யோசனையின்படி திருச்செந்தூரில் அவன்
நண்பர்கள் மூலம் வீடுவாடகைக்கு எடுத்து குடியமர்ந்த போது

*1953ல் வீரகேசரியில் படி திருத்துனராக (proof reader) பணியாற்றத் தொடங்கி அப்பத்திரிகையிலேயே உதவி*
*ஆசிரியருமானார்.*
*1960ல் நிகழ்ந்த வேலை நிறுத்தத்தினால் வீரகேசரியை விட்டு*
*வெளியேறி ஈழநாடு பத்திரிகையில் செய்தியாளராய்*
*இணைந்துகொண்டார்.*
*இன்றைக்கு யாழ்ப்பாணத்தில் நாலு தினசரிகள் வெளிவருகின்ற*
*தென்றால் அதன் முன்னோடிஈழநாடு என்றே துணிந்து கூறலாம்.*
*கொழும்புக்கு வெளியே இருந்து வெற்றிகரமாக ஒருதினசரியை வெளிக்கொணரமுடியும் என நிருபித்தது ஈழநாடு.*
*பண்டாரநாயக்காவின் தனிச்சிங்கள எச்சட்ட அமுலும் ,58ம்*
*ஆண்டு இனக்கலவரமும், ஏற்படுத்திய விளைவுகள் பல.*
*ஈழநாடு தினசரியும் சிரித்திரன் இதழும் அவ்விளைபொருட்களில் சில எனலாம்.*
*மதிப்புக்குரிய கலை இலக்கிய விமர்சகரும் அறிஞருமான*
*ஏ.ஜே.கனகரட்ணா அவர்கள் தனது மத்து கட்டுரைத் தொகுப்பினை தனிச்சிங்களச் சட்டத்திற்கே சமர்ப்பணம்*
*செய்திருந்தார்.*
*19959ம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஈழநாடு,வாரப்பத்திரிகை*
*யாய் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரத் தொடங்கியது.*
*தினசரியாக வெளிக்கொணரும் நோக்குடன் அமரர்*
*கே.சி.தங்கராசா அவர்களால் நிறுவப்பட்ட ஈழநாடு*
*1961ம் ஆண்டு பெப்வரியில் இருந்து தினசரியாகியது.*
*1962ம் ஆண்டு சத்தியாக்கிரகம் ஈழநாடு இதழை யாழ்குடா*
*மக்களிடையே நிலைபெறச் செய்*

பார்வதியும் முத்தையரும் செந்திலாண்டவனுக்கு நன்றி தெரிவித்துக்கொண்டனர்.

...ஜேர்மனியிலுள்ள மகனுடன் முத்தையர் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது "நீங்கள் உயிர் தப்பி தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்தது" பற்றிஅவன் மகிழ்ச்சி தெரிவித்தான்." உயிருள்ளவரை உங்களைக் கவனிப்பேன்." என்று கடிதம்எழுதினான். பணமும் அனுப்பினான்.

...பத்துமாதங்கள் தானே அம்மா என்னை வயிற்றில் சுமந்தாள் என்று நினைத்தானோ என்னவோ பத்து மாதங்களின் பின் இன்று வரை அவனிடமிருந்து முத்தையருக்கு பணமும் இல்லை கடிதமும் இல்லை.

...முத்தையர் வீட்டில் அடுப்புப்புகையுடன் வயிறும் நெஞ்சும் புகைந்கொண்டிருக்கின்றன.

..."சார்,உங்களுக்கு நாளை கடிதம் வரும்.இன்று இல்லை"என்று தபால்சேவகர் ஆறுதல் சொல்லுகிற அளவுக்கு திருச்செந்தூர் தபால் ஊழியர்கள் முத்தையருக்கு நன்குபழக்கமாகி விட்டனர்.

...இன்றும் முத்தையர் தபாற்க் கந்தோரிலிருந்து ஏமாற்றத்துடன் களைத்துப் போய் திரும்பி வந்த போது தான் ஏன் வீசு அலைவான் என்று பார்வதி நம்பிக்கையிழந்த நிலையில் கூறினாள்.

..."இவனுக்குப் பிறகு ஜேர்மனிக்குப் போன அம்பிகாபதியின் மகன் என்னமாதிரிக் குடும்பத்தை முன்னுக்குக் கொண்டு வந்திட்டான். சாப்பாட்டுக்கே கஸ்ரப் பட்டதுகள் இப்ப எத்தனை வீடுகள் ஊரிலே வாங்கியிருக்கினம்.அந்தச் சுப்பையாவின் மச்சான் ஒருவன் வெளிநாட்டுக்குப் போய் இப்ப சுப்பையாவின் நாலு பிள்ளைகளும் வெளிநாடுகளில..."

...இன்னும் பட்டியல் நீண்டு போகும் என்பதையுணர்ந்த முத்தையர் மெதுவாக அடுக்களைப்பக்கம்

*தது. என்பதும் குறிப்பிடத் தக்கது.*

*சத்தியாக்கிரகம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதால் உடனுக்குடனான செய்திகளை சிறப்புப்பதிப்புகளாய் (special Edition) வெளியிட்டு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றதுடன் கொழும்பு பத்திரிகை விற்பனையை முறியடித்தது.*

*யாழ்ப்பாணக் கச்சேரிச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டவர்கள் யாழ்ப்பாண பஸ்நிலையம் வரும் போது கச்சேரியில் என்ன நடந்தது என்பது பற்றி ஈழநாடு எழுதியிருப்பதை கண்டு வியப்புடன் வாங்கிப் படித்தார்கள். என எஸ்.எம்.ஜி. அவர்கள் நினைவு கூருவதுண்டு.*

*ஈழநாடு பத்திரிகையில் செய்தியாசிரியராய் இணைந்து கொண்ட எஸ்.எம்.கோபாலரத்தினம் அவர்கள் பின்னர் அதன் ஆசியராகவும் இருபதாண்டு காலம் தன் உழைப்பை வழங்கியதன் மூலம் ஈழநாடு தான் கோபு,கோபுதான் ஈழநாடு எனவும் சிறப்பிக்கப்பட்டவர்.*

*உடல்நலக்குறைவு காரணமாய் 1981 ல் ஈழநாடுபணியிலிருந்து ஓய்வு பெற்ற எஸ.எம்.ஜியால் பத்திரிகைத் துறையிலிருந்து விலகிச்செல்லமுடியவில்லை.*

*1982 ல் 'காலைக்கதிர்' என்னும் வார இதழின் ஆசிரியரானார். ஆறுஇதழ்களுக்கு மேல் வெளியிடமுடியாமல் பொருளாதாரச்சுமையினால் இதழ் நிறுத்தப்பட்டது.*

*பின்னர், 1985 ல் சாய்பாபா அட்வடைசிங் சார்பில் வெளிவந்த 'செய்திக்கதிர்' பத்திரிகையின் ஆசிரியரானார். ஈழத்தில் புதியமுறையில் வெளிவந்த சஞ்சிகை என இதனைக் கூறலாம். இவ்வேளையிலேயே*


திரும்பி கையைத்தூக் கிப் "போதும்"என்று சைகை காட்டினார்.
..."ஐயாவுக்கு நான் செய்த அநியாயம் தான் எனக்கும்இப்படி நேர்ந்திருக் கிறதோ " முத்தையரின் மனம் ஆத் மசோதனையிலி றங்கியது.
..."அம்மா நோயாளியாகப் படுக்கை யில் கிடந்த பொழுது நான்தானே அந்தச் சின்னவயதிலும் மலம்,சலம் எடுத்து பத்தியம் வைச்சுக் கொடுத்துக் கவ னித்தேன். ஐயா கூட அம்மாவை பரியாரியிடம் கொண்டு போய்வாங்கிக் கொடுப்பது மட்டும் தானே.."
முத்தையரின் மனம் சமாதானம் தேடி அலைந்தது!
..."அம்மா செத்தப் பிறகு ஐயா இன் னொரு பெண்பிள்ளையைக் கொண்டு வந்தார். திடீரென ஒரு நாள் இரவு ஐயா கிறுதி வந்து விழுந்தார். பரியாரியிடம் போய் அந்தஇரவில் நான் போய்ச் சொல்ல அவர் "வெ றி"முறியிறதுக்கு மருந்து கொடுக்க ஐயாவுக்குப் பாரிசவாத மாக்கிவிட்டது. ஐயா கூட்டி வந்த பெண் பிளையும் மூன்று நாளில் ஓடிவிட்டாள்.
நான்தானே அவருக்கும் மலம்சலம் எடுத்து பத்தியம் கொடுத்து இலை குழை தேடி அவிச்சுக் குளிப் பாட்டி எண்ணெய் தேய்ச்சு மருந்து கொடுத்து எல்லாம் கவனித் தேன்."
... அம்மா உயிருடன் இருந்தபோதே வீட்டை விட்டு ஓடிப்போன அண்ணன் அதுக்குப் பிறகு அம்மா செத்ததுக்குக் கூடவரவில்லையே."
...அறிவுவளராமல் சிறுகுழந்தையாக இருந்தபோது தாய் தகப்பனுக்கு என்னுடைய கடமை களை ஒழுங்காகத்தான் செய்திருக்கிறன். அறிவு தெரிந்த பின்தான் நான் அறிவோடு நடந்துகொள்ளவில்லை!
..."இந்தப் பெடியன்களைப் பெத்த துக்கு இன்னுமிரண்டு பெட்டையளைப்பெத்தாலாவது நிம் மதியாக இருந்திருக்கலாம்" பார்வதி

*ஈழமுரசு தினசரியின் ஆசிரியராக வும் பொறுப்பேற்றார். இவரது பத் திரிகைப் பணியில் இக்காலகட்டமே மிகமுக் கியமானது.*
*இலங்கை இராணுவம் யாழ்நூல கத்தை எரித்து அவமானத்தைத் தேடிக்கொண்டது போல், அமைதி காக்க வந்த இந்திய இராணுவம் பத்திரிகை நிறுவனங்களுக்கு குண்டு வைத்து தகர்த்த தன் மூலம் தன் "பஞ்சசீல பெரு மைகளை" காத்துக் கொண்டது. 1987ம் ஆண்டு ஒக்ரோபர் பத்தாம் திகதி ஈழமுரசு அச்சகப் பகுதி குண்டு வைத்துத் தகர்க்கப் பட்ட போதும், இந்திய இராணுவ ஆக்கிரமிப்புகுட்பட்ட யாழ்பாணத்துக்குள் இருந்து தலைமறைவு தினசரியாக ஈழமுரசு பத்திரிகையை எஸ்.எம்.ஜி வெளிக்கொணர்ந்தார். பத்திரிகை யாளனின் வாழ்வின் பேறு சாதனை மிக்க முயற்சி என்றே இதனைக் குறிப்பிடலாம்.*
*1987ம் ஆண்டு நவம்பர் 25ல் இந்திய அமைதிப்படையினரால் கைது செய்யப்பட்டதன் பின்னான இரண்டு மாத சிறை அனுபவத்தை ஈழமண்ணில் இந்தியச் சிறை என எழுதினார்.*
*இதனைச் சென்னையில் இருந்து வெளிவரும் ஜீனியர் விகடன் வாரஇதழ் ஆறுமாதம் தொடராக வெளியிட்டது.*
*இவர் கைது செய்யப்பட்டிருந்த வேளையில் பெரும்பாலான கொழும்பு இதழ்கள் வாய்மூடி மௌனியாய் தம்பத்திரிகா தர்மத்தைக் காத்துக் கொண்டன என்பதும் குறிப்பிடத் தக்கது.*
*இந்திய இராணுவம் வெளியேறுவ தற்கு முன்னேயே 1990.ம்ஆண்டு பெப்ரவியில் ஈழநாதம் இதழின் ஆசிரியரானார். தனது*

மௌனம்கலைந்து மீண்டும் குரல் கொடுத்தாள்.
... "மெய்தான் பெண்பிள்ளைகள் எப்பிடியாவது ஒருநேரக்கஞ்சியாவது ஊத்துங்கள். இப்பபோனாலும் அவள் மூத்தவள் எங்களிரண்டுபேரையும் வைச்சுக்கவனிப்பாள். மருமகனும் நல்ல குணசாலி. பேரப்பிள்ளைவளும் நல்ல விருப்பம். என்றாலும் கட்டிக்கொடுத்தஇடத்தில போய் எப்படி...." முத்தையரின் மனம் இப்படிச் சொல்லிக்கொண்டது.
... "ஐயாவும் ஒருபெண்பிள்ளையையாவது பெற்றிருந்தால்
அநாதையாய்ப் போய்ச் சேர்ந்திருக்க மாட்டார்." முத்தையரின் நெஞ்சம் அழுதது.
... மீண்டும் பார்வதியின் குரல் ஒலித்தது."இவன் மூத்தவன் சரியாயிருந்திருந்தால் ஏன் எங்களுக்கு இந்தக் கஷ்டம்.
பாடுபட்டு பணத்தைச் செலவழித்து அவனை வெளிநாட்டுக்கு
அனுப்பிவிட இயக்கம் எண்டு எங்கேயோ போய் அலைந்து
கடைசியில் இந்தப் பெட்டையைக் கொண்டு வந்ததுதான்
கண்ட மிச்சம்."
... "அண்ணனும் இப்படித்தான் ஐயா யாருடையக் காலைக் கையைப் பிடித்து உத்தியோகம் வாங்கிக் கொடுக்க வேறு
யாருடனோ சேர்ந்து திரிந்து மறியல் கார்டாகி ஒரு
சிங்களப்பெட்டையை பிடித்ததுதான் மிச்சம். ம்..இதுவும்
எங்கள் பரம்பரையோ?"முத்தையரிடமிருந்து மீண்டும் ஒரு
பெருமூச்சு!
... "பிள்ளைகளைப் பெத்து நோய் நொடி இல்லாமல் வளர்த்து ஆளாக்கி விட அதுகள் இப்பிடித் தாய் தகப்பனைப் பற்றிச்
சிந்திக்காமலிருக்குதுகளே" என்று மீண்டும் பார்வதி வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டாள்.
... "சின்னவயசிலை ஒருநாள் நள்ளிரவில் எனக்குத் திடீரென
வயிற்றுவலி ஏற்பட்டு நான் படாத பாடு பட்ட போது என்னைத்

*உடல்நிலை காரணமாய் அப்பத்திரிகையின் பணியில் தொடர*
*முடியாது போனபோதும் இந்திய இராணுவம் வெளியேறிய*
*போது அவர் எழுதியதான "சலோ சலோ டில்லி சலோ"*
*என்னும் ஆசிரியத் தலையங்கம் மக்களின் எண்ண வெளிப்*
*பாடாய் அமைந்திருந்தது.*
*இப்ப எல்லாம் எழுதும் போது என் கை நடுங்குகிறது. எனக்*
*கவலையுறும் எஸ்.எம்.ஜி, அவர்கள் தனது பழைய காலங்களை,*
*அனுபவங்களை மீட்டெடுத்துத் தொகுக்கும் பணியிலும் ஈடு*
*பட்டிருக்கிறார். விரைவில் வாசகர்களுடனும் பகிர்ந்து கொள்வார்*
*கொ -கி.பி.அரவிந்தன்.*

தூக்கிதோளில் போட்டுக் கொண்டு பக்கத்திலே தர்மாஸ்
பத்திரி என்ற அரசினர் வைத்திய சாலைக்கும் செல்லாமல்
நாலைந்து மைல் தூரத்திலுள்ள இராசையாப் பரியாரிடம் ஐயா கொண்டு போனார். இப்படி ஒருதடவைதானா? அவருக்கு
சைக்கிள் ஓட்டத் தெரியாது. கார் அல்லது குதிரை வண்டி
தான் பிடிக்க வேண்டும். அம்மாவைப் பரியாரிடம் கூட்டிக்
கொண்டு போவதற்கு இளையவனின் குதிரைவண்டி பிடிப்பார். என்னைத் தோளில் சுமந்துகொண்டு தான் போவார். அண்ணனையும் அப்பிடித்தான்."மீண்டும் முத்தையருக்கு சிறுவயது
நினைவுகள்.
.... "தனது தகப்பனையும் பிற்காலத்தில் தான் கவனிக்காததுபற்றிஐயாவும் ஒருநாள் கவலைப்பட்டு சொன்னவர்."
.... "எல்லோருக்கும் காலம் கடந்து தான் புத்தி தெளிகிறதாக்கும். இப்போதுதான் எனக்கும் புத்தியில் தெளிவு ஏற்படுகிறது. இனி என்ன பயன்.?



.... "வாழ்க்கையில் சிறுவயதுமுதல் பல சோதனைகளையும் வேதனைகளையும் அனுபவித்த நான் பிறகாலத்திலாவது பிள்ளைகளால் நிம்மதிபெறலாமென்று கனவு கண்டேன். ஐயாவைப்போல் என்னைப்போல் என் பிள்ளைகளும் பிற்காலத்தில் கவலைப்பட்டுக் கண்ணீர் விடக்கூடாது."

முத்தையர் மனதுக்குள் இப்படி உறுதி செய்து கொண்டார்.

.... "யோசிச்சு யோசிச்சு என்னத்தைக் கண்டது. வியாதிகளைத் தேடினது போதும். எழும்பி வாருங்கோ சாப்பிட" என்று பார்வதி விடுத்த அழைப்பு முத்தையரை தட்டி எழுப்பியது.

.... "புதிய பரம்பரை உருவாக வேண்டும். என்று வாய்விட்டுச் சொல்லியபடியே முத்தையர்எழுந்தார்.

---

வாந்தி முதலாய்
வலியால் துடித்து
முனகி....
முக்கி...
மலமும் கழிந்து,
யோனி கிழிந்து
குருதி வழிந்து....

இவ்வளவு நிகழ்வும்
நடந்து முடிந்தது.

தாதி ஒருத்தி
சேதி சொன்னாள்
"சுகப்பிரசவம்"

நானும் எனது பங்களிப்புக்காய்,
இனிப்புப் பெட்டியுடன்
நண்பனைத் தேடி...
கேட்டான்.
சொன்னேன் "சுகப்பிரசவம்"

நண்பனும் சொன்னான்
"எனது ஐந்து குழந்தைகளும்
சுகப்பிரசவம் தான்".

என்ன சுகம்! என்ன சுகம்!
ஆகா
அப்பன் ஆகுதல் என்ன சுகம்!!

-ரஜீன்குமார்.

# அறிமுகம்.

இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துப் புறநானூறு

(23 கவிதைகளின் தொகுப்பு)

எழுதியவர்: ரஜீன்குமார்

வெளியீடு :

SUSSINDRAN N.Straube
Brunsbüttler Damm 21
1000 Berlin 20

# ▫ தம்பி நீ எங்கே ?

○ - எம்.அரியநாயகம்.

திரும்பிப் பார்க்கிறேன்!
81ல் பாரீஸ் மண்ணில் கால் பதித்த நான், சொந்த மண்ணில் விட்டு வந்த பணி, என் உள்ளேயிருந்து கொழுந்துவிட்டு எரிய, இறந்தகால ஆக்கத்தில் உறைந்து நிகழ்கால ஏக்கத்தைக் கடந்து, எதிர்கால ஊக்கத்தைக் கொண்டுவரும் நோக்கிற் செயற்பட விரும்பியதன் விளைவாய் எழில் கலை இலக்கிய சஞ்சிகை பாரிசில் தவழ்ந்தது.
அதன் இரண்டு பிரதிகளையும் பார்த்துவிட்ட நீ, தொலைபேசி இல்லாத காரணத்தால் பலமுறை என்னைத் தேடியே வந்தாய்.
ஓர் சனிக்கிழமை பகல் 2 மணி சொல்லிவிட்டுச் சென்றபடி குறித்த நேரத்தில் நீ.
"வணக்கம்! அண்ணை நீங்கள் தான் எழில்....."
பதினெட்டுப் பத்தொன்பது வயதினைப் பளிச்சிட்டுக் காட்டிய உன் முகத்தில் இனம்புரியாத ஒரு சோகக்களை. கண்களிலோ ஒளிப் பிரவாகம்.
"நான் தான் தம்பி வாங்கோ, இருங்கோ..."
சில நிமிடங்கள்....சுகநலன்கள், பாரிஸ் வாழ்க்கை...
"அண்ணை! இதை ஒருக்காப் பாருங்கோ.."
முழுத்தாள்கள் அளவிலான நூறு பக்கங்கள் கொண்ட ஒரு கொப்பி!
உன் எண்ணங்கள், ஏக்கங்கள் கருத்துக் குவியலாய்....
பக்கங்களைப் புரட்டிப் புரட்டிப் படித்துப் பார்க்கிறேன்.
முத்துக் குவியலாய் அவை பிரகாசிக்க என் கண்கள் பனிக்கின்றன.
"தம்பி! இந்தக் கவிதைகள்....."
"நான் தான் அண்ணை எழுதினது, நான் அனுபவிச்ச நேரில் கண்ட, கேட்ட துயரங்களையெல்லாம் கவிதைகள் போல வடிச்சிருக்கிறன். இதில் ஒன்றிரண்டையாவது உங்கள் எழிலில....அச்சில பார்க்கவும் ஆசையாயிருக்கு...."
என் நெஞ்சம் விம்மிப் புடைத்தது. கண்கள் கசிந்ததை நீ அறிந்திராய்! அந்த உன் ஆதங்கம், ஒருபடைப்பாளியின் உள்ளுணர்வை வெளிச்சம் போட்டுக் காட்ட என்முன் நீ பிரகாசித்து நின்றாய்.
உனக்கு எப்படி நான் ஆறுதல் சொல்வது என்றும் புரியவில்லை. உண்மையையும் மறைக்க முடியவில்லை. நான் மௌனமானேன்.
" அண்ணை என்ன யோசிக்கிறீங்கள்."
"இல்லைத் தம்பி... மூன்றாவது எழில் வருமா? வராது என்று தான்...!
"ஏன்.." உன் தொனியில் பெரிய ஏமாற்றம்.
"தம்பி! எழில் இரண்டு பிரதிகளையும் பார்த்திருப்பீர். யாழ். ஸ்ரீபார்வதி அச்சகத்தில் தான் அவற்றைப் பதிப்பித்து இங்கு வரவழைத்தேன். யாழ் கலவரத்தில் அந்த அச்சகமும்..."
நான் முடிக்கவில்லை. விபரத்தைப் புரிந்து கொண்ட நீ, மிகுந்த ஏமாற்

றத்தோடும் அனுதாபத்தோடும் என்னைப் பார்த்தாய்.
"பரவாயில்லைத் தம்பி, இன்று உன்னைச் சந்தித்ததோடு என் மனதில் ஏற்பட்ட சோர்வு, களைப்பு எல்லாம் நீங்கிவிட்டது.
மானிட விடியலுக்காய் மகத்தான இலக்கியங்களைப் படைக்க விரும்பும் உன் போன்ற இளைஞர்களுக்காய் தொடரும் எனது பணி, ஒரு ஊன்றுகோலாய் அமையும். அதற்குச் சிலமாதங்கள் அவகாசம் தர வேண்டும்..."
நீ விடைபெற்றுச் சென்றுவிட்டாய்.
உனக்குக் கொடுத்த வாக்குறுதி என்னைத் தூங்க விடவில்லை.
அந்தத் தூங்காமையின் வெளிப்பாடுதான் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்.

இதுவரை நான்கு நூல்கள் வெளிவந்து விட்டன. இருப்பினும் அதன் மூலக்கல்லான உன்னை இன்று வரை காணேன்?
இலக்கியக் கூட்டங்கள் பாரிஸில் பட்டிதொட்டி எங்கும் உன்னைத் தேடுகின்றேன். நடைபாதைகளில் காணும் ஒவ்வொரு முகங்களும் பலவேளைகளில் நீயாகவே..!
நெருங்கிய பின் திரும்புகின்றேன் ஏமாற்றத்தோடு.
என் அகத்தினில் பதிந்து விட்ட உன் களை பொருந்திய முகம் மெல்ல மெல்ல மறைகிறது.
ஆனாலும் உன்னை நான் தேடுகின்றேன்.......

*

# அறிமுகம்







தொடர்புகளுக்கு..
'RAJANI' PUBLICATIONS
11, RUE RODIER
75009 PARIS.

மரணமும் துப்பாக்கியும்
சேர்ந்தே திரியும்
தெருவோரத்து வீடொன்றில்
மூச்சுவிடவும் அஞ்சிய
இரவின் நிசப்தத்தோடு நான்.

தூக்கத்தில் புலம்பும்
வயதான அம்மா
சலனமற்று உறங்கிய தங்கை
புத்திரபாசத்தில்
மௌனமாய் அழுதபடி அப்பா.

மனிதம் உறங்கிப்போன
ஒரு தேசத்தில்
விழித்தபடி
மர்ணத்தின் நிழலோடு
யுத்தம்செய்ய
நம்பிக்கையைத்தேடுகிறேன்.

தெருவோரத்தில் வாகன இரைச்சல்
சிலவேளை அவர்கள் ?
பயத்தின் விழிம்புக்குள் நான் !
வாகனம் போனது.
வேப்பமரம் அசைந்து
ஒரு பறவை சிறகடித்து அலறிற்று.
மறுபடி நிசப்தம்.
நிலவைக்கடந்து முகில்கள் போயின.

விமானம் வட்டமிட்டது.
வீட்டில் யாருமில்லை
பங்கருக்குள் புகலிடம்.
நான் மட்டும் படுக்கையில் புரண்டேன்.
மரணம்....!
எப்போதாவது அது வரலாம்.
ஆனால்
அவர்கள் வராமல் !
அர்த்தங்களோடு !

துப்பாக்கிபற்றி
அவர்கள் பேசியபோது
நானும் பேசினேன்.
துப்பாக்கியோடு
அவர்கள் அலைந்தபோது
நான்
இன்னொன்றை யோசித்துக்கொண்டிருந்தேன்.
மக்களை !

இன்னும்
நான் உறங்கவில்லை.



- சிவானந்தன்.

* விழித்திருப்பு.

# சின்னச்சின்ன o o o o

ALBERTVILLE 92

தொகுப்பு: ஆர்.தேவகுமார்

## ஒலிம்பிக்

பிரான்சுக்கு இவ்வாண்டு உற்சாக மான தொடக்கம் தான். குளிர் கால ஒலிம்பிக் விளையாட்டுக்கள் (Winter Olimpic) இம்முறை பெப்ரவரியில் பிரான்சின் Albertville யில் இடம் பெற்றன. பிரான்சில் மூன்றாவது தடவையாய் இவ்விளையாட்டுகள் நடைபெறுகின்றன.

நவீனப்படுத்தப்பட்டதான ஒலிம் பிக் விளையாட்டுப் போட்டிகள் கிறிஸின் (Greece) ஏதென்ஸ் நகரத் தில் 1896ம் ஆண்டில் நடைபெற்ற தில் இருந்து கணிக்கப் படுகின்றன.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை யாக இடம் பெறும் உலகப் பெரும் இவ்விளையாட்டு பந்தயம் புராதன கிரேக்கத்தில் இடம் பெற்ற உடல் வல்லுநர் போட்டிகளின் தொடர்ச் சியாகும்.

ஒலிம்பிக் விளையாட்டுகள் 1924 ம் ஆண்டில் இருந்து இரண்டாய் பிரிக் கப் பட்டன. குளிர் வலயத்திற்கான விளையாட்டுகள் என அடையாளம் காணப்பட்டன. குளிர் கால ஒலிம் பிக் தனியே அவ்வசதிகள் அமையப் பெற்ற இடங்களில் நடைபெறத் தொடங்கின.

முதல் குளிர்கால ஒலிம்பிக்கும் 192 4ல் பிரான்சில் தான் இடம் பெற் றது என்பது குறிப்பிடத்தக்கதாகும். வழமையான ஒலிம்பிக் போட்டிகள் ஸ்பெயினில் Barcelona ஏப்பிரலில் தொடங்க உள்ளன.

உலகெங்குமான தேசங்களில் இருந்து ஆண் பெண் இருபாலாரும் இணைந்ததான இவ் ஒலிம்பிக் போட்டியில் 1912ம் ஆண்டிலிருந்து தான் பெண்கள் அனுமதிக்கப்பட் டனர்.

ஒழுங்கு முறையாக நான்கு ஆண் டுகளுக்கு ஒருமுறையாக ஒலிம்பிக் நடைபெற்ற போதும் இரண்டு உலக யுத்தங்களின் போது இவ் வொழுங்கு குலைந்து போனது.



## பிரெஞ்சுப் பெண்மணி எலிஸபெத்.

. பிரான்ஸ் நாட்டில் வாழும் தமிழர்கள் பலர் நான் அறிந்தளவுக்குக் கூடத் தமிழை அறிந்திருக்கவில்லை என்கிறார் பாரிஸ் பல்கலைக்கழகத்தில் 30 மாணவர்களுக்கு தமிழ் கற்பிக்கும் திருமதி எலிஸபெத் உதயணன். உதயணன் இலங்கையர் என அறிய முடிகிறது.

. சுபமங்களா இதழுக்கு அளித்த பேட்டியொன்றில் மேலும் குறிப்பிடும் இவர் "பிரான்ஸ் காரர்களுக்கு இந்தியாவைப் பற்றித் தெரிந்ததெல்லாம் சொற்பம் தான். அதே போல பிரான்ஸ் பற்றியும் இங்கே பல தவறான அபிப்பிராயம் இருக்கிறது. பிரான்ஸ் பெண்கள் எல்லாம் எந்த நேரமும் எல்லோருடனும் உடலுறவு கொள்வதாக இங்கு ஒரு கற்பனை நிலவுகிறது. இங்கேயுள்ள ஒழுக்கம், குடும்பபாசம் எல்லாம் அங்கும் உண்டு" என்கிறார்.

. தேவாரம் பற்றிய ஆராச்சி நூலை பிரெஞ்சு மொழியில் எழுதும் இவர் சாகித்திய அகடமி பரிசு பெற்ற சி.ராஜ நாராயணனின் 'கோபல்ல புரம்' நூலையும் பிரெஞ்சுக்கு மொழி பெயர்க்கிறார்.

. ஏலவே, தி.ஜானகி ராமனின் 'அக்பர் சாஸ்திரி' என்ற கதையை பிரெஞ்சுக்கு மொழி பெயர்த்துள்ளதாகவும் அறிய முடிகிறது.

## J.F.K.



ஆசிரியத் தலையங்கம் எழுத வேண்டிய பத்திரிகை ஆசிரியர்கள் சினிமா விமர்சனம் எழுதும் நிர்ப்பந்தத்தை J.F.K. ஏற்படுத்தியுள்ளது என கிண்டலுடன் குறிப்பிடுகின்றார் ஒரு சினிமா விமர்சகர்.

J.F.K. 1963 ல் சுட்டுக் கொல்லப்பட்ட அமெரிக்க ஜனாதிபதியான (John Fitzgerald Kennedy) ஜோன் எவ் கெனடி பற்றிய திரைப்படமாகும்.

அவ்வேளையில் அதிர்ச்சியையும் பரபரப்பையும் ஏற்படுத்திய இக் கொலை நிகழ்ச்சியை, J.F.K. திரைப்படம் மூலம் இயக்குநர் Oliver Stone உலகின் விவாத அரங்கிற்கு முன் தள்ளியுள்ளார். ஜனாதிபதி கெனடியை யார் கொலை செய்திருக்கக் கூடும் என்பதே இப் படத்தின் மையக் கருவாகும்.

ஒஸ்வால்ட் (Lee Hervey Oswald) தான் கொலைகாரன் என்பது வெளியரங்கமாயினும், யாருக்காய் இக் கொலையை செய்தான்?, அதன் பின்னணி எது என்பது அப்போதிருந்தே துலங்காத மர்மம் தான்.

இப்படத்தில் இயக்குநர் மர்ம முடிச்சை அவிழ்த்து அடையாளம் காட்ட முற்படுகின்றார்.

இயக்குநர் முன்வைக்கும் சான்றா தாரங்களும், தர்க்க வினாக்களும் அமெரிக்காவை ஒரு உலுக்கு உலுக் கியுள்ளது என்பதை பத்திரிகைகள் வெளிப்படுத்துகின்றன.
'வரலாற்றை திரிக்கின்றார்' என எதிர்ப்பாளர்கள் இயக்குநர் மீது குற்றம் சாட்டுகின்றனர். இது தேசிய கௌரவ பிரச்சினை என் றும் சுட்டிக் காட்டுகின்றனர்.
தன் சமகால முக்கிய நிகழ்வு பற்றி தன் நோக்கில் வெளிப்படுத்துதல் கலைஞனின் கடமை என வாதிடு கின்றார் இயக்குநர் Oliver Stone.
இப்படத்தில் கெனடி கொலை வழக்கை ஆய்வு செய்யும் வழக்க றிஞர் Jim Garrison பாத்திரத்தை ஏற்று படக் கதாநாயகனாக Kevin Costner நத்துள்ளார். Holly Wood ன் முதல் தர நடிகர் என கருதப் படும் Kevin Costner ஆஸ்காரின் பல விருதுகளை தட்டிச் சென்ற Danse With Wolfs என்ற படத்தின் இயக்குநரும் நடிகருமாவகர். இப் படம் அமெரிக்க பூர்வீக குடிகளான செவ்விந்தியருக்கும், அமெரிக்க வெள்ளை இராணுவ அதிகாரிக்கும் இடையே ஏற்படும் உறவை சித்த ரிக்கிறது. பிரான்சின் முன்னணி சினிமா இதழான 'Studio' Kevin Costner ஐ 91ம் ஆண்டின் 'சினிமா மனிதன்' (Man of The Cinema) என சிறப்பித்து கௌரவித்துள்ளது.
இரண்டு அமெரிக்க கலைஞர்க ளின் கூட்டுழைப்பான J.F.K. நடக்க இருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் முடிவுகளில் கணிச மான செல்வாக்கை செலுத்தும் என விமர்சகர்கள் குறிப்பிடுகின் றனர்.

## ஒஸ்கார் விருது பெறும் சத்தியஜித்ரே



. இந்தியா பற்றியும் இந்திய சினிமா பற்றியும் நிலவும் தாழ்வபிப் பிராயத்தையும் மீறி இந்த வங்கத் துத் திரைப்பட மேதைக்குத் தலை வணங்குகிறது உலகம்.

. பிரான்ஸ் அதிபர் மித்ரன்ட் இந் தியா சென்றிருந்த ஒரு சமயம் 'ரேயை' நேரில் சென்று சந்திப்பதற் காக தனது நேரத்தில் ஒரு பகுதி யைச் செலவிட்டார் என்பது பழைய செய்தி.

. ஒஸ்கார் கமிட்டியோ, 1991ல் ரேயின் சினிமா சேவையைப் பாராட்டி அவருக்குச் சிறப்பு விரு தினை வழங்கியிருக்கிறது.

. எழுபது வயதான ரேய் நோய் வாய்ப் பட்டிருக்கும் நிலையிலும் எதிர்வரும் ஜுன் மாதம் நடைபெ றவிருக்கும் ஒஸ்கார் விழாவிற்கு நேரில் சென்று பரிசினைப் பெறு வதற்கு இருக்கிறார்.

. சத்யஜித்ரே பற்றி இன்றைய இந் திய முன்னணி நடிகரும், சினிமா பற்றிய பிரக்ஞை தேடல் உள்ளவ ருமான கமல்ஹாசன் ரேய்க்கு எழு திய பகிரங்கக் கடிதத்தில் கீழ்வரு மாறு குறிப்பிடுகின்றார்.

"அன்புள்ள ஐயா!
இந்தியாவின் சினிமா மாணவர்கள் உங்களை மதிப்பதன் மூலம் மேன்மை அடைகிறார்கள். விமர்

சிப்பதன் மூலம் வித்தியாசப் படுகிறார்கள். ஆக நல்ல சினிமா சம்பாஷணைகளில் அறிவு நிலையின் விலாசம் சொல்லும் கருவியாக நீங்கள் பயன்படுகிறீர்கள். நானும் அவ்வழி வந்தவனே. ரேயை தெரியாது என்று சொன்னால் கேவலம் என்பதனால் வதந்திகளை விபரமாய்ச் சொல்லி உங்களைத் தெரிந்தது போல் நடித்திருக்கிறேன்.

சினிமா தெரிந்தவர்களுடன் சம்பாஷணையில் ஈடுபடும் ஆர்வத்தில் சொன்ன பொய்யை பலப்படுத்த உங்கள் படங்களின் பெயர்களை மட்டும் மனப்பாடம் செய்து வைத்திருந்தேன். பின் உங்களின் படங்களை பார்க்காமலே உங்கள் விமர்சகனானேன் வித்தியாசப்படுவதற்காக... பின் சினிமாவை கையாள முயன்று திக்குமுக்காடிப் போன நேரத்தில், அவசரமில்லாமல் மெதுவாய் நகரும் உங்கள் சினிமாவைப் பார்த்தேன். அன்று முதல் ரேயைப் பற்றி அதிகம் பேசுவதில்லை நான்-கேட்க மட்டுமே செய்தேன். பொறாமையில் வந்த பொறுமை அது.

## அரசியலில் விஞ்ஞானம்

சோவியத் யூனியனின்- தற்போது இப்பெயர் புழக்கத்தில் குறைவு-

ஏற்பட்ட அரசியல் மாற்றம் உலகெங்கும் அதிர்ச்சியையும், வலியையும் ஏற்படுத்தியது பழைய செய்தி. அதன் பக்க விளைவு விஞ்ஞானத்திலும் தாவியுள்ளது ஆச்சரியமானது தான்.

சோவியத்தின் விண்வெளி ஆய்வாளர் Sergei Krikalev ஏறத்தாழ ஒரு வருடமாய் பூமியை சுற்றிக் கொண்டிருக்கின்றார். இவர் மார்ச் 23ம் திகதி விண்வெளிக்கு செல்லும் ரூசிய, ஜேர்மனிய கூட்டு விண்வெளி ஆய்வாளர்களால் அழைத்து வரப்பட வேண்டும். ஆனால் இப்போதுள்ள சிக்கல் என்னவென்றால், விண்வெளி ஓடம் தரையிறங்க வேண்டிய பைக்கனூர் விண்வெளி ஆய்வு நிலையம், சிதறிய சோவியத் குடியரசுகளில் ஒன்றான Kazakhstan குடியரசில் அமைந்துள்ளது. இந்நிலையம் யாருக்கு சொந்தம் என்பது ஒருபுறம், விண்வெளி ஆய்வு நிறுவனம் (Soviet Space Agency) பிளவுண்டிருப்பது மறுபுறம், விஞ்ஞான மனிதன் விண்வெளியில் வலம்வர அரசியல் மனிதர்கள் அடிபடுகின்றார்கள்.

தெரியத்தெரிய
தெரியாமை தெரியும்.

- கி. ராயநாராயணன்.

# தௌபீக் Zய்யாD கவிதைகள்.

## கவச வாகனங்கட்கு முன்னம்

என் யன்னல் விளிம்பின் மேல்
ரோஜா இதழ்கள் மலர்ந்தன
முந்திரிகைக் கொடியினின்று
ஒரு பசுநிழல்,
ஒரு பச்சை ஏணி எழுந்தது
என் வீடு
ஒரு கற்றை சூரியக் கதிர்கள் மேற் சாய்ந்து
குளித்தது
இதெல்லாம்
அவர்களது கவச வாகனங்கள் வருமுன்னம்

## அவர்கள் அறிவார்கள்

என் நாட்டை ஆயிரம் பேர் கைப்பற்றினரென.
அவர்கள் அறிவார்கள் ஆயினும்
அந்த ஆயிரம் பேருமே
புயற்காற்றிற் பனிபோன்று
கரைத்தழிந்தனரெனவும்
அவர்கள் அறிவார்கள்.

## ஸல்மான்

தன் முற்றத்து மண்ணில்
ஒருகுண்டு அவனைப் புதைக்கு முன்
ஸல்மான் எமக்குச் சொன்னான் :
"பிரியமானவர்களே
நெடுங்காலமாக நாம்
நாம் விரும்பியவாறு வாழவில்லை
இப்போது வாழ்கிறோம்."

*1932 இல் பிறந்த தௌFக் Zய்யாD பலஸ்தீனக்கவிஞரும் எழுத்தாளருமாவர். நஸரத்திலும் பின்பு மொஸ்கோவிலும் கல்வி பயின்றவர். ரஷ்ய இலக்கியத்திற் புலமையுடைய இவர் ராக்ஃ என்னும் கம்யூனிஸ்ட் ஸ்தாபனத்தின் மூலம் இஸ்ரேலில் பலஸ்தீனமக்களுக்காக உழைத்தவர். இவரது கவிதைகள் பல போராட்டப்பாடல்களாக வடிவம் பெற்றுள்ளன.*

## இங்கேயே இருப்போம்

லிடாவில்1, றம்லாவில்2, ஜிலியில்3
நாம் தொடர்ந்து இருப்போம் -
உம் மார்புகள்மேல் மதில்கள்போல்
உம் தொண்டைகளிற்
கண்ணாடிச் சிராய் போல
கற்றாழை முள் போல
உமது விழிகளில்
மணற் காற்றுப் போல.

உம் உணவுச்சாலைகளில் பீங்கான் கழுவி
உம் மதுக்கடைகளிற் பானம் வழங்கி
உம் சமையலறை நிலங்களைத் துடைத்து
உம் நீலப் பற்களினின்று
எம் பிள்ளைகட்குத் தீனி பறித்தெடுக்க
நாம் தொடர்ந்தும்இருப்போம் -
உம் மார்புகள் மேல் மதில்கள் போல்

இங்கேயே நாம் இருப்போம்
எங்கள் பாடல்களைப் பாடுவோம்
சினமிகுந்த வீதிகட்குச் செல்வோம்
மானத்துடன் சிறைகளை நிறைப்போம்.

லிடாவில், றம்லாவில், ஜிலியில்
நாம் தொடர்ந்து இருப்போம்
அத்திமர நிழலுக்கும்
ஒலிவ் நிழலுக்கும் காவலிருப்போம்
ரொட்டிமாவில் யீஸ்ற் போன்று
நம் பிள்ளைகள் மனதிற் புரட்சியை விளைவிப்போம்.

(1LIDDA, 2RAMLA, 3GALILEE என்பன
இஸ்ரேலில் உள்ள ஊர்கள். இங்கிருந்த
பலஸ்தினியர் பலர் யூதக் குடியேற்றத்தின் விளைவாகத்
தம் மண்ணினின்று விரட்டப்பட்டனர்)

*- தமிழில் : மணி.*




இனி ஒரு வைகறை
கவிதைத் தொகுதி

கி.பி அரவிந்தன்

வெளியீடு:
பொன்னி
25 அருணாசலபுரம் பிரதானசாலை
அடையாறு,
சென்னை 20.

# குழந்தைகளுக்கான திரைப்படங்கள்

ஆண்டுதோறும் பல்வேறு நாடுகளிலும்,திரைப்படத்துறையினை ஊக்குவிக்குமுகமாகத் திரைப்பட விழாக்கள் நடாத்தப்பட்டு வருவதும், விழாக்களின்போது சிறந்த திரைப்படங்கள், திரைப்ப டக்கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டு உயர்விருதுகள் வழங்கப்ப டுவதும் யாவரும் அறிந்தவிடயம்.
'குழந்தைகளுக்காகவும் திரைப்படங்களா ?' எம்மில்பலருக்கு ஆச்சரியமான கேள்வி. ஆனால் சர்வதேசஅளவில் குழந்தைக ளுக்கான திரைப்பட விழாக்களே நடைபெற்றுவருகின்றன.
சென்றஆண்டு நவெம்பர் மாதம் இந்தியகேரள மாநிலத்தில் குழந்தைகளுக்கான ஏழாவது சர்வதேசதிரைப்படவிழா நடை பெற்றது. இதில் இந்திய,சீன உட்பட பல்வேறு பல்வேறு நாடுக ளையும் சேர்ந்த தொண்ணூறு திரைப்படங்கள் வரையில் கலந் துகொண்டன. திரைப்படத்தெரிவுக்குழுவில் சிறுவர்களே நடுவர் களாகவும் அங்கம் வகித்தல் குறிப்பிடத்தக்கஅம்சம்.
கேரளவிழாவின் போது திரையிடப்பட்ட ஒருசில படங்கள் பற்றிய குறிப்புக்களை 'சுபமங்களா' சஞ்சிகையிலிருந்து 'ஓசை' வாசகர்களுக்காகப்பிரசுரிக்கிறோம்.

## THE YOUNG TEACHER

92 நிமிட நேரப் படமான THe Young Teacherசாசங் என்பவர் இயக்கியது. மியாமியா என்பவள் தொடக்கப்பள்ளி ஆசிரியையாகப் பணியைத் துவங்கி எல்லோராலும் சிறப்பாக பேசப்படுகிறாள். அவளது அண்ணன் ஆசிரியப் பணியை வெறுப்பவன். மியாமியாவோ ஆசிரிய வேலைக்கு விருப்பப் பட்டு வந்தவள். பிள்ளைகளின் பெற்றோரால் அவளுக்கு பல கஷ்டங்கள் ஏற்படுகின் றன. அவளது வகுப்பில் எதிர்ப்புரட்சியாளர் ஒருவரின் மகன் படிக்கிறான். மியாமியா எவ்வளவுதான் முயற்சித்தும் அவனது முரட்டுத்தனத்தை மாற்ற அவளால் இயலவில்லை. வருத்தத்தில்
வேறு பள்ளிக்கு தன்னை மாற்றும் படி வேண்டுகிறாள். இந்தப்
படத்தின் கடைசிக் காட்சி நம்மை நெகிழச் செய்கிறது. கடற்கரையில் தனிமை யில் நிற்கும் அவளிடம் எல்லாப் பிள்ளைகளும் போய் நின்று தங்களை விட்டுப் பிரியக்கூடாது
என்று கெஞ்சுகின்றன. அதில் அந்த முரட்டுப் பையனும் ஒருவன்.
பள்ளிச் சிறார்களை எப்படி ஒரு ஆசிரியை அன்பால்வென்று வழிகாட்ட வேண்டும் என்பதற்கு இப்படம் ஒரு நல்ல உதாரணம்.

ABUJ-BENDU

இந்தியாவிலிருந்து கலந்து கொண்ட படங்களில் குறிப்பிட்டு சொல்ல வேண்டிய படம் குணசிந்து ஹசாரிகா இயக்கிய அஸ்ஸாமியப் படமான Abuj-Bendu. 85 நிமிடங்கள் ஓடக்கூடிய இப்படத்தின் இயக்குநர் பார்வையற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. பிரம்மபுத்திரா நதியில் வெள்ளப் பெருக்கால் ஏற்பட்டிருக்கும் பல தீவுகளில் வசிக்கும் மக்கள் .
ஒருவரைஒருவர் விரும்பாதவர்கள். ஒவ்வொருவருக்குள்ளும் தனிக் கலாச்சாரம் அதில் ஒரு கிராமத்தை சேர்ந்த பிண்டு, ஜோதி என்ற இரு சிறுவர்கள் இரண்டு தீவிலுள்ள மக்களை எவ்வாறு ஒன்றிணைக்கிறார்கள் என்பதே கதை. இப்படத்தில் ஒரு தொழுநோயாளியான பெண் வருகிறாள். ஊரில் யாருமே அவளுக்கு உதவி செய்வதில்லை. கீழே விழுந்தால் கூட தூக்கி விடுவதில்லை. அவளைக் கண்டால் அருவெறுப்பில் ஒதுங்குகின்றனர். காரித் துப்புகிறார்கள். ஒருநாள் பிரம்ம
புத்திராவில் விழுந்த ஒரு குழந்தையைக் காப்பாற்றிவிட்டு தனது உயிரை இழக்கிறாள். உயிருக்காக அவள் போராடும் போதும் அந்த ஜனங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்களே தவிர யாரும் அவளைக் காப்பாற்றவில்லை. இந்த தொழுநோயாளியான பாட்டியை சிறுவர்கள் நேசிக்கிறார்கள். பிண்டு, ஜோதி இவர்களின் சிறுபிள்ளைக் குறும்புகள் ஊரில் பசுக்களைக் கொன்று அட்டகாசம் செய்து வரும் புலியை வலை கட்டிப் பிடிப்பது போன்ற வீரச் செயல்கள் ஆகியவை அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளன. தங்களுடன் விளையாட வரும் ஒரு சிறுமி பெரியவளானதும் முன்போல் வராதது கண்டு அவளைத் தேடி வீட்டுக்குப் போனதும், அவளை வீட்டார் மறைப்பதும், பக்கத்திள்ள மரத்தில் ஏறி அமர்ந்து அவளைக் காண்பதும், அன்று தொழுநோயாளியான பாட்டியிடம் அதுகுறித்துக் கேட்பதும், அவள் மனிதனின் நிலை, வாழ்க்கையின் சுழற்சி,இவைகுறித்து எடுத்துரைப்பதும் நன்றாக உள்ளன. காணாமற் போன பிண்டுவும் ஜோதியும் பக்கத்து தீவில் கண்டுபிடிக்கப் படுகிறார்கள். அவ்வீட்டிலுள்ள சிறுமி இவர்களின் ஒன்றிணைப்பிலிருந்து மீளமுடியாமல் பிரம்மபுத்திரா நதியில் அவர்கள் படகில் திரும்பும் போது ஓடிவரும் காட்சியுடன் படம் முடிவடைகிறது.

DADDY'S EYES'

Daddy's Eyes' 12 நிமிடங்கள் கொண்ட முகமது ரேசாவிர்காங்கி
இயக்கிய படம். ஒருசிறுவனின் குற்ற உணர்ச்சியை மையமாகக் கொண்டது. ரேசா என்ற பையன் அவனது நண்பனிடமிருந்து ஒரு பென்சிலைத் திருடுகிறான். தனது தகப்பனாரின் போட்டோவைப் பார்க்கும் போது அது கோபமாகத் தெரிகிறது. காலையில் எழுந்ததும் நண்பனின் வீடுதேடிப் போய் அதைத் திருப்புகிறான். அவன் மனம் திருப்தி அடைகிறது. தகப்பனாரின் போட்டோ இப்போ அவனைப் பார்த்துச் சிரிக்கிறது. சுவரில் மாட்டப்பட்ட ஒரு படத்தை வைத்துக் கதையைக் கொண்டுபோகும் இந்த உத்தி புதுமையானது.

## THE OZONE LAYER VANISHES

பெனங் கியானிங் இயக்கி 94 நிமிடங்கள் ஓடக்கூடிய The Ozone Layer Vanishes என்ற சீனப் படம் மிக முக்கியமானதாகும். இப்படத்தில் இயற்கைப் பாதுகாப்பு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஆகியவை பேசப்படுகின்றன. இவை அனைத்தும் குழந்தைகளின் வாயிலாக, ஓசோன் படலத்தைப் பாதிக்கக்கூடிய ஒரு வாயு ரெயிலில் ஏற்றிச் செல்லப்படும் போது கசிந்து, அதைக் கொண்டு செல்கிறவர்கள் மரிக்கிறார்கள். விஞ்ஞானிகள் அறையிலிருந்து கொண்டு எங்கிருந்தோ ஒரு வாயு வருகிறது. அதனால் பெரிய ஆபத்து ஒன்று நிகழ இருக்கிறது என்று விவாதத்தில் ஈடுபடுகிறார்கள். ஒரு சிறு பையன் பூனை, நாய்,குதிரை போன்ற மிருகங்களின் துணைகொண்டு எவ்வாறு வெற்றி காண்கிறான் என்பதே கதை.

இப்படத்தில் மீன், புலி, மான் ஆகியவை பையனிடம் சுற்றுப்புறச்சூழலைப் பற்றி பேசுவதாக அமைந்திருப்பது தத்துரூபமாக எடுக்கப்பட்டுள்ளது. சாகப்போகும் நிலையில் ஒரு குட்டையிலுள்ள மீன் தன்னை இன்னொரு குட்டையில் கொண்டு போய் விடுமாறு கேட்கிறது. பையன் அதைத் தூக்கிக் கொண்டு போகும் போது விழுகிறான். கடைசியில் ஒரு வழியாக இன்னொரு குளத்தைக் கண்டுபிடித்து அதில் மீனைவிடப் போகும்போது அதுவும் தொழிற்ச்சாலையி லிருந்து வரும் கழிவு நீரால் அசுத்தமாகி இருக்கிறது. இப்படத்தில் ஒரு பெண் (வங்கிஒன்றைக் கொள்ளையடித்த கூட்டத்திடமிருந்து பணத்தையும், துப்பாக் கியையும் எடுத்து வருபவள்) வருகிறாள்.

அவளுடன் ஒரு டிரைவர், இந்தப் பையன், மூவரும் வாயு கசியும் ரெயிலண்டை நிற்கிறார்கள். டிரைவர் அதை அடைக்கப் போய் பலியாகிறான். அந்தப்பெண் அவ்விடம் விட்டு பாதுகாப்பாக ஓடிவிட நினைக்கிறாள். பையன் அவளிடம் இதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் இல்லையேல் மனிதகுலத்திற்கே ஆபத்து என்கிறான். அவள் நகரவே, அவளிடமிருந்து தவறிய துப்பாக்கியை எடுத்து நீட்டுகிறான். அவள் திரும்ப வந்து அந்த வாயுவை தீயினால் எரித்து அழிக்கும் முறையைக் கண்டுபிடிக்கிறாள். துரதிருஷ்டவசமாக அவளும் அந்த முயற்சியில் மரிக்கிறாள். கடைசியில் பையன் ஒரு தீப்பந்தத்தோடு தன்னையே அழித்து வாயுவை எரிக்க ஓடும் போது அவனுடைய நாய் அந்தத் தீப்பந்தத்தை கவ்விக்.. கொண்டு போய் தன்னைப் பலியிட்டு வாயுவை எரிக்கி றது.

இப்படத்தில் பணத்திற்காக மரங்களை வெட்டுதல் இயற்கையை நாசம் செய்தல் போன்றவைகள் விவாதிக்கப் படுகின்றன.இந்தியாவில் நடந்த போபால் குறித்து நமது சினிமா பேசாத போது இன்னொரு நாட்டில் அது குழந்தைகள் சினிமா வின் மூலம் பேசப்படுவது சிந்திக்கத் தக்கது.



# எனக்கொரு....

### சிறுகதை

....நான் 'ஏதோ' காதுக்குள் சொல்ல அனுவுக்கு வெட்கம் வந்தது. "சும்மா போங்கோ" செல்லமாகக் கோபித்தபடி முகத்தைத்திருப்பிக்கொண்டாள்.

....கிட்டநெருங்கிக் கையைப்பிடித்தேன். திமிறினாள்.

....விமானஇரைச்சல் போன்றொரு சத்தம் காதினுள் ரீங்காரமிட்டது.

...."கொஞ்சம் பொறு....பொறுங்கோ அனு" என்றபடி காதைக் கூர்மையாக்கினேன். அனுவும்தான். ஆனாலும் பிடித்தபிடி விடவில்லை. அனு என் அணைப்பிற்குள் இறுகிக்கொண்டாள்.

....விமான இரைச்சலேதான் ! சற்று உரக்கக்கேட்டது. திடீரென்று சத்தம் உச்சஸ்தாயிக்குப் போனது.

....அனு கைகளை உதறி விடுவித்துக் கொண்டு காதைப்பொத்திக்கீச்சிட்டாள்.

....நான் திடுக்கிட்டேன்.

....நேரெதிரே T.V யின் மேலிருந்த எலெக்ரோணிக்கடிகாரம் செவ்வொளியில் ஏழைக்காட்டியது.

....வெட்கமாக இருந்தது. குளிர் மெதுமெதுவாகக் காலிலிருந்து முழங்கால்வரை ஊர்ந்து கொண்டிருந்தது. பெட்சீற்றினால் உடம்பு முழுவதையும் இறுகச்சுற்றிக்கொண்டேன்.

....இடதுபுயம் திருப்பினேன். பின் வலதுபுயம் திருப்பினேன். மாறிமாறிப்புரண்டேன்.

....இனி நித்திரை வராது. முடிவாகிவிட்டது.

....இலங்கை நேரப்படி மணி பதினொன்றரை. 'இப்ப என்ர அனு Fly பண்ணிக்கொண்டிருக்கும்!'

....அனுஷியா! எவ்வளவு அழகான பெயர். பெயருக்கேற்றாற்போலவே தேற்றமும் அழகும். பானுப்பிரியா என்ன பெரிய பானுப்பிரியா! என்ர அனுவோட ஒப்பிட்டால் ஒரு மூலைக்குள்ள. மூன்றுமாதத்திற்குள் வந்திருந்த ஒரேஒரு போட்டோவும் எவ்வளவுதூரம் கசங்கிப்போய்விட்டது.

....இன்று வந்திறங்கப்போகிறாள் என்மகராணி! நாளை எப்படி இருக்கும்? இரவு! உடல்முழுதும் கூதல் ஓடியது.

....என்ன இது ! கல்யாணம் என்கிறது வெறுமனே 'ஸெக்ஸ்' தானா? அன்புக்கு அடிப்படை ஸெக்ஸா ? எங்கோ ஒரு புத்தகத்திலும் படித்ததாக ஞாபகம். அப்படியென்றால் எலும்பும் தசையும் சுருங்கியபின் வாழ்க்கையே இல்லையா ? ஆண் இன்னொருஆண் மீதோ அல்லது பெண் இன்னொரு பெண் மீதோ அன்பு கொள்வதென்பதெல்லாம் போலியா ? அடிக்கடி வந்துகொண்டிருந்த குழப்பம் அப்பவும் வந்தது.

....எப்படியோ எனக்கொரு துணை தேவையென்பதுமட்டும் என்னுள் ஒழிக்கமுடியாத உண்மையாக இருந்தது. ....அனு குடும்பம்

O - அஜித்குமார். O

கொழும்பில் இருந்தது எவ்வளவு வசதியாகப்போய்விட்டது. அம்மா,அப்பா, உற்றார்,உறவினர் எல்லோருமாகச்சேர்ந்து எனக்காகப் பேசிமுடித்து - இப்பவாவது - ஒப்பேற்றிய சம்பந்தம்.

....அவனவன் கட்டினமனைவியை இழுத்தெடுக்கவே ஆண்டாண்டா அலைய - நான் - அதுவும் பேசின கல்யாணம், மூன்றுமாதுத்திற்குள் கூப்பிட்டுஎடுப்பதென்றால் ....! சும்மாவா ?

....இனி நித்திரை வராது.

....எழுந்து அறையைச்சுத்தம் பண்ணத்தொடங்கினேன். வழமையை விட மாறுமாறாக எல்லாம் ஒழுங்குபடுத்தினேன். சாம்பிராணி கொழுத்துவோமா ? சீ ... ! என்ன இது ... பரிஸில இருந்து கொண்டு ..... !

....வாங்கிவைத்திருந்த விலை உயர்ந்த 'சென்ற்'ஐ அறை முழுவதும் விசிறினேன். கட்டில் தலையணைக்குக் கொஞ்சம் அதிகமாகவே. கட்டிலுக்க விசிறியபோது 'மௌனகீதங்கள்' பாக்கியராஜ் நினைவுக்கு வர சிரிப்புடன் கவலையும் சேர்ந்து கொண்டது.

....அரைப்போத்தல் காலி ! அறை 'கமகம' என்றிருந்தது.

ஒருமுறை திரும்பி நாற்புறமும் பார்த்துக்கொண்டேன். என்னுடைய 'கூத்துக்களை'ப்பார்த்துக் கொள்வதற்கு யாருமில்லை.

....நிம்மதி.

....நிமிர்ந்து அறையைப்பார்த்தேன். அட்டகாஷமாக இருந்தது.

....இருக்காதா பின்ன .... !

....ஒருமாதத்திற்கு முன்பே பண்ணிய ஏற்பாடு. அறை முழுவதும் பேப்பர் ஒட்டிப்பெயின்ற் அடித்து, நிலத்திற்கும்'காப்பற்' மாத்த ரெண்டாயிரம்பிராங் ஓடிஒழித்தது.

....மணிக்கூட்டுமுள் அசைவதாக இல்லை. மூன்றுமணிக்குத்தான் 'Flight' வந்திறங்கும். இப்பவே போய் என்ன செய்யிறது ?

....பாவம் அனு பசியோட வரும். Flight க்குள்ளயும் சாப்பிட்டிருக்காது. பச்சைஇறைச்சியள், இலைகுழையள், போதாததிற்கு கத்திகரண்டி வேற.

.....சமைத்துவிட்டுப்போவமா ? வேண்டாம். பிறகு அறைமுழுவதும் சமையல்மணம் கொள்ளும். எப்படியோ முதன்முதல் வீட்டுக்கு வாற மகாலக்ஷ்மியை சென்ற் வாசம் வரவேற்கட்டுமேன் !

....பதினொருமணி. வெளிக்கிடத் தொடங்கினேன்.

....ஏற்கனவே Iron பண்ணிவைத்திருந்த Trouser Shirt தான். இருந்தாலும் கொஞ்சம் கசங்கிக்கிடந்தது. திரும்பவும் Iron பண்ணியபின் போட்டுப்பார்த்தேன். Trouser ற்குச் Shirt Much பண்ணுவதாக இல்லை. மாறிமாறி உள்ள Shirts எல்லாம் போட்டுப்பார்த்து ஒருவாறு போட்டு முடித்து 'ரை'கட்டிச் சப்பாத்தும் போட்டுநிமிர ஒருமணியாகிவிட்டது.

....நேரம் மட்டு மட்டு. ஓட்டமும் நடையுமானேன்.

....பஸ்ஸிற்குள் இருக்கிறேன். ஆனால் மனம் மட்டும் எங்கேயோ.

....காசுபோனாலும் ஏஜென்ஸிக்காரனை நம்பேலாதென்று 'இமிக்கிறன்ற்' விசாக்காரனைப்பிடிச்சனான். இவனும் வழியள்ள ஏதாவது சேட்டை விடுவானோ ?

....கொலை விழும் ! ராஸ்கல் !

....உருத்திரன்ரை'வைவ்' வந்து சொன்னது இப்பவும் நெஞ்சில நிக்குது. "ஏஜென்ஸிக்காரங்கள் படுமோசம். கெட்டநாயள். நடுவழில கொணந்து வைச்சுக்கொண்டு கண்டமாதிரியெல்லாம்நடந்து கொள்ளுவாங்கள். இல்லைண்டா திரும்ப சிலோனுக்கு அனுப்புவம் எண்டும் வெருட்டுவாங்கள்." ...."பாங்கொக்கில ஆயிரம் சனத்துக்கு மேலயாம் - இஞ்சகொணந்துவிடுறம் எண்டு காசைவாங்கிப்போட்டு அங்ககொணந்து அகதியளாப் பதிஞ்சுவிட்டுட்டுப் போட்டாங்களாம். இவங்களெல்லாம்.............."

....பரஞ்சோதி அண்ணையின்ரை சாபத்துக்குமட்டும் சக்தியிருந்தால், உந்த ஏஜென்ஸிக்காரங்களெல்லாம் எங்கையாவது பிளேனோட வெடித்துத்தான் சிதறுவான்கள்.

....Airport ல் சிறிதுநேரம் காத்திருந்தேன்.

....U.T.A. வந்விட்டது. ஆனால்

இவர்களைக்காணேம்.
....ஏதாவது சிக்கல்ல .... !
....தூரத்தே Light blue கலரில் ஒரு சாறி. 'போட்டோ'வில் பார்த்த அதே என் இதயராணி. அழகு தேவதை. மெல்ல மெல்ல அடிஎடுத்து வைத்துக்கொண்டிருந்தாள்.
....எனக்கோ இதயம் படபடத்துக் கொண்டது. இதென்ன இது ! ஏன் இப்படி ! புரியவில்லை.
....கிட்டப்போனேன். கிட்டவந்தார்கள்.
....நான் அனுவைப்பார்த்து மெதுவாகச்சிரித்தேன். அனு பேயறைந்தவள் போல நின்று கொண்டிருந்தாள். எனக்கு வியர்த்தது.
....ஓ ! தமிழ்ப் பெண் யிற்றே ! பயப்பிடட்டும் பயப்பிடட்டும். பிறகு பார்க்கலாம்.
....கூட்டிவந்தவன் முந்திக்கொண்டு வந்து கையைத்தந்தான்.
....அவனது 'பிசகு' ஏற்கனவே வெட்டியிருந்தபடியால் அவனும் 'படக்' கென எங்களை வெட்டிக் கொண்டான்.
...."வாங்கோவன்" என்று அசடு வழிவதைப்போல சொல்லிவிட்டு நடந்தேன். அனு பின்தொடர்ந்தாள்.
....பஸ்ஸில் ஏறி அமர்ந்து கொண்டோம். எனக்கு எதிர் இருக்கையில் அமர்ந்தாள்.
....ஏன் ! பக்கத்தில இருக்கலாமே ! நினைத்தேனேதவிர கேட்டுக் கொள்ளவில்லை. எனக்கும் வெட்கமாக இருந்தது.
....பஸ் புறப்பட்டது. இருவரும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை.
....ஏ ! முண்டம் ! ஏதாவது கதையன்ரா பொம்பிளையா வலிய உன்னோட கதைக்கப்போறாள் ? கடைசி சாப்பிட்டீங்களா என்றாவது கேளன். ஜடம்!ஜடம் !! யாரோ என்னுக்குள்ளிருந்து கொண்டு என்னையே திட்டினான்கள்.
....ஆனாலும் நான் எதுவுமே கதைக்கவில்லை. நெஞ்சு மட்டும் படபட வென அடித்துக்கொண்டிருந்தது. அனுவுக்கும் அப்படித்தான் இருந்திருக்கும்.
....கையிலிருந்த Times ஐப் புரட்டினேன். போகும்போதே நாகரீகத்திற்காகக் கொண்டு போனது. 'எதெது நாகரீகம் எண்டு தெரியாதென்ர புத்தி எப்பதான் மாறுமோ ?' கஷ்டப்பட்டுக்கஷ்டப்பட்டு வாசித்தேன். ஒரு மணித்தியாலம் ! ஒரு பந்தி கூட நகரவில்லை. எப்பிடி நகரும் ?
....இடையிடையே நிமிர்ந்து பார்த்தேன். குனிந்தபடி இருந்தாள். வெக்கம் போல - என்னைப்போலவே.
....எனக்குக் கஷ்டமாக இருந்தது. ஒருவாறு வீடுவந்துசேர்ந்தோம்.
....திரும்பிப்பார்த்தேன்.
....வலதுகாலைத்தூக்கி வைத்து உள்ளே வந்தாள். தெய்வாம்ஸம் மிளிர்ந்தது.
....கதவைத்திறந்தேன். வயிறு குமட்டியது. அளவுக்கதிகமான 'சென்ற்'. பிள்ளையார்பிடிக்கப்போய் குரங்காட்டம் ஆடிநின்ற என்னைப் பார்க்க எனக்கே பரிதாபமாக இருந்தது.
....யன்னலைத்திறந்து விட்டேன்.
....வீட்டுக்குள் வந்து கதவைத்தாளிட்டதும் என்னை அறியாமலே என்னுள் ஒரு தைரியம் பிறந்தது.
...."என்ன பேசாமலே வாறீங்கள் ?"
....அனு சிரிப்பாலேயே பதில் சொல்லியிருக்கவேணும். நான் பார்த்தால்தானே ?
....தடக்குப்பட்டால் ஏதாவதொரு பொருளுக்குமேலயே விழுந்தெழும்பவேண்டிய அளவில் இருந்த என்னுடைய Room ஐக்காட்டி, இது தான் எங்கட 'வசந்தமாளிகை' என்றேன்.
....பெரியபகிடி ஒன்றை விட்டவன் போல நான் மட்டும் சிரிக்க அறை அமைதியாகவே இருந்தது.
....அசடு வழிந்தது.
...."ரீ குடிக்கிறீங்களா?" மௌனத்தைக்கலைப்பதற்காகவும் கேட்டேன்.
....அனு தலையசைத்தாள். சிரித்துக்கொண்டாளோ இல்லையோ எனக்குச் சிரிப்பது போலவே இருந்தது.
....'ரீ' போட்டேன்.
....அட, ஒருசம்பிரதாயத்துக்காவது

....'நான் ஒரு புருஷன்' ரீ போடுறன் ... விடுங்கோ எண்டாவது ......

....சரி,பரவாயில்லை. எங்க எங்க சாமான்கள் இருக்குதோ எண்ட குழப்பம் - அல்லாட்டி இன்னும் பயம் போகாமல் இருக்கலாம் !

....ரீ யைப்போட்டுக்கொடுத்தேன். தயார்நிலையில் வைத்திருந்தது போலவே கடிதம் ஒன்றை எடுத்து நீட்டினாள்.

....'திக்' என்றது.

....அவசரமவசரமாகப்பிரித்தேன்.

...."மதிப்பிற்குரியவருக்கு,

தயவு செய்து முதலில் என்னை மன்னியுங்கள்" என்று தொடங்கியது.

....தொண்டை வறண்டது. கஷ்டப்பட்டு எச்சிலை வருவித்து விழுங்கிக்கொண்டேன்.

......... தனக்கு ஒருகாதலன் இருப்பதாகவும், 'அந்தஸ்து' குறைவு என்ற காரணத்தினால் பெற்றோர்கள் அதைத்தடுத்து நிறுத்தித் தன்னை இங்கு அனுப்பியதாகவும், எத்தனையோ தடவைகள் என்னுடன் தொடர்புகொள்ள முயற்சித்தும் முடியாமல் போனதாகவும், எப்படியும் தன்னைக்காதலனுடன் சேர்த்துவைக்கும்படியும், மன்றாட்டமான விரிவான கடிதமொன்று .........

....எனக்கு அடக்கமுடியாதபடி அழுகைவந்தது. கைகள் நடுங்கின. தலை கவிழ்ந்தது. யோசித்தேன் - ஆழமாக.

....தவறு என்னுடையதுதான். அட, எத்தனைதடவைகள் 'மாமா மாமி'யுடன் ரெலிபோன் ல கதைத்திருக்கிறன். ஒரு தடவையாவது அனுவோட ....? சேர்ந்துவாழப் போறன், கடைசி அனுவின்ர சம்மதத்தையாவது ........ !

....என்னால் அடக்கிக்கொள்ளமுடியவில்லை. கண்களில் திரையிட்டிருந்த நீர்த்துளிகளை விரலினாற் சுண்டிவிட்டுக்கொண்டேன்.

அனு கண்களைப்பொத்தி விக்கிவிக்கி அழுதுகொண்டிருந்தாள்.

---

## ஒருவிமர்சனம்

.....ஒசை(இதழ்8)ல் கி. பி. அன் எழுதிய தகவல்கள் மீது கவனயீனம் உள்ளது. உதாரணமாக தம்பிமுத்து துரைராஜா என்பவர் உண்மையில் துரைராஜா தம்பிமுத்து என்பவர். லண்டனில் இந்நூற்றாண்டின் முன் - இடைப்பகுதியில் வந்து இருந்த யாழ்ப்பாணத்தவர். தம்பிமுத்து ஒரு நல்ல கவிஞர், கவிதை ஏடு வெளியிட்டவர் ஆயினும் அவரது சமுதாய உணர்வு மிகவும் கேள்விக்குரியது. அந்நியர் எம்மை அங்கீகரித்தால் / பாராட்டினால் நாமெல்லாம் குதூகலிக்கத்தான் வேண்டுமா? நமக்கென்று தராதரங்களும் நம்மீது நம்பிக்கையும் மதிப்பும் எவரது அங்கீகாரத்தையும்விட முக்கியமானவை.

பாரதிதாசன் பாரதியார் செல்வாக்கினால் பாரதிதாசன் ஆனார் என்பது பாரதி மீதான அன்பினால் பாரதிதாசன் ஆனார் என்ற விசயத்தைத் தெளிவாக்கத்தவறிவிடுகிறது. சொற்பிரயோகத்தில் கவனம் அவசியம். 'கண்டது கேட்டது' பகுதியில் வதந்திகளைத் தவிர்ப்பது நல்லது.

- சி. சிவசேகரம்

# • எவரிலும் இளகுமனம் தமிழிற்கு..

இன்னமும் ரத்தஜுவாலை
அடிவயிற்றை
ரணமாக்கும் நினைவோடு

சொந்தமும் ,அயலும்
முற்றம் கூடி
சுமந்துவந்த துயரம்
கொட்டும்.

தென்னகம் எங்கும்
தலையிழந்த குழந்தைகள்
மார்பிழந்த பெண்கள்
உயிரிழந்த தர்மம்
அவலம் பார், அங்கு
பௌத்தம் கூட தலைமறைவு
வாழ்வினில்
வரண்ட மண்விட்டு
செழித்து வரப் போனவர்
உடைமையென்று
சிறுசாம்பல்ப் பெட்டகத்தோடு
திரும்பக்கண்டு
முழுமுற்றமும் புலம்பும்.

"அவர்களுக்கோ
அரக்கர் நெஞ்சம்
அரக்கர்களுக்கோ
மதுவிலும் மனிதரத்தத்திலும்
சுவை அதிகம்

அவர் போன்றோ நாம் ?
இல்லவே இல்லை !
வெண்ணையிலும் இளகுமனம்
தமிழிற்கு,
புல் நுனி அரியார்
வதையென்று

எறும்புக்கும்,புழுவுக்கும்
எம்மூச்சிடைக்காற்றே
சொறியும்,துன்பமெனத்துடிப்பர்!"

ஏகமான முடிவு கேட்டு
எனக்கோ
தமிழனெனப்பெருமைப்போதை !

எல்லாமே
சென்ற கணம் நடந்ததாகவே
மனம் உணரும்
ஓர் ஏழுவருடம்
கழிந்ததாகக் கூறின் ஆச்சரியம்தான்!

இப்போதும்
சொந்தமும் அயலும்
முற்றம் கூடும்.
முன்னர் போலல்ல
ஆகாயம் விரிந்த யமனின் விழிகளுக்கு
மறைவுதேடி
மரத்தோடு ஒடுங்கியபடியே.
கொலைக் குண்டென்றும், வெளிநாடென்றும்
எம்மிடையே
இல்லாது போயினர் பலர்.

தொடக்கிவைத்தார்
முதிர்ந்த மானிடர்.
"சிறுமீனைப் பெருமீனும்
பெருமீனை அளவிலாப் பெருமீனும்
உண்டகதை
மெய்யாலும் விரியுது கண்ணெதிரே.

தொழுநேரம் கூட
பொறுக்கார் கொடூரர்
தொழுகூடம் ஊடுருவிச்சிதைத்தார்
குழந்தைகள் தலையைக்கூட.

ரத்த வாடை பட்டு
தெய்வம் கூட மூச்சை இழந்தது.
திரும்பிய வழியில்
பசியென்று உணவிட்டவரின்
கைகளை முறித்து
மறைவிடம் தந்தவரின்

கழுத்தைத் திருகி
'நன்றி' சொல்லிச் சென்றனர்.

அவர்களுக்கோ பன்னாளாய் தாகம்
தாகம் போக்க
மூலஸ்தானம் மீதேறி
இரத்தாபிஷேகம் புரிந்தே முகிழ்ந்தனர் மகிழ்வில்.
தடுக்கவென்று புறப்பட்டகூர்
இவரோ
கோபுரக்கலசம் நீங்கி
அரிந்த தலை வைத்து
அழகு பார்த்தாரே? கொடூரம்!

வந்தாரை வாழவைக்கும்
தமிழர் பண்பாடு
ஏதுமறியாரை
உடுதுணியோடு துரத்தும்
கலையைப் பெற்றது எப்போது?
கேவலம் தமிழனெனக் கூறின்!
வெகுண்டு எழுந்தன
'தமிழ் நெஞ்சங்கள்'.
"எம் பக்கம் இல்லாதவன்
ஒழியட்டும்
பூண்டோடு அழியட்டும்"
உதிர்த்தன நவீன மானிட தர்மங்கள்.

இரத்தயுலைப் பொழுதுகள்
மீண்டும்
என் காதோரமாய் நீண்டு
உதைக்கும்
'வெண்ணையிலும் இளகுமனம்
தமிழிற்கு,
புல்நுனி அரியார் வதையென்று.

எறும்புக்கும், புழுவுக்கும்
எம்மூச்சிடைக் காற்றே
சொறியும், துன்பமெனத் துடிப்பர்!.'

- *தம்பா.*


சினிமா இருமாத இதழ்.
தமிழில், அறிந்து கொள்வதற்கு ஏராளம்!

முயற்சிக்கிறது சலனம்!

## சலனம்

முகவரி

T.KALYANARAMAN
MADRAS FILM SOCIETE
22, THAYAAR SHAHIB,
2nd STREET,
MADRAS. SOUTH INDIA.

பிரதிகளுக்கு!

'ஓசை' முகவரியுடனும் தொடர்பு கொள்ளலாம்.

# மகாகவியின் அகலிகை : கதையுங் கவிதையும்.

- சி. சிவசேகரம்.

ஈழத்தின் அண்மைக்கால கவிஞர்களுள் நவீன சிந்தனையுடையோராயும் அதே வேளை மரபு சார்ந்தே கவிதை எழுதினோராயும் இருந்தவர்கள் மகாகவியும் முருகையனும். மகாகவியின் அரசியற் பார்வை மிகவும் ஆழமானதல்ல. ஆயினும் அவரது மனித நேயமும் நியாய உணர்வும் வலுவானவை. அவரது நகைச்சுவையு ணர்வை அவருடைய குறும்பாக்களிற் தரிசித்தவர்கள் அவரது நியாய உணர் வையும் மனிதாபிமானத்தையும் அவரது பலவேறு கவிதைகளிலும் பா நாடகங்க ளிலும் கண்டிருப்பார்கள். பெண்ணுரிமை பெண்ணிலைவாதம் போன்ற விஷயங்களில் இன்றைய பெண்ணிலைவாதிகள் ஏற்கக்கூடிய நிலைப்பாடுடை யவராகஇருத்தல் சாத்தியமில்லை எனினும் பெண்களின் சமுதாய உரிமைகள் பற்றிய அவரது உணர்வு சமகாலத் தமிழரது நிலைப்பாட்டில் வைத்துப் பார்க்கும் பொழுது மிக முற்போக் கானதே. திருமண உறவு கற்பு என்ற விஷயங்களில் அவர் நடைமுறையிலுள்ள சமுதாய விழுமியங்களை நிராகரிக்கவில்லையெனினும் ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்புக்கான வெவ் வேறு நீதிகளை வலியுறுத்தியவரல்லர். இந்த வரையறைகளை மீறாமல் அகலிகை பற்றிய புராணக் கதைக்கு அவர் தரும் கவித்துவமான புதிய வியாக்கியானம் கீழே உள்ளது.

---

## மஹாகவி (1927-1971)

*யாழ் குடாநாட்டைப் பிறப்பிடமா கக் கொண்டவரும் - அளவெட்டி - து.உருத்திரமூர்த்தி என்ற இயற் பெயரையுடையவருமான மகாகவி பண்டிதன்,புதுக்கம்பன், புதுநாப்பு லவர், மாபாடி,மகாலட்சுமி முதலிய புனைபெயர்களில் எழுதியிருக்கி றார். இவர் பாடசாலைக் கல்வியை 19வயதில் முடித்துக் கொண்டு அரச எழுதுவினைஞராகப் பணி யாற்றினார். மரணித்த போது C. A.S. அதிகாரியாக இருந்தார்.*

*1943 முதல் பத்திரிகைகளில் இவ ரது கவிதைகள் பிரசுரமாகின. முதலிற் சிலசிறு கதைகளையும் எழுதினாலும் பின்னைய எழுத்து முழுவதும் கவிதை சார்ந்தே அமைந்தது. ஐந்து காவியங்களும் மூன்று மேடை பா நாடகங்களும் பத்து வானொலிப் பா நாடகங்களும் எழுதிய இவர் பெருந்தொகையான கவிதைகளை எழுதினார். பரீட்சார்த்தமான முறையில் Limeride எனும் வடிவத்தை தமிழில் புகுத் துமுகமாக இவர் எழுதிய வேடிக் கையான கவிதைகள் குறும்பா எனும் தொகுப்பில் வந்தன. இவ ரது கவிதைகள் மரபு சார்ந்தே அமைந்தன. நிச்சயமாக 20ம் நூற்றா ண்டின் சிறந்த தமிழ்க் கவிஞர்க ளுள் மகாகவி ஒருவர் எனலாம். 1955 - 56இல் தேன் மொழி எனும் கவிதை ஏட்டின் ஆசிரியராக இருந் தார்.*

*பிரசுரமான நூல்கள்.*

*வள்ளி(1955), குறும்பா(1966), கண் மணியாள் காதை(1968),கோடை (1970), ஒரு சாதாரண மனிதனது சரித்திரம் (1971), வீடும் வெளியும் (1973), இரண்டு காவியங்கள் (1974), புதியதொரு வீடு (ஆறுநாடகங் கள், 1979, தொகுப்பில் இடம்பெற் றது )*

# அகலிகை

இந்திரன் இறங்கி வந்தான்  இமயத்தின் அடிவா ரத்தே
சந்தனம் கமழும் மார்புச்சால்வையிற்சரிகை மீதில்
பிந்திவந்தெறிக்கும் தேய்ந்த பிறையின் செந் நிலவு பட்டுச்
சிந்திற்று, மருண்டங்கே ஓர் சிள்வண்டு வாய் மூடிற்றாம்

கற்களிற் படாத காலில் கழல் ஒலி கிளம்ப வில்லை
நிற்கவும்  இல்லைத், தோள்கள் நிமிர்ந்தவன் நடந்து சென்று
புற்றரை அடைந்த போது பாதத்தைப் பொறுக்க வைத்தான்.
சிற்றாற்றின் அரவம் கேட்டுச் செல்கின்றான் அதனை நாடி.

பாதையில் விடியும் போது பகல்போல விரியப் போகும்
போதினைப் பிடுங்கிகைக்குள் பொத்தினன், மோந்து பார்த்தான்.
ஆதலும் வாழ்ந்தோர் நாளில் அழிதலு மான இந்த
மேதினிச் சிறப்பைக் கண்டு வெறுத்தாலும் கவர்ச்சி கொண்டான்.

கையினில் நீரை அள்ளக் குனிந்தவன் களைப்பைத் தீர்த்தான்.
ஐய, எச் சுவையும் அற்றும் தேவரின் அமுதை வென்றி
செய்ததைச் சிந்தித்தானோ? சிரித்தனன் சிறிது, முன்னர்
கொய்தபூக் கீழே வீசிக் குகை ஒன்றைக் குறுக லுற்றான்.

முத்தினால் நிறைந்த வான முடி,இந்த நிலத்தில் உள்ள
அத்தனை பட்டும் ஒவ்வா அழகிய நிறமேலாடை
கத்தி, காற்செருப்புக் காப்புக் கழற்றி,ஓர் ஒதுக்குத் தேடி
வைத்துப்பின் திரும்பிப் பள்ள வழியினைத் தொடர லானான்.

இருட்டிலும் நுழைய வல்ல இந்திர நோக்கிலே, அம்
முரட்டுவான் மரங்கள் சூழ்ந்து முதிர்ந்த காட்டிடை நீர் ஓடும்
புறத்திலே, கமுகும் தெங்கும் புலப்பட, இரண்டு கண்கள்
உருட்டினன் ஊன்றி நோக்கி உள்ளதோர் குடிலும் கண்டான்.

வேலியில் முள் இல்லாத வெண்டியை மெல்லத் தாண்டக்
கோழிகள் விழித்துக் கொண்டு குசுகுசுத்தன மாங்கொப்பில்.
ஓலையோ டிழைத்த தட்டிஓட்டையில் நாட்டம் வைத்து
மாலுண்ட வானக்காரன் மறுகினான் நோக்கி நோக்கி.

அகலிகை தளிர்க்கை கொஞ்சம் அசைந்ததும், அருகில் தூங்கும்
மிகுதியாய் நரைத்த நெஞ்சுக் கோதமர் மேற்படர்ந்து
புக, இவர் விழித்துப் பார்த்துப் பொழுதாயிற் றென்ப தெண்ணி
அகன்றதும், ஆனயாவும் அவன் அங்கு நின்று கண்டான்.

ஆதரவு அயலிற் தேடி அலைந்தகை விரல்கள் மீண்டு
பாதிமூடாமென் மார்பிற் பதிந்தன. நெளிந்த வாயின்
மீது, புன் முறுவல் மீண்டும் விளைத்தனள், முயன்று பின்னர்
மாது குப்புறப் புரண்டு மணையினை அணைக்க லானாள்.

கோதமர் நடந்து சென்று குந்திய கல்லின் மீது
சாதலே நிகர்க்க ஏதோ தவம்புரிந் திருந்தார், வீட்டில்
காதலின் பிடிப்பிற் சிக்கிக் கலங்கினாளது கால் மாட்டில்
நீதிகள் நினையா னாகி நெடும்பிழை இழைப்பான் நின்றான்.

காட்டுக்குள் அமைந்தும், அந்தக் கடும்தவமுனிவர் செய்த
வீட்டுக்குள், இன்று மட்டும் விலங்குகள் நுழைந்த தில்லை.
பாட்டுக்கோர் உருப்போல்வாளைப் பச்சையாய்க் கண்ட போதை
ஈட்டிபோல் இதயத் தேற இந்திரன் எதுசெய் தானோ?

துடித்தனள், எனினும் பட்ட துன்பினுள், வலியோன் கைக்குள்
பிடித்தது பிடித்ததால் அப்பிடி பிடி கொடுத்தாள், வந்த
அடுத்தவன் அழுத்த மாக ஆசைகள் புதைக்கக் கண்கள்
எடுத்துநோக்காது சோர்ந்தும் உலகையே இழக் லானாள்.

பித்தம் கொண்டவனைப் போலப் பிதுங்கிய விழியிற், காதல்
அர்த்தங்கள் சிதறிப் பாய அவள் உடல் தனதேயாக்கி
முத்தங்கள் பறித்தான் அன்னாள் முகம் முழுவதுமே, இன்பிற்
கத்துங்கால் மாது சற்றே கண்ணிமை திறந்து போகப்...

பார்த்ததும் துவண்ட மேனி படபடத்திட மேலெல்லாம்
வேர்த்தது. வேர்த்த போதே விறைத்தத, விறைப்பு மூச்சை
நூர்த்தது ,நூர்ந்து போனாள். நொடியிலே நொடிந்து கண்கள்
பார்த்ததே பார்த்த பாங்கிற் பாவை கல்லாகி விட்டாள்.

அந்தரத் தவர்கள் வேந்தன் ஆயிரம் உளைவை நெஞ்சிற்
தந்தவள் நிலையைக் கண்டு தான்மிகக் குறுகிப் போனான்.
வந்தவர் முனிவர் நேர்ந்த வகையினை அறிந்து கொண்டு
தம்தொழில் பிறிதென்பார்போல் தாடியை வருடி மீண்டார்.

நில்லாமல் நழுவியோடி நீங்காத வாழ்விலே தன்
பொல்லாமை நெடுக நோண்டப் புண்ணுண்டான் தேவராசன்.
எல்லாம் போய்க் கல் ஒன்றாக எஞ்சிய பாழிடத்தே
நல்லார்கள் மிதிக்கத் தக்க நாள்வரை கிடந்தாள் நங்கை....

புராண மரபையும் உலக யதார்த்தத்தையும் அவர் பின்னிப் பிணைக்கும் பாங்கை அவரது வர்ணனைகளிலும் காணலாம். இந்திரன், தேவன் என்பதை அவனுடைய 'கற்களிற் படாத காலிற் கழல் ஒலி எழும்பாமையும்' பூமியில் யாக்கை நிலையாமையும் ஓடை நீரின் சுவை களைத்திருந்த தேவேந்திரனுக்கு அமுதை விட இனித்தமையும் சுட்டிக் காட்டுகின்றன. ஆயினும் புராணக் கதையிற் போன்று அவன் பூனை வடிவில் கௌதமரின் குடிலுள் நுழைய வில்லை. அவன் அகலிகையை நெருங்கும் போது சாதாரண மனிதன் போன்றே செயற்படுகிறான். ஆயினும் குடிசைக்குள் நுழைந்த காமுகன் பூனை வடிவிற் புகுந்தான் என்ற புராண மரபைக் கூறாமல் அன்று வரைகௌதமர் குடிலினுள் விலங்குகள் நுழைந்த தில்லை என்கிறார். அகலிகை விடியற் காலைத் துயில் மயக்கத்தில் இந்திரனுடைய அணைப்பில் இன்பம் பெறுகி

றாள் என்பதும் மூலக்கதையின் அமைப்பில் ஒரு மாற்றமே. எனினும் அவரது கவித்துவத்தின் மேன்மையும் கற்பனை வளமும் இந்திரன் மேலெல்லாம் புண்ணுண்ட கதையையும் அகலிகை கல்லான கதையையும் சொல்லும் இடத்தில் தான் மிகச் சிறப்பாகக் காணப்படுகிறது.

தன்னை அணைத்தவன் இந்திரன் என்று கண்ட கணத்தே அதிர்ச்சியுண்டு விறைத்துக் கல்லானாள் அகலிகை; அவளது நிலை கண்டு குறுகிப் போன இந்திரன் குற்ற உணர்வாற் புண்ணுண்டான். இவ்வாறு கௌதமரின் சாபத்தாலன்றி இருவருக்கும் குற்ற உணர்வே அவரவர்க்கு ஏற்பட்ட கதிக்கு காரணமாயிற்று என்கிறார்.

மகாகவியின் இக் கவிதையில் அவர் நம் சமுதாயத்தின் மரபு சார்ந்த ஒழுக்க நெறிகளையோ சமுதாய விழுமியங்களையோ நிராகரிக்கவில்லை. ஆயினும் இந்திரனுக்கும் அகலிகைக்கும் ஏற்பட்ட உறவைத் தற்செயலான ஒரு சம்பவமாகவும் சாபத்துக்குரிய ஒரு குற்றமாக அன்றி வருத்தத்துக்குரிய ஒரு பிறழ்வாக மனிதாபிமானத்துடன் காட்டுகிறார். நான் முன்னர் ஒருமுறை எழுதியது போன்று அகலிகை பற்றிய புதிய ஆக்க இலக்கிய வியாக்கியானங்கள் பெண்ணுரிமை, பாலுறவு, கற்பு போன்ற விஷயங்களில் இன்னும் நவீனமான சமத்துவ நோக்குடைய பார்வையை மேற்கொள்ள இடமுண்டு. ஆயினும் மகாகவியின் பங்களிப்பு நல்லதொரு திசையில் அழகானதொரு நகர்வு என்ற வகையில் தனக்கெனவொரு தனி இடத்தைப் பிடித்துள்ளது.

மகாகவியின் சொல்வன்மை அவரது வர்ணனைகளில் வரிக்கு வரி பிரகாசிக்கிறது. சிலேடைகள் ஒன்றிரண்டு (அப்பிடி
பிடி கொடுத்தாள், நொடியிலே நொடித்து) நடுவே வந்தாலும் தனது கவியாற்றலின் வெளிப்பாட்டுக்கு அவர் அவற்றைச் சார்ந்து நிற்பது அருமை. மரபுக் கவிதை கவியாற்றலுக்குத் தடை விதிக்கிறது என்று சொல்லிப் புதுக்கவிதை எழுதுவோர் மகாகவி போன்றவர்களது படைப்புக்களைப் படித்தால் மரபுக் கவிதை வடிவத்தை மட்டும் அல்லாமற் கவித்துவத்தின் பிற அழகியல் அம்சங்கள் பலவற்றையும் பல புதுக் கவிராயர்கள் தவறவிட்டுள்ளமையைக் காணக் கூடும். மகாகவி என்றேனும் புதுக்கவிதை எழுதமுனைந்திருப்பாரோஎன்பது எனக்கு நிச்சயமில்லை. ஆயினும் அற்புதமான கவித்துவமும் புலமையும் தம்மகத்தே சங்கமித்த அண்மைக்காலப் படைப்பாளிகளுள் மகாகவியை ஒருவராக அடையாளம் காட்டும் அவரது பல ஆக்கங்களுள் அகலிகை முக்கியமான ஒன்று.


*



## எழுத்தாளர் எஸ்.அகஸ்தியர் பரிசு பெறுகிறார்.

தமிழ் இலக்கியச் சிறப்புகளைக் கௌரவிக்கும் வகையில் கடந்த ஆண்டு தமிழக அரசினால் தேர்வு செய்யப்பட்ட 40 நூல்களில் எஸ். அகஸ்தியர் அவர்களின் 'மேய்ப்பர்கள்' சிறுகதைத் தொகுதியும் தேர்வாகியுள்ளது.

*- கி.பி. அன்.*



# பகிர்வு

காலஇடைவெளி அகலிக்க நிரம்பல்களும் கனதியாகின்றன. பகிர்வுக்கு எதை அள்ளுவது, எதைத் தள்ளுவது சற்றுத் திணறலாகவே இருந்தது. இருப்பினும் முடிந்தவரை....

O

பொங்கல் கழிந்து மாதமொன்றுக்கும் மேலாகிவிட்டது. பொங்கல் என்ன பொங்கல் என்றும் அலுத்தும் கொண்டாயிற்று. இருந்தும் பொங்கல் எனக்குள் இன்னமும் பொங்கிக் கொண்டே இருக்கின்றது.

பொங்கல் சைவக்காரருக்குரியது, இந்துகளுக்குரியது என்ற வியாக்கியானங் களும், விளக்கங்களும் இருக்கின்றன. ஆயினும் பொங்கல் உழவும், பயிர்த்தொழிலும் என்னும் உழைப்பும் உற்பத்தியும் சம்பந்தமானது.

பொங்கலில் மதப்பூச்சு படிந்துள்ள போதிலும் அது ஒரு கலாச்சார அடையாளம், மரபின் தொடர்.

தமிழ் நாட்டில் பொங்கல் 'தமிழர் திருநாள்' என்றே கொண்டாடப் படுகின்றது.

கத்தோலிக்க மதத்தவரும் தங்கள் தேவாலயங்களுக்கு வெளியே பொங்கு கின்றார்கள்.

இஸ்லாமிய மதத்தினரிடையேயும் - விவசாயம் செய்வோரிடை இக்கலாச் சார கூறுகள் இருக்கின்றன. மத அடிப்படைவாதம் கூர்மையடைந்ததன் பின் இவை அருகியுள்ளன.

இப்பொங்கலை தமிழ் பேசும் மக்களின் கலாச்சார அடையாளமாய் காணுதல், அதை இயக்கமாய் கொள்ளுதல் இன்றைய தேவை என்றே கருதுகின்றேன்.

உலகெங்கும் சிதறி வாழ்தல் என்பதும், மதங்களால் பிளவுண்டு அந்நியப் படுதல் என்பதும், நிர்பந்தமாயும், இயல்பாயும் மாறி விட்ட 'அழிவு அபாயத்துள்' நாம் வாழ வேண்டியவராய் உள்ளோம். பல்வேறு காரணி களால் அருகிச் செல்லும் மனித விழுமியங்களை மீட்டெடுக்கவும், நம் அடையாளத்தை பேணவும், நம் இருப்பை உறுதி செய்யவும் "கலாச்சார ஒன்றித்தலும்", "கலாச்சார புத்தமைவும்" அவசியமானதாகும். பொங்கலும், பொங்கல் நாளும் பற்றியதான சமூக ஒழுங்கமைவு பற்றி ஆற்றல்மிக்கோ ரும், சமூக உணர்வுடையோரும் சிந்திப்பாராயின்.........

O

திடீரென இம்மாதத்தில் ஒருநாள் நான் மூன்றாம் உலகெங்கும் வியாபித்து பல்கிப் பெருகியவன் போலவும், ஆங்காங்கே வாழ்ந்தவன் போலவும் உணர்வு கொண்டேன். இப்போதும் கூட என்னால் மீள முடியவில்லை. முதலாம் உலக நாடொன்றின் வாழ்வு சூழலின் அந்நியமும் காரணமாக லாம். இருப்பினும் இலக்கியம் எதனையும் விளைவிப்பதில்லை, சாதிப் தில்லை என்பவர்கள் பொய் சொல்லுகின்றார்கள் என்பேன்.

இலக்கியம் காலத்தை, வாழ்க்கையை பதிவு செய்கின்றது என்பது ஆகக் குறைந்த செயலாகும். அதன் உச்ச வெளிப்பாடுகளை சுதந்திரம் மறுக்கப் பட்டோரிடமும், அடக்கு முறைக்கு உள்ளானோரிடமும், மானுட நேயம் மிகுந்தோரிடமும் காணலாம்,கேட்கலாம், படிக்கலாம்.

இப்படித்தான் 'மண்ணும், சொல்லும் மூன்றாம் உலகக் கவிதைகள் தொகுப்பும்.

தாங்கள் ஆங்கிலத்தில் படித்தவற்றை தமிழாக்கி தொகுத்தமைக்கு திரு. எஸ்.வி இராஜதுரைக்கும், வ.கீதாவுக்கும், 'தமிழில் படிக்கும் அற்பர்கள்' நன்றி ' தெரிவிப்பது கடமையாகின்றது.

தமிழுக்கான சிறந்த வரவுகளில் இதுவும் ஒன்றே. "தனித்துவம் மறுக்கப் பட்ட, பண்பாடு சிதைக்கப்பட்ட, மொழி வளர்ச்சி தடுக்கப்பட்ட, ஐரோப் பிய பண்பாட்டு வளர்ச்சியுடன் ஒப்பிடப்பட்டு, காட்டுமிராண்டி நிலையில் இருப்பவை என ஒதுக்கப்பட்ட" மூன்றாம் உலக நாடொன்றை சேர்ந்த என்னால் இக் கவிதைத் தொகுப்பில் என் குரலைக் கேட்கவும், என்னை அடையாளம் காணவும் முடிந்தது. உற்சாகமாயும் இருந்தது. கவிதைகளில் இச்சக மானுடருடன் கலந்து உறவு கொள்கையில் இவர்களை நேரில் சந்தித்திருக்கக் கூடாதா என்ற ஏக்கமும் மேலிட்டது.

'கொரில்லாப் போராளி கவிஞனைப் போன்றவன்( என்னும் பிலிப் பைன்ஸ் நாட்டின் ஜோஸ்மா சிசோனின் கவிதையைப் படித்த போது தெரிந்த மானுடன் ஒருவனாகுதல் இருந்தானே எனஆறுதல் கொள்ள முடிந்தது.

இத்தொகுப்பிலிருந்து இவ்விதழில் இடம் பெறும் பராக்கிரம கொடிதுவக் கின் 'நம்மில் ஒருவன்' கவிதைச் சொற்கள் நமக்குணர்த்துவதென்ன?

இப்படித்தான் இத்தொகுப்பு முழுமையும் ' சொல் 'ஒரு தன்னிகரில்லா ஆயுதமாக வடிவமைகின்றது.

மொழி பெயர்ப்பில் இத்தனை வீச்சானால், மூலத்தில்...

மொழி பெயர்ப்பாளர்கள் குறிப்பது போல் "சொல்லுக்கும் வராற்றுக்கும் உள்ள உறவு எவ்வாறு கவிதையில் வெளிப்பாடு காண்கின்றது என்பதை

மட்டுமே ஒரே அளவு கோலாகக் கொண்டு இக்கவிதைகள் தெரிவு செய்யப் பட்டுள்ளன."
இத்தொகுப்பு சமர்பிக்கப் பட்டிருக்கும் நால்வரில் ஈழத்துக் கவிஞர் சோலைக் கிளியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

O

. 'தமிழர்','தமிழ் பேசும் மக்கள்' பற்றியதான கோட்பாட்டு விளக்கங்கள் தாமதமாயினும் கடைக்கண் பார்வை பெற்றதே அம்மக்களின் பாக்யம் தான்.
இச்சொற்பதங்கள் பற்றியும், இப்பதங்கள் சுட்டும் மக்கள் பற்றியும், கவலையும் கரிசனமும் பொடியன்களிடமிருந்து அறிவார்ந்தோரிடம் தாவியுள்ளதும் ஆரோக்கியமானதே.
இஸ்லாமிய மக்களின் எதிர்காலம் அரசியல் நிகழ்சி நிரலில் முன்னிடம் வகிக்கும் இவ்வேளையில், 'புத்தளம்: வரலாறும், மரபுகளும்', நூலைப் படிக்க முடிந்தது. இன்னமும் அச்சேறாத இந்நூல் ஓரிரு மாதங்களில் வெளிவரும் என்பது தகவல். இலங்கையில் மேற்கொள்ளப் பட்ட அகழ் வாய்வுகளில் 'பொம்பரப்பி'யில் கண்டு பிடிக்கப்பட்ட வரலாற்று தடயங் கள் இலங்கை வரலாற்று வேரின் புதிய திசை என கூறுவர்.
இலங்கையில் புகழ் பெற்ற வரலாற்றாளர் பரணவிதான இதனை 'வழிந்த நாகரீகத்தின் எச்சம்' என தட்டிக் கழித்தார். சர்ச்சைக்குரிய இவ்வரலாற் றுத் தடயம் புத்தளம் அருகே தான் இருக்கின்றது.
புத்தளம் வரலாறும், மரபுகளும் நூலின் ஆசிரியர் இதனை 'பொன் பரப்பி' என பெயரிடுகின்றார்.
நூலில் வரலாற்றாளருக்குரிய காய்தல் உதவத்தல் அற்ற ஆய்வு தளர்ந்து சார்பு நிலை சற்றுத் தூக்கலாய்த் தென்படும் போதும் நூலினுள்ளான தகவல்களும், குறிப்புகளும் பயன்மிக்கவை, கவனத்திற்குரியவை.
இவ்வாண்டின் சர்சைக்குரிய நூலாய் இது விளங்கும் என எதிர்பார்க்கின் றேன்.
இந்நூல் வெளிவர முழுஉதவி வழங்கும் அன்பர்கள் வாழ்த்துக்குரியவர் களே.

O

. இளையராஜாவை எல்லோரும் அறியக்கூடும். ஆனால் பாவலர் வரதராசனை.....
Oliver Stone ன் The Doors திரைப்படம் பார்த்ததில் இருந்து இருவர் என்னுள் உழட்டுகின்றனர். ஒருவர் கவிஞர் ஆத்மாநாம். மற்றவர் பாவலர் வரதராசன்.
படத்தில் இவர்கள் இருவரின் சாயல்கள் இருந்திருக்கும். பாவலர் வரதரா சனை நான் நேரில் அறியேன். ஆனால் நண்பர் சங்கை வேலவன் எழுதிய பாவலர் சகோதரர்கள் பற்றிய நூலில் படித்திருக்கின்றேன்.
பாவலர் ஒரு பாட்டுக்காரன் - ஊரூராய் அலைந்தவர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கலைக்குழு அவர் தான். மேடையில் பாடிக்கொண்டிருந்த போதே அவர் கைது செய்யப்பட்ட போது - கம்யூனிஸ்ட் கட்சியும் அவ ரைக் கைவிட்டு விட்டது.

பாவலரின் சகோதரர் தான் இளையராஜா. பாவலரின் கலைக்குழுவில் ஆர்மோனியம் வாசிப்பவர். பெண்குரலை ஈடு செய்பவர் .இன்றைய இளையராஜாவின் 'இசை ஞானம்' அண்ணன் பாவலர் தான்.
ஆனால் தம்பியர்கள் செல்வாக்குப் பெற முன்னரே வாழ்க்கைச் சிக்கலில், நம்பிக்கைச் சிதைவில் அளவுக்கதிகமான குடி போதையால் மரணமானான் அக்கலைஞன்.
இன்றைக்கும் இளையராஜா தன் அண்ணன் பற்றி நினைவு கூருகையில் இந்தியக் கயூனிஸ்ட் கட்சியின் செயல் பற்றியும் குறிப்பிடத் தவறுவதில்லை.
பாவலரின் வாழ்க்கை அண்மைகால தமிழக சமுக அடையாளம் என்றே கருதுகின்றேன்.
சமுகத்துடன் சினிமாவை இணைக்க ஆர்வமுடையவர்கள், இவர் வாழ்க்கை பற்றியும் சினிமாவாக்குவது பற்றி முயற்சிப்பாராயின்...

O

. 'மொழி இல்லாத தேசத்தார், இதயமற்ற தேசத்தவராவர்' என்பர் மொழியில் வல்லுநர்கள்.
இவ்வகையில் பல தேசத்தாரின் மொழிகள் செத்துக்கொண்டிருக்கின்றன என கவலை கொள்கின்றனர் ஐரோப்பிய மொழியியலாளர்.
இணைய இருக்கும் ஐரோப்பாவில் ஏறத்தாழ ஐம்பது மொழிகள் பேசப்படுகின்றதென்றும். இதில் 31 மொழிகள் அருகி அழியும் நிலையில் உள்ளதாயும் கண்டறிந்துள்ளனர்.
'Lesser Used Languages' என வகைப் படுத்தப்பட்டுள்ள இம் முப்பத்தொரு மொழிகளையும் காக்கும் பணியில் இறங்கியுள்ளனர் மொழியியலாளர்கள். இம் மொழிகள் அழிவுறும் நிலைமைக்கு நவீனமயமான தொடர்பு ஊடகங்களினதும், சாதனங்களினதும் வளர்ச்சியென சுட்டிக் காட்டும் மொழியியலாளர் தொலைக்காட்சியை 'மொழிகளின் எதிரி' எனக் கூறுகின்றனர்.
1992 ன் பின் இணையும் புது ஐரோப்பாவானது இவ்வகை மொழிகளில் தீவிர கவனம் செலுத்தும் வகையில் பெல்ஜியத்தில் செயலகம் ஒன்றை மொழியியலாளர்கள் அமைக்க அள்ளனர்.

நமக்கு ஒல்லாந்தென அறிமுகமான நெதர்லாண்டின் மொழியான 'Dutch' டச் அழியும் ஆபத்தில் உள்ளதாம். டச்சுக் காரன் தம் மொழியை விடவும் ஆங்கிலத்தில் தான் பரிச்சயம் அதிகமாம். உலகாண்ட டச்சுக்கு இக்கதியானால்,
நம் மொழி தமிழ்......?

---

*உங்களுக்கு !*

*. இந்த இதழில் ஆங்காங்கே ஏற்பட்டுள்ள அனாவசிய வசனமுறிவுகளுக்குக் காரணம் ஆக்கதாரர்களோ அல்லது அச்சுப்பதிப்பாளர்களோ அல்ல. Computeur இன்னும் கைக்குப்படியாமை அல்லது நாம் பாவிக்கும் Programme disk லுள்ள குறைபாடோ தான்.*

*. அப்பாடா ! இயந்திரத்தின்மேல் பழியைப்போட்டு விட்டுத்தப்பித்து விட்டோம் - இல்லையா ? அப்படியல்ல. முடிந்தவரை தவறுகளைச்சீர் செய்ய முயற்சிக்கிறோம்.*

*. "அப்ப எழுத்துப்பிழைகள் !"*

*. ....ப்ளீஸ்........*

*- ஓசை -*

---

# ஏன் ?

- நரேன்.

...."இந்த முறையெண்டாலும் நாதனை ஒழுங்காய் அனுப்பிப்போட்டு வாருங்கோ"

...."மற்றமுறையெல்லாம் ஒழுங்கில்லாமலே அனுப்பினனான் ? அதெல்லாம் அவையவையின்ரை தலையெழுத்து."

...."என்ன எழுத்தோ ? நீங்கள் இஞ்சை கேற்றைத் திறக்கமுந்தி மேன் கொழும்புக்குத் திரும்பிவிட்டாராம் எண்ட புதினம் படலையைத் தட்டாமல்விட்டால் சரி. அவன் சுவிஸிலையிருந்து ரெலிபோனில கதைச்சாப்பிறகுதான் நீங்கள் கொழும்பைவிட்டுக் கிளம்பவேணும்; சொல்லிப்போட்டன்"

.... பாதை கரை தட்டியிருக்கவேண்டும். கியூ நகர்ந்தது. கேரதீவு ஜெற்றி சூழ்நிலைக்குத் தன்னை இசைவாக்கிக்கொண்டு சிவப்பிரகாசத்தாரும் தனது பயணபாய்க்கைத் தூக்கிக்கொண்டு கியூவுடன் அசைந்தார். அந்த இயக்கத்தில் வீட்டு நினைவு நின்று போய்விட்டது.

.... "அதாரது இடேக்கை பூர்றது. நீங்க ஏமலாந்திக்கொண்டு நிக்கிறதாலைதானே பூருதுகள்"

.... கியூ சலசலத்தபோதிலும் இடையில் புகுந்தவர் வென்றுவிட்டார். தன்னை கியூவின் சங்கிலிப் பிணைப்புடன் வேகமாக இணைக்கமுடியாமற் போன தனது கவனக்குறைவைப் பயன்படுத்திவிட்ட சொருகியின்மேல் தீராத கோபம் பொங்கிப் பிரவாகித்தது சிவப்பிரகாசத்தாருக்கு.

.... "தங்களைக் கெட்டிக்காறரெண்டு நினைச்சுவிடுகினம் - இடையிலை பூந்தவுடனை"

.... சிவப்பிரகாசத்தாரும் எல்லோரையும் போல தனது கையாலாகாத்தனத்தை வார்த்தைகளில் சுமத்தி அடங்கிப் போய்விட்டார்.

.... "ஒழுங்காய் வரலாந்தானே? ஏன் கியூவைக்குழப்புவான் ? அந்தரப்பட்டுப் போய் மெயில் றெயினே பிடிக்கப்போறார்? எல்லாரையும் போலை நாளைக்குக் காலமை றெயின்தானே ?"

.... இந்த மாலை ஏழுமணிப்பொழுதில் முன்னர் மெயில் றெயினுக்கு யாழ்.புகையிரத நிலையத்தில் முண்டியடித்ததை எண்ணிக்கொண்டு போலும் பின்னாலிருந்து ஒருவர் பதில் வேண்டியிராத கேள்விகளை அடுக்கிக்கொண்டிருந்தார். 'மெயில் மலையேறி இப்ப எவ்வளவு காலம்' என்ற அங்கலாய்ப்போடு சிவப்பிரகாசத்தார் திரும்பிப் பார்த்தார் -

**சிறுகதை**

தன்னைப் பார்த்துத்தான் கேள்விக் கணைகளை வீசினாரோ என்று கேள்விகாற்றோடு கதை பேசிக் கொண்டிருந்தது. சிவப்பிரகாசத் தாரும் தனக்குள்ளே அமுங்கவிரும் பினார்.

.... வீட்டில் மகனின் பயணத்தை உறுதிப்படுத்தச்சொல்லி மனைவி கட்டாயப்படுத்தியபோது தான் கோபமாய்ப்பதில் சொல்லிவிட் டதை எண்ணி இப்போது வருத்தப் பட்டார்.

.... "நான் கேற்றைத் திறக்கிறனோ என்ரை சவம் வந்து கேற் திறப டுமோ ஆர் கண்டது? இல்லை, அவர்பயணம் போறாரோ நான் சிவலோகம் போறேனோ ஆர் கண் டது ?"

.... "என்னத்துக்கிப்ப உந்தக்கதை யள் கதைக்கிறியள். பயணம் வெளிக்கிடிற நேரம் கதைக்கிற கதையளே உதுகள் ?"

.... "பின்னை என்ன ? நான் என்ன ண்டு கேரதீவு பாலம் தாண்டப் போறன், எப்படி வவுனியாக்காட் டுக்குள்ளாலை ஏழெட்டுமைல் நடக்கப்போறன் எண்ட ஏக்கத் திலை கிடக்கிறன் நான். அந்த நேரம் பாத்தே நீ உன்ரை மோனின்ரை கெட்டித்தனத்தைச் சொல்லவேணும் ?"

.... "சரி, சரி ஏனிப்ப ரண்டுபேரும் சண்டைபிடிக்கிறியள் ? முதல்தரம் தம்பி எயர்போட்டலை இருந்து திரும் பினது அடுத்தமுறை எயர்போட் டைத் தாண்ட ஒரு அனுபவமாய் இருந்திச்சு. ரண்டாம் முறை சுவிஸ் போடரிலையிருந்து திரும்பியிருக் கிறான். அந்த அனுபவத்திலை இனி சுவிஸ் போடரைத் தாண்டிவிடு வான் தானே, இதிலை தம்பி யின்ரை கெட்டித்தனமும் ஒண்டுஞ் செய்யஏலாது, ஏஜென்சியின்ரை கெட்டித்தனமும் ஒண்டுஞ்செய்ய ஏலாது - எல்லாம் ஒரு அதிர்ஷ்டந் தான்"

.... "இப்ப எனக்கு வவுனியா போடரை ஒரு எத்திலை தாண்ட முடிஞ்சா, அந்த அதிர்ஷ்டத்துக்கு முன்னாலை ஒரு அதிர்ஷ்டமும் நிக்கேலாது"

.... "என்னப்பா செய்யிறது ? இயக் கதுத்துக்குப் போய்விடலா மெண்டா எனக்கும் தம்பிக்கும் வயசு போடர் தாண்டிப் போச்சு. இருபத்தேழிலையும் இருபத்தைஞ் சிலையும் நிக்கிறோம். இப்ப உள்ள நிலைமையிலை எங்கட குடும்பப் பிரச்சனையைத் தீர்க்க தம்பி வெளியிலை போகத்தான் வேணும். அதுக்காக நீங்கள் கொஞ்சம் கஸ்ரப் படத்தான் வேணும்"

.... மீண்டும் பாதை கரைதட்டியிருக் கவேண்டும். சிவப்பிரகாசத்தார் பாய்க்கைத் தூக்கிக்கொண்டு முன் டியடித்தார். இப்போது அடுத்த பாதையில் ஏறக்கூடிய போடரில் தான் நிற்கும் அதிர்ஷ்டத்தை எண்ணி மகிழ்ந்தார். யாரும் சிலர் இடையில் புகுந்துவிட்டால் அநே கமாய் அடுத்தமுறையும் உள்ளே போகமுடியாமற் போகலாம். நல்ல வேளையாக ஒரு கெட்டிக்காறரும் இத்தடவை வரவில்லை.

.... பாய்க்கைக் கீழே வைத்துவிட்டு வீட்டு நினைவுகளைத் தலையில் ஏற்றிக்கொண்டார் சிவப்பிரகாசத் தார்.

.... "மகள் சமாதானப்படுத்திய தோடு சாந்தமடைந்து, சந்தோ ஷத்தை வரவழைத்துக்கொண்டது நல்லதாய்ப் போய்விட்டுது. இல்லையென்றால்திரும்ப வீட்டுக் குப் போய்ச் சேரும் வரை நிம்மதி யிராது, மனுசியும் அந்தரப்பட்டுக் கொண்டு இருந்திருக்கும்.

.... தனது இரண்டாவது மகளின் கெட்டித்தனத்தை சிவப்பிரகாசத் தார் தனக்குள் மெச்சிக்கொண் டார். அந்தக் கெட்டித்தனத்துக்கு இவ்வளவு நாளாய் ஒரு மாப் பிள்ளை கிடைக்கவில்லையே ? மூத்தவளுக்கு உத்தியோகத்தில் இருந்தபோது கட்டிவைத்து விட் டது போல இளையவளுக்கும் கல் யாணத்தை முடித்துவிட்டிருக்கவே ண்டும்.

.... எப்படி முடியும் ? மூத்தவ

ளுக்கே முழு உழைப்பையும் கரைத்துக் கொட்டிய பின் எப்படி முடியும் ?

.... பென்சன் எடுத்தும் மூன்று நான்கு வருடங்கள் கடந்தோடிவிட்டன. இந்த அறுபத்திநாலு வயசில் இப்படி அவலப்பட்ட பயணத்தை ஏன்தான் கடவுள் என் தலையில் எழுதிவைத்தானோ ?

.... பயண அலுப்பில் வாழ்க்கை அவலம் இடையிட்டாலும் தன் வாழ்வை மகிழ்வூட்டும் வகையில் இளையமகள் அமைந்ததை யெண்ணி அவர் பெருமகிழ்வடையவும் தவறவில்லை.

.... பயணம் புறப்பட்டபோது வழக்கம்போல் பாய்க்கைக் கையில் எடுத்துத்தந்துகொண்டு கலகலப்பூட்டினாள் மகள்.

.... "அடுத்த பயணம் இதைவிடப் பெரிய பாய்க்கைக் கொண்டு போக வேண்டியிருக்கும்"

.... "இதோடை படப்போற பாட்டை நினைச்சு நான் தலைக்கிற மலைப்புக்கு இதைவிடப் பெரிய பாய்க் காவிறதோ? நல்ல கதை தான்"

.... "ஆனா அந்த பாய்க்கை நீங்க காவத்தேவையில்லை அப்பா; அந்த பாய்க் நடந்து வரும்"

.... "என்ன நடக்கிற பாய்க்கோ? ஆர், உன்ரை தம்பி சுவிஸில இருந்து வாங்கி அனுப்புவாரோ ?"

.... "இல்லை, தம்பி கடிதம் போடுவன்- சுவிஸிலயிருந்து, நல்ல கட்டுமஸ்தான, அழகான குணவாளனாயுமிருக்கிற மாப்பிள்ளைக்கு என்னைப்போல மணமகள் தேவையாயிருக்கெண்டு. நீங்கள் பாசல் பண்ணி அனுப்ப கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போவீங்கள். மாப்பிள்ளை பாசலைத்திறந்து பாக்க, நான் வெக்கத்தோட திரும்புவன்"

.... அந்த வார்த்தைகளும் அதற்கேற்ற அவளுடைய அபிநயங்களும் கண்டு, அப்போது சிரித்த சிரிப்பு இப்போதும் சிக்கெனப்பற்றிக் கொண்டது. அவர் தன்னை மறந்து சிரித்துக்கொண்டு நின்றதில் கியூ நகரத் தொடங்கியதை கவனிக்கத் தவறிவிட்டார்.

.... "என்ன உம்மட பாட்டிலை நிண்டு சிரிச்சுக்கொண்டிருக்கிறீர் ? கியூ போகுதெல்லே, இடையிலை ஆரன் வந்து செருகமுந்திப் போமன்"

.... "மேலை தட்டிப்போட்டுது போலை"

.... "இருக்கும். இப்ப கனசனம் இப்பிடி இடையிடைபடுகிற கஷ்ரங்களாலை அந்தந்தப்படி சிரிச்சுக்கொண்டு திரியத் தொடங்கிவிட்டினந் தான்"

.... பாய்க்கைத் தூக்கிக்கொண்டு நடக்கத் தொடங்கிய போதிலும் இந்தக்கிண்டல் வார்த்தைகள் அடங்கவில்லை. அப்படி நிலைமறந்து சிரித்துவிட்டதற்காகத் தன்னைத் தானே நொந்துகொண்டார்.

.... பர்தையடியில் கால்வைக்க இடமில்லை - ஆடுமாடுகள் அடைத்தது போல சனவெள்ளம் உயர்ந்து எழும்பிய கடலலைகள் பாதையைத் தெப்பமாக நனைத்துவிட்டன. பாய்க்கைக் கையில் காவுவது தவிர வேறுவழியில்லை.

.... ஸ்ராட் பண்ணியும் பாதை நகர மறுத்தது, முடியாமல் பாரந்தாங்கமுடியாமல் முனகியது.

.... "எல்லாரும் குந்தியிருங்கோ. அண்ணை அதிலை இருங்கோ. அக்கா உங்களையுந்தான்...."

.... பாதை இயக்குனர்கள் மீண்டும் மீண்டும் கத்தினார்கள். ஒவ்வொரு கத்தலுக்கும் ஒவ்வொருத்தர்..சில கடும் அதட்டல் குரல்களுக்குப் பத்துப்பதினொரு பேர் என்று குந்தியிருந்தார்கள்.

.... சிவப்பிரகாசத்தாருக்கு கொஞ்சம் கால்கடுப்பு. அந்த ஈரச்சகதியில் நிற்பதே சிரமமாய் தெரிந்தது. கால்களை மடித்து இருப்பதை நினைத்துப் பார்க்க முடியவில்லை. கொஞ்சநாட்களாய் இது வாதக்குணத்தின் அறிகுறியோ என்ற மனக்குடைச்சல். வயசு ஏற ஏற உடல் நோய்களின் தங்குமடம் ஆகிவிடுகிறதென சலித்துக்கொண்டவர், தான் ஒருவன் நிற்பதும் பாதகமில்லை என்றெண்ணி நின்றுவிட்டார்.

.... "அப்பு உமக்குத் தனிய ஒருக்கா கத்தவேணுமே, காத்து வேகமாய் வீசுது, நிண்டால் பாதை அசையாதெண்டல்லே குந்தியிருக்கச்சொல்லுறோம். இந்த நயின்ரியளோடை பொய உபத்திரவம்...."

.... அதற்குமேல் நிற்பதால் ஏற்படக்கூடிய அவமானம் நோயைவிடவும் கடுமையானதாயிருக்கும் என்பதால் சிவப்பிரகாசத்தார் பேசாமல் குந்தியிருந்துவிட்டார். ஒரு இரண்டு நிமிடக்கஷ்டந்தானே என்ற சுயசமாதானம். இந்த இரண்டு நிமிடக் கடற்பயணத்திற்காகத்தான் ஐந்து மணித்தியாலம் கியூவில் கால்கடுக்க நிற்கவேண்டியிருக்கிறது என்று சலித்துக்கொண்டார்.

.... பாதையிலிருந்து கரைக்குக் கால் தாவிய போது தன்னை அப்பு என்று திட்டியவனை, அவன் பாராதபோது முறைத்துப்பார்த்து விட்டு, நகர்ந்தார் சிவப்பிரகாசத்தார்.

.... 'என்ரை மூத்தவளின்ரை பிள்ளையள் கூட அம்மப்பா எண்டு தான் சொல்லுதுகள். உவன் கவுளுவான் அப்பு எண்ணிறான். என்னைப் பாத்தாக் கிழவனாயோ தெரியுது அவருக்கு?

.... மனசினுள் கறுவியவாறே வவுனியா பஸ்ஸைப்பிடிக்க வேகமாய் நடந்தார். 'நாசமாய்ப் போன பஸ் இதிலை வந்து நிண்டாக் குறைஞ்சுபோமோ ? கொழும்பிலை இருந்துவாறவையை இதிலை கொண்டந்து இறக்கும்; போறனாங்களை ஏத்த அங்கை போய் நிக்குதுகள். பஸ்ஸைத்திட்டி என்ன புண்ணியம், எல்லாம் எங்கடை தலையெழுத்து'. அலுப்பாகஇருந்தது அவருக்கு . இரண்டு மூன்று மைல்கள் என்றாலும் நடக்கவேண்டுமே?

.... பாய்க் பெரிய பாரமாய் இல்லாத போதிலும் பலமாக வீசுங்காற்றை எதிர்த்து அடியெடுத்து வைப்பதில் இருந்த சிரமம் காரணமாக உபத்திரவம் என்ற வெறுப்பைத் தூண்டியது. பேசாமல் கடலில் வீசிவிட்டு நடக்கலாம் போல் இருந்தது. 'அந்த அரிசிப்பொரிமாவை பாய்க்குக் குள்ளை வைக்கேக்கை கத்தினான், கேட்டாளே பாவி ? இந்த அரிசி மாவிலை மேனை வளைத்துப் போடுவாவாம். பாய்க்கிலை அது தான் கல்லுப்போலை கனக்குது?

.... 'எண்டாலும் அதை அவனிட்டை எடுத்துக்குடுத்து சாப்பிடு எண்டு சொல்ல, கடைச் சாப்பாட்டிலை மரத்துப்போன நாக்கிலை இதை அவன் எடுத்துத் தடவிச் சப்புக்கொட்டேக்குள்ளை எனக்கும் ஆனந்தமாய்த்தானிருக்கும்! அந்தச் சுகத்தை தன் உடல் பூராக நிறைத்தவாறு, கூடியவரை வேகத்தை அதிகப்படுத்தி நடந்தார்.

.... ஒரு மாதிரி மினி பஸ்ஸில் ஏறி அமர்ந்து நெருக்கியடித்த சீற்றில் சாய்ந்தவர்தான்; தன்னை மறந்து தூங்கிவிட்டார். விடிந்தபோது தான் மினிபஸ் புளியங்குளத்தில் கொட்டில் கடையொன்றின் அருகே தங்கிக்கொண்டிருப்பதைக் கண்டார். சக பயணிகள் காலைக் கடன்களை முடிக்கக் கிளம்பிவிட்டதைப் புரிந்துகொண்டவராய், அவசர அவசரமாய்க் கடையில் ஒருயொக்குத்தண்ணி வாங்கித் தானும் காலைக்கடன்களை முடிக்க விரைந்தார்.

.... அப்போதுதான் பொறி தட்டியதுபோல காற்சட்டைப் பொக்கற்றினுள்ளே மறைவில் வைத்த ஒரு லட்சத்தின் நினைவு நெருட, அதிர்ந்து போய்விட்டார், உத்தியோகம் செய்த காலத்தில் பயணம் செய்ய வாய்ப்பிருந்தாலும் ஊருக்கு மணியோடரில் காசை அனுப்பிவிட்டுப் பின்னால் வெறுங்கையோடு

வீட்டுக்குவந்து பழக்கப்பட்டவர் அவர். இப்போது, போன கையோடு ஏஜென்சிக்குக் கட்டவேண்டும் எண்டு சொல்லி மனிசி ட்ராவ்ட் எடுக்கவிடமுடியாதென்றுவிட்டாள். மடிகனத்தால் மனிசி மீதே கோபம் பொங்கிவந்தது. மடியைத் தொட்டுப் பார்ப்பதை யாரும் கண்டுகொண்டால் காசிருப்பதை அறிந்துவிடுவார்களே ? சுற்றுமுற்றும் பார்த்து, யாரும் கவனியாத வேளையில் தட்டிப்பார்த்தார். நிம்மதிப் பெருமூச்சுடன் நடந்தார்.

...."இரண்டரை லட்சம் முதலே கட்டியாச்சே, பேந்தும் ஏனாம் ஒரு லட்சம்"

.... "அதப்பா....தம்பி விளக்கமாய் எழுதியிருக்கிறான்தானே ? பிறகேன் துள்ளுறியள் அப்பா ?"

.... "திரும்பி வந்தாலும் அனுப்பிற முழுப்பொறுப்பும் தங்களோடையெண்டு ஏஜென்சி சொன்னவனல்லே ?"

.... "பாங்கொக்கிலையிருந்து திரும்பியிருந்தா தாங்கள் பொறுத்திருப்பினமாம். இப்ப சுவிஸ் போடரிலையிருந்தெல்லே தம்பி திரும்பியிருக்கிறான்."

.... "ஓ..சுவிஸ் போடர் காட்டினதுக்கு ஒரு லட்சம் ரூபாவோ ? ஒரு முப்பதாயிரத்தோடை பார்த்திருக்கலாம் !"

.... "ஏனப்பா, முப்பது ரூபாடிவலை பாக்கிற வவுனியா போடரைப் பாக்க ஆயிரம் ரூபாஎண்டா இதுவுஞ் சரிதானே ?"

.... அப்பவ விழுந்து விழுந்து சிரித்தார். இப்போது கஷ்ரப்பட்டு அடக்கிக்கொண்டார். அப்படியிருந்தும் இதழ்க்கடைக்கோடியை இழுக வைத்துவிட்டதை யாரும் பார்த்திருப்பார்களோ என்று கடைபூராவையும் துளாவிப்பார்த்தார். நல்ல வேளை, இன்னொருதரம் 'அலையிறது' பட்டம் வாங்கிக்கட்டாமல் தப்பிவிட்டோம்.

.... எழுபத்தைந்து சத தேநீருக்கு மூன்றுரூபா கொடுத்து, குடித்த போது ஏற்படுத்திய உற்சாகத்தையும் வெறுப்பாக மாற்றிக்கொண்டு மினிபஸ்ஸை நோக்கி நடந்தார்.

பாஸ் விபரம் பதியும் இடத்தில் பெரும் சுணக்கம் ஒன்பது மணிக்கு மேல்தான் பதிவு முடிந்து மீண்டும் பஸ்ஸில் ஏறமுடிந்தது. இன்னும் முந்திப் பதிந்துவிட்டிருந்தால் வெய்யில் ஏறமுந்தி காட்டைக் கடந்திருக்க முடியும்.

.... அங்கிருந்து இரண்டு மைல் தூரங்களுக்கு மினிபஸ்ஸில் போகமுடிந்தது. தொடர்ந்து இந்த பஸ் வவுனியா றெயில்வே ஸ்ரேசன் வரை போகலாம் எண்டு சொல்லி, அங்கைவரை கொண்டுபோய் விட்டால், எவ்வளவு பெரிய அதிர்ஷ்டமாயிருக்கும் ? சீ, அதெல்லாம் புராணக் கதையள்ளைதான் திடீரெண்டு கடவுள் வந்து 'இந்த பஸ் நேரே ஸ்ரேசன் வரை போக்கடவது' எண்டு சொல்லிறது சாத்தியப்படும். இது கலிமுத்தி எங்களை வருத்திற காலம் !

.... பஸ் நின்றது. பாஸ் கொடுக்கவேண்டிய இடத்திற்கு இன்னும் ஒரு மைல் போகவேண்டும்.

.... "ஐயா பாஸ் குடுக்கிற இடம் வரை கொண்டு போய் சயிக்கிள்ளை விடலாம். ஏறுங்கோ"

.... 'இப்பிடி ஆரும் புண்ணியத்துக்குக் கேட்டால் எப்பிடி இருக்கும்'

.... "எவ்வளவு ?"

.... "எழுபது ரூபா"

.... ஐம்பதுக்குக் குறைய வரமாட்டான். வேண்டாம். மெயின் றோட்தானே, இலேசாய் நடந்து போய் விடலாம்.

.... பாஸைக் கொடுத்தார் -கூடவே பஸ் கனவுகளையும் சேர்த்துக் கையளித்தார்.

.... "ஆத்தைக்கடந்து, சென்றி வரை கொண்டுபோறன்; வாருங்கோ ஐயா ! ஐநூறு ரூபா...நானூறு ?.. சரி முந்நூறு !"

.... "எனக்கு ஆத்தையும் தெரியும் சென்றியையும் தெரியும். நூறு ரூபாவுக்கு வருவியே?"

.... "வேற ஆரையும் பாரும் !நூறாம் ..நூறு"

அவருக்குத் தெரியும், வேறெவரும் வரமாட்டார்கள். ஒரு பயணியையும் கொடுக்கமுடியாவிட்டாலுங்கூட இருநூறு ரூபாவுக்குக் குறைய சம்மதிக்கமாட்டார்கள்.

.... ஆறென்ன ஆறு ? பாதத்தை நனைக்கமாட்டாத தண்ணி. 'செங்குத்தாயிறங்கி ஏறவேணும்' என்று சைக்கிள் நாட்டாமைகள் மலைப்பது சிரிப்பைத்தான் தந்தது. கொஞ்சம் சிரமந்தானென்றாலும் அவரென்ன தோளிலை ஏத்திஇறக்கப் போறாரோ ? பாய்க்கை வாங்கி' வேரைப்பிடிச்சுக்..கவனம்..கவனம் ? எண்ணுவர். போனமுறை கொழும்பிலிருந்து திரும்பியபோது ஏமாந்த அனுபவம், சிவப்பிரகாசத்தாருக்கு.

.... ஆறு கடந்தால் ஒரு நாலைந்து மைல் - அதற்கு இருநூறு ரூபாவைக் கட்டி அழுவது அதமமாகப் பட்டது. அதிலும் முதல் மூன்று மூன்றரை மைல்கள் சைக்கிளில் ஏறி ஓடமுடியாது. காய்ந்த வயற்களித்தரை. பள்ளமும் பிட்டியும். பாய்க்கை சைக்கிளில் கட்டி உருட்டுவதால் பாய்க் பாரம் மட்டும் குறையும். அதுக்கேன் இவ்வளவு காசைக் குடுக்கவேணும்?

.... மடியில் அவ்வளவு காசை வைத்துக்கொண்டு இருநூறு ரூபாவுக்கு நப்பித்தனமா என்றும் யோசித்தார்.

.... கடைசியாய்க் குடியிருக்கிற வீடுவளவையும் ஈடுவைத்துக் கடும் வட்டிக்குப் பெற்ற அந்தப்பணம் இந்த இடத்துக்குப் பெறுமதியற்றது தானே ? அது ஏஜென்சிக்கோதாரியிலை வாய்க்கரிசி போவேண்டியது. அதையும் கொண்டு போய்க் கொடுத்து அந்த ஏஜென்சியின் பல்லைப் பார்த்த பிறகு தானே நிம்மதி.

.... நடக்க நடக்க இயலாமை விசுவருபம் எடுத்து வளர்ந்து உடலை அழுத்தியது. அப்படியிருந்தும் ஆமிச் சென்றியில்,

....."இருநூறு ரூபா, ஆமிப்பாஸ் பதியிற இடம் வரை கொண்டு போய் விடலாம் - ஐயா பாய்க்கைத் தாருங்கோ என்றபோது எரிச்சல் தான் வந்தது. சொற்ப தூரம், சைக்கிள்கூட இல்லை; இந்தச் சின்ன பாய்க்கை வாங்கிக்கொண்டு 'கொண்டு போய் விடப்போறாராம்'!

.... ஏற்கனவே உடல்சோர்ந்து தள்ளாடத் தொடங்கிவிட்டது. ஆயினும் பாய்க்கைக் காசு கொடுத்து தூக்கவைப்பதற்கு அவர் மனம் இடம்தர மறுத்தது. இதற்கு நூறு நூற்றைம்பது கொடுப்பதைவிட காட்டைக் கடந்துவர இருநூறென்ன முந்நூறும் கொடுத்திருக்கலாம் என எண்ணினார்.

.... பாய்க்கை சற்று நேரம் றோட்டில் . வைத்துக் களையாறிவிட்டு மீண்டும் நடைதொடர்ந்தது. குந்தியிருக்கக்கூட இடமில்லை. நடை பெரும் சிரமமாய் தெரிந்தது ; நீட்டி நிமிர்ந்து படுத்தால் நிம்மதியாய் இருக்கும். ஆமியிடம் பாஸ் பெறும் இடத்திற்குப் போனால் சற்று ஆறலாம். அதற்குமுன் நா வறண்டது. கால்கள் இறுக்கமடைந்து, தசை நார்கள் விண் விண் என்று வலிக்கத் தொடங்கிவிட்டன.

.... போதாக்குறைக்கு வெய்யிலும் உச்சந்தலைக்கு ஏறிக்கொண்டிருந்தது. பதின்ரண்டு மணிக்குள் போகவில்லையே என்றால் ஆமி செக் பொயின்ரில் இருந்து திரும்பி வரவேண்டி நேரும். றெயினைத் தவற விடுவது இருக்கட்டும், செக் பொயின்ரினுள் நுழைய முடியாமல் திரும்புவதிலுள்ள வேதனையை நினைத்துப் பார்க்கமுடியுமா ? இந்த எண்ணம் உந்த நடைவேகத்தைக் கூட்ட முயன்றார்.

.... இன்னும் சொற்ப தூரம். இதோ ஆமியின் செக் பொயின்ற். போய்ச் சேர்ந்துவிடலாம். சைக்கிள்களுக்கு காசு கொடாமல் பதின்ரண்டு மணிக்குள் வரமுடிந்ததை எண்ணி மகிழ்ந்தார். காசைப் பத்திரமாய்க் கொண்டு போய் கொழும்பில் சேர்க்கவேண்டும்; இங்கே கரைக்கமுடியுமா ?

.... கண்களை என்ன மறைத்து மறைத்துவிலகுவது ? உச்சி கொதிக்கையில் இருளா ? கால்கள் பெயர மறுக்கின்றனவே? முழுப்பலமும் ஒருங்குகூட்டிக் காலைத்தூக்கினார் - எங்கே , எங்கே வைப்பது ? தரை எங்கே ?

.... முன்னே வேகமாய் விலத்திப் போனவர்கள் தாங்கிப்பிடிக்க முயல்கின்றனரோ ? பிடித்தால் நல்லது தான். உடல் விறைத்து விழுந்துகொண்டிருக்கிறேன் போலும். கண் இமைமூடியதாய்த் தெரியவில்லை - பின் ஏன் இந்த இருட்டு ? வாயைமூட முடியவில்லையா ? எங்கோ ஆழ்ந்த கிணற்றினுள் மூழ்கியபடியா ? எங்கோ தொலைவில் சிங்களக் குரல்கள் சூழ்வது ஆமிக்காறரும் அருகிலா ?
.... "இப்படித் தள்ளாத வயதில் ஏன் பயணம் செய்யவேண்டும் ?"

.... இதைக் கேட்டதும் மங்கலாய்; பதில் சொல்ல நினைத்தும் நா அசைய மறுக்கிறது. அந்த ஒரு லட்சம் பணம்....மகன் பயணம்.... இளைய மகளின் திருமணம்....?
.... அந்த நினைவுகளையும் தொலைத்தவாறு எண்சாண்கிடையாக சிவப்பிரகாசத்தார்....

ஜூலை 91
நரேன்.

## கிடைக்கப்பெற்றோம்.

'மனிதம்'
POSTFACH. 12
3000 BERN. 11
SWITZERLAND.

'அ.ஆ.இ'
POST BUS 85326
3508 A H UTRECHT
NEDERLAND.

'சுவடுகள்'
HERSLEBS GATE 43,
0578, OSLO 5
NORWAY.

'தூண்டில்'
SUDASIEN BURO
GROSSE HEIM STR.58
4600 DORTMUND 1
GERMANY.

'செம்பதாகை'
43, VANERVERT PLACE
DEHIWALA, SRI LANKA.

'நான்காவது பரிமாணம்'
P.O.BOX 2031
STATION C
DOWNSVIEW
ONTARIO
M3N 2S8, CANADA.

'அருவி'.
P.O.BOX. 1354
COLOMBO - 1
SRI LANKA.

'பனிமலர்'
BCM POLARIS
LONDON WC1N 3XX
U.K.

'மரபு'
ABIRAMIE PUBLICATIONS,
P.O.BOX 232,
WANTIRNA SOUTH,
VICTORIA 3152,
AUSTRALIA.

'உயிர்ப்பு'
BM BOX 4002
LONDON
WC1N 3XX
U.K.

'தேனீ'
IM WACH HOLDER 11,
7151 ALLMERSBACH IMTAL,
GERMANY.

'சரிநிகர்'
6,ALOE AVENUE,
COLOMBO-3, SRI LANKA.

'சமர்'
BOITE - 188,
BAT E,
150 RUE LEOPOLD RECHOSSIERE,
93300 AUBERVILLIERS,
FRANCE.

'சக்தி'
BOKS 127,
1432 AAS - NLH
NORWAY

நன்றி

# ○ காக்கை நாய்ச்சவாரி

○ - சோலைக்கிளி.

ஒவ்வொரு காகமும் இப்படிமாறவேண்டும்
ஒவ்வொரு நாயும் இப்படி உதவவேண்டும்

தான் கடிக்கும் எலும்பை தன் தோழனுக்கு கொடுக்கவேண்டும்
நாய்
தான் கொத்தும் பிணத்தை தனது நண்பனுக்கு வழங்க வேண்டும்
காகம்
அருமை
அற்புதம்
அழகு

இந்த மனிதன் வெட்கப்படவேண்டும்,
மனிதம் இவைகளிடம் இருக்கிறது
பொருத்ததமுடியாத இரு ஜீவராசிகள்
பொருந்திக் கொண்ட வியப்பில்,
சேவலுடன் கூடிவிட்டு குளிக்கமுடியாமல் நீரின்றி இருந்த
குருவி
ஆனந்தக் கண்ணீர் விட்டே
அதனை அது நீராட்டிக் கொள்கிறது

இன்னும் நாய் போகிறது
அதன் தோளில்
இன்னும் காகம் இருக்கிறது

இது உலக சமாதானம் ஏற்படும் சகுனமா!
மனித அழிவுகள் நிற்கும் நேரமா!

ஓராயிரம் காகங்கள் பாடி மகிழட்டும்
பல்லாயிரம் நாய்கள் குரைத்துக் களிக்கட்டும்

ஒரு கவிஞன்
அது நான் தான்,
தினமும் கண்ணீர் விடுகிறேன்
மனித அழிவுகளுக்காக
இந்தக் காக்கை நாய்ச் சவாரி
திருப்தி தருகிறது
பார்க்க.

# ○ அன்னியப்பூனை.

○ - சோலைக்கிளி.

ஓர் அன்னியப் பூனையைப் போல் வளவுக்குள் நுழையாதே!
வளர்ப்பு நாயாய் வா.

ஒற்றுமையே! ஊர்முழுக்கத் தேடுகின்ற ஒற்றுமையே!
வா!
என்னைக் கட்டிப்பிடி!
கொண்டாடு!

நாக்கை வெட்டி எறிந்தால்
அவன் துடிக்கட்டும்.
என் தோலில் எறும்பு கடித்தால்
அவன் துடிக்கட்டும்.

என் தலையில் ஏறி என்னை வழிநடத்து.
ஒற்றுமையே! ஊர்முழுக்கத் தேடுகின்ற ஒற்றுமையே!
என் நரம்புக்குள் புகுந்து ஏற்கனவே படிந்துள்ள
ஒட்டறையைத் துடை.

நீ வரத்தானே என் வாசலில் பூமரங்கள் நட்டுள்ளேன்.
என்றோ ஒருநாள் நீ வருவாய் என்றேதான்
அந்த மரங்களில் குருவிகளை வளர்க்கின்றேன்.
ஒவ்வொரு காலையிலும் உனது நினைவாய்த்தான்
பழுத்த இலைகளை இடுங்குகிறேன்.
உன் வரவை எதிர்பார்த்தே
நாளை விரிய இருக்கின்ற கன்னிகளை
ஆட்டிப் பார்த்து நேரத்தைத் தொலைக்கின்றேன்.

வா!
தொலைந்த மனிதனது ஒற்றுமையே
வந்து,
குயில் போல கூவு.
காய்கள் பழுக்கட்டும்.
அவற்றின் விதை விழுந்து மரங்கள் மீண்டும்
மீண்டும் மீண்டும்
மண்ணில் முளைக்கட்டும்.
அந்த மரங்களின் கிளைகளில் நான் ஒரு நாள் ஏறித் தொங்குவேன்.

# உங்களோடு........

வணக்கங்கள்.

மூன்றாம் ஆண்டின் முதல் இதழ்.
என்ன! ஆச்சரியமாக இருக்கின்றதா?
எமக்கும் கூடத்தான். ஆனால் உண்மை.

இந்த இதழ் சற்றுத் தாமதமாகவே வருகிறது.
Computer 'இயந்திரம்' கொடுத்த சிரமம் எழுத்தில்
விபரிக்க முடியாதது. அதுவும் ஒரு காரணம் தான்.
நிதி நெருக்கடி. ஈடுகொடுக்க முடியாமல்,
இதழை நிறுத்துவோம் எனவும்,
-கிட்டத்தட்ட- முடிவுக்கு வந்தோம்.

ஆனால், வந்திருந்த ஆக்கங்களும், வாசகர்களது எதிர்பார்ப்புகளும், இல்லை! 'ஓசை'யை நிறுத்துவதற்கு உங்களுக்கு அதிகாரம் இல்லை என்ற தோரணையில் வெருட்டின.
சில நண்பர்கள், முடிந்தவரை கைகொடுக்கிறோம் என்றனர். இருந்த போதும் 'வலிதான்'.
தொடர்கிறோம்.......

இலங்கை இந்திய எழுத்தாள-வாசகர்களது உற்சாகமான ஒத்து ழைப்பு - வரவேற்பு எம்மை நெகிழ வைக்கின்றது.
எமது தேசத்துடனான தொடர்புகள் இறுக இறுக
நெஞ்சு மேலும் மேலும் கனமாகின்றது.

எம் தேசத்து எழுத்தாளர்கள், அவர்களது படைப்புக்கள் ஊக்குவிக் கப் படல் வேண்டும்!.
தீராத எம் உள்ளக் கிடக்கை
கனவுகளாய் விரிய,
'முஞ்சூறுகளும் விளக்குமாறுகளும்' நினைவுக்கு வந்து போகின்றன.
இருந்த போதும், முடியும் என்ற நம்பிக்கையோடு
உங்கள் ஒத்துழைப்பையும் நாடி,
'ஓசை' தளம் விரிக்கின்றது.
முடிந்தவர் கால் பதிக்க, தோள் கொடுக்க,
முடியாதோர் முயற்சிக்க.

நன்றி.

-ஓசை-



'இந்த ஜப்பானியர்களுக்கு ஏன் ஜப்பானின் மதிப்பின்மீது நம்பிக்கையில்லை?

வெளிநாட்டுவிசயங்களையெல்லாம் உயர்த்தியும் ஜப்பானிய விசயங்களையெல்லாம் தாழ்த்தியும் மதிப்பீடுசெய்யும் இந்தச்செயலை இவர்கள் ஏன் செய்கிறார்கள்? உடாமாரோ (Utamaro),ஹோகுசாய் (Hokusai) மற்றும் ஷராகு (Sharaku ) பிரதேசங்களில் மர அச்சுக்களால் துணிகளை பிரிண்ட் செய்யும் முறையின் கலைநயத்தைக்கூட மேற்கத்தைய நாடுகள் கண்டுபிடித்துச்சொல்லும்வரை ஜப்பானியர்களால் உணர்ந்து பாராட்டமுடியவில்லையே ! இத்தகைய மதிப்பீட்டுக்குழப்பத்தை என்னால் எப்படிப்புரிய வைக்க முடியுமென்று தெரியவில்லை. என் மக்களின் இந்தத்தன்மையைக்கண்டு மனம் சோரத்தான் முடிகிறது.

- அகிராகுரோசாவா -
ஜப்பானியத்திரைப்படமேதை.

